நிறுவனர் : நா.மகாலிங்கம்

நவம்பர் 2021

# ஓம் சக்தி

கலை, இலக்கிய, ஆன்மிக மாத இதழ்

₹15/-

## தீபாவளி சிறப்பிதழ்!



# அன்புடன்...

**அ**னைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!

ஓம்சக்தி தீபாவளிச் சிறப்பிதழாக மலர்ந்திருக்கிறது. வழக்கமாக தீபாவளி சிறப்பு மலராக வெளி வரும் ஓம்சக்தி, இந்த வருடம் மட்டும் தீபாவளிச் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. ஆனாலும், ஆசியுரை, கவிதை, நெடுங்கதை, சிறுகதை, கலை என்று ஒரு மலருக்கு உரிய அத்தனை பகுதிகளும் இடம் பெற்றிருக்கின்றன.

இந்த வருடம் வள்ளலாரின் 200-வது அவதார தினம் தொடங்குகிறது. அதை முன்னிட்டு ஓம்சக்தி அக்டோபர் இதழில் கட்டுரையும் வெளியிட்டிருந்தோம். அது முக்கியமல்ல, வள்ளலாரின் அவதார தினத்தன்று மாண்புமிகு தமிழக முதல்வர், வள்ளலாரின் பிறந்த தினமான அக்டோபர் 5-ம் தேதியை, 'தனிப்பெருங்கருணை நாள்' என்று அறிவித்திருப்பதுதான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வருக்கு வாழ்த்துகளையும் நன்றிகளையும் ஓம்சக்தி சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த இதழில் ஓம்சக்தி வாசகர்களுக்காக தருமபுரம் ஆதீனம் 27-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் அருளிய ஆசியுரை இடம்பெற்றிருக்கிறது. கட்டுரையின் இறுதியில் இருக்கும் QR - code-ஐ ஸ்கேன் செய்து வீடியோ வடிவிலும் கண்டு மகிழலாம்.

கல்லில் கலைவண்ணம் மட்டுமல்ல இசைநயத்தையும் கொண்டு வரமுடியும் என்பதற்கு நிதர்சன சாட்சியாக கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரர் கோயிலில் இருக்கும் கல் நாதஸ்வரம் பற்றிய கட்டுரையும், கல் நாதஸ்வர இசையைக் கேட்டு ரசிக்க வீடியோவின் QR - code இணைப்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இது போன்ற டிஜிட்டல் வடிவங்களிலும், ஓம்சக்தியில் இடம் பெறும் கட்டுரை மற்றும் பேட்டிகள் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்னும் சில மாதங்களில் 40-வது ஆண்டில் அடியெடுத்து வைக்க விருக்கும் ஓம்சக்தி இதழின் சார்பாக அனைவருக்கும் மற்றுமொரு முறை தீபாவளி வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- பொறுப்பாசிரியர்



தீபாவளி சிறப்பிதழ்

# இருள் நீங்கி ஒளி பிறக்கட்டும்!

**நன்று நாடொறும் நம்வினை போயறும்**
**என்று மின்பந் தழைக்கவி ருக்கலாம்**
**சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை**
**துன்று பொற்சடையானைத் தொழுமினே**

எல்லாம்வல்ல செந்தமிழ் சொக்கநாத பெருமானுடைய திருவருளை யும், தருமையாதீன குருமணிகளையும் சிந்திக்கிறோம்.

அன்பர்கள் அனைவருக்கும் ஓம்சக்தி மாத இதழ் மூலமாக தீபாவளி நல்வாழ்த்துகளை நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறோம். தீபம்+ ஆவளி என்று இரண்டாகப் பிரித்தால் தீபங்களை வரிசையாக வைத்து விளக்கேற்றுவது தீபாவளியென்று கொண்டாடப்படுகிறது. வடநாடுகளி லேயும் இது மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. வரலாற்று, புராண வழியிலே சிந்தித்தோமேயானால் நரகாசுரன் என்கின்ற அசுரன் இறைவனை தியானித்து தவமிருந்தான். வரங்கள் பெறுகின்ற வரைக்கும் அவர்களைப் போன்று கடுந்தவங்கள் செய்தவர்கள் யாரும் இருக்க முடியாது. அந்தக் கடுந்தவங்களின் காரணமாக இறைவன் – அவர்கள் எந்த மூர்த்தியை வழிபாடு செய்கிறார்களோ அவர் இறங்கி வந்து அவருடைய தவத்திற்கு அனுக்கிரகம் செய்வார். அந்த வகையிலே நரகாசுரன் வரம் பெற்றான். அவன் யாராலும் எப்போதும் அழியக்கூடாது என்ற வரம் பெற்றான். எந்த ஒரு ஆன்மா பிறக்கின்றதோ அது அழியும் தறுவாயில்தான் உள்ளது. அப்படித் தான் நம்முடைய சைவ சித்தாந்தம் சொல்லுகின்றது.

அந்த வகையிலேதான் அவன் வரம் பெறுகிறான். வரம் பெற்ற பிறகு ஈரேழு லோகத்தில் உள்ள தேவர்களையெல்லாம் துன்புறுத்து கிறான்.அப்போது காத்தல் தொழிலை புரிகின்ற மகாவிஷ்ணுவிடம் தேவர்கள் முறையிட்டனர். அவர்களின் வேண்டுகோளின்படி, அமாவாசைக்கு முதல் நாளான சதுர்த்தசி திதியிலே நரகாசுரனை வதம் செய்கிறார். அப்போது நரகாசுரன் மகாவிஷ்ணுவிடம், “இறைவா, இதுவரை நான் அனைவரையும் துன்புறுத்தி வந்தேன். இனிமேல் அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும். நம் மூதாதையர்க்குத் திதி கொடுப்பது போலவே, நான் இறந்த இந்த நாளிலே மக்கள் அனைவரும் எண்ணெய் தேய்த்து குளித்து புத்தாடைகளை அணிந்து, வெடி வெடித்து மகிழ்ச்சியாக கொண்டாட வேண்டும்” என்று வரம் கேட்கிறான்.

ஆகையினால்தான் நாம் அனைவரும் அன்றைய தினத்தில், விடியற்காலையில் எழுந்து மகாலக்ஷ்மி வாசம் செய்யும் நல்லெண்ணெயை தலையில் தேய்த்து, கங்கா தேவியால் ஆவாஹணம் செய்யப்பட்ட வெந்நீரில் நீராடி புத்தாடைகளை



# ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் ஆசியுரை

அணிந்து கொள்ள வேண்டும். இதைத்தான் அனைவரும் "கங்கா ஸ்நானம் செய்தீர்களா" என்று கேட்கின்றனர். இத்தகைய தீபாவளி பண்டிகை மிகவும் சிறப்பிற்குரியது.

**'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாந் தலை,**

என்கின்ற வகையிலே நம்முடைய பண்பாடு அடுத்தவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து உண்ண வேண்டும் என்று நமக்குச் சொல்கிறது. ஆகையினால்தான் யாவர்க்குமாம் ஒரு பிடி என்று நம் திருமூலர் அருளிச் சொல்லியிருக்கிறார். அந்த வகையிலே நாம் பட்சணங்களை பகிர்ந்து கொள்கிறோம். யாவர்க்குமாம் என்பதற்கு எல்லா சமயம், மதம் கடந்தவர்கள் என்று பொருள். பட்சணங்களை செய்ய முடியாதவர்கள்கூட கடையில் இருந்து வாங்கி வந்து இறைவனுக்கு படைத்து, அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்து தீபாவளியை கொண்டாடுகின்றனர். அப்படி புராண வகையிலே இந்தத் தத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது.

அதனுடன் நம்மைச் சார்ந்து இருக்கின்ற இருள், அதாவது ஆணவம், கன்மம், மாயை போன்ற மும்மலங்கள், ஆறு பகைகள் இவைகளை ஒழித்து, நல்ல ஒளி பிறக்க வேண்டும் என்பதனால் தான் இந்த தீபாவளி விழாவைக் கொண்டாடுகின்றோம் என்று தத்துவங்கள் கூறுகின்றன. அந்த வகையிலே இந்த தீபாவளி நன்னாளிலே ஓம்சக்தி மாத இதழ் மூலமாக அன்பர்களுக்கு நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மத்தாப்பு, வெடி இவற்றின் வெளிச்சத்திலே நாம் மகிழ்ந்து இருப்பது போல், வாழ்வின் எல்லா நாளும் மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டும். நல்லார் இணக்கம் பெற்று வாழ்வதற்கு இந்த தீபாவளி பண்டிகை முன்னுதாரணமாக அமைந்திருக்கிறது. வரலாற்றுப் பூர்வமாகவும், புராண பூர்வமாகவும் அமைந்திருக்கின்ற இந்த விழாவிலே அனைவரும் நலம் பெற்று, இன்பமுடன் வாழ வேண்டும் என்று ஆசீர்வதிக்கிறோம்.

இங்கு கொடுக்கப் பட்டுள்ள QR- code - ஐ ஸ்கேன் செய்து குருமகா சந்நிதானத்தின் ஆசியுரையைக் கேட்டு மகிழுங்கள்


வீடியோ உதவி: ஆர்.சனத்குமார், எஸ் எல் என் டெலிவிஸ்டாஸ்

தீபாவளி

ஆன்மிகம்

● லக்ஷ்மிதரன்
● ஓவியம்: ஸ்யாம்

# இந்தப் பயணத்தின் முடிவில்...



ஸ்ரீ கிருஷ்ணன் தேரில் அமர்ந்திருக்க, ஒரு பெண் தேரின் சாரதியாக அமர்ந்தபடி தேரைச் செலுத்தத் தொடங்குகிறாள். பார்த்தனுக்குச் சாரதியாக அமர்ந்த அந்தப் பார்த்தசாரதிக்கே சாரதியாக ஓர் அழகுப் பெண்ணா?

யார் அந்த எழிலார்ந்த பெண்? அவள் ஊர் என்ன? பெயர் என்ன? அவள் வந்த வழிதான் என்ன?

அவள் வேறு யாருமல்ல. ஸ்ரீமன் நாராயணனின் தேவியர் இருவரில் ஒருவளான ஸ்ரீபூமிதேவியின் அம்சமாகத் தோன்றிய சத்தியபாமாதான் தேரோட்டும் அந்தப் பெண். ஸ்ரீகிருஷ்ணனுடன் அவள் மேற்கொண்ட இந்தப் பயணம் உல்லாசப் பயணமா? அல்லது உலகத்தவர் துன்பம் போக்கி அவர்களை மகிழ்வித்திட மேற்கொண்ட உன்னதப் பயணமா?

இந்தப் பயணத்தின் முடிவுதான் என்ன?

அதற்கு முன் சத்தியயுகத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றைத் தெரிந்துகொள்வோம்...

சத்தியயுகத்தில் இரண்யாட்சன் என்பவன் பூமிப்பந்தை கவர்ந்துசென்று கடலுக்குள் ஒளிந்துகொண்டான். பூமிப்பிராட்டியின் பிரார்த்தனைக்கு இணங்க மகாவிஷ்ணு வராக அவதாரம் எடுத்து ஆயிரம் ஆண்டுகள் போரிட்டு இரண்யனை சம்ஹாரம் செய்தார். அவருடைய வராக அவதாரத்தின் போது அவருக்கும் பூமிதேவிக்கும் பிறந்த மகன்தான் நரகாசுரன். அவனுடைய இயற்பெயர் பௌமன் என்பதாகும். வராகப் பெருமான் அசுர சம்ஹாரம் முடித்த வேளையில் பிறந்ததனால் பௌமன் இயல்பாகவே அசுர குணங்களைக் கொண்டிருந்தான். நரன் என்றால் மனிதன். மனிதனாக இருந்தாலும், துர்க்குணங்கள் நிரம்பியவனாக இருந்ததால் நரகஅசுரன் என்று அழைக்கப்பட்டான்.



பிரக்ஜோதிஷபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்த நரகாசுரன், முனிவர், ரிஷிகள், தேவர்கள், மனிதர்கள் என்று அனைவருக்கும் பல்வேறு துன்பங்களைக் கொடுத்து வந்தான். தனக்கு எப்போதும் யாராலும் மரணம் வந்துவிடக் கூடாது என்பதற்காக பிரமதேவரைக் குறித்துத் தவமியற்றினான். அவனுடைய தவத்துக்கு இரங்கிக் காட்சி கொடுத்த பிரமதேவரிடம், தனக்கு எவராலும் மரணம் நேரிடக்கூடாது என்ற வரம் வேண்டும் என்று கேட்டான். ஆனால், பிறப்பவர் அனைவரும் ஒருநாள் மரணித்தே ஆகவேண்டும் என்று கூறிய பிரமதேவரிடம், அப்படியானால் தன் தாயைத் தவிர வேறு யாராலும் மரணம் நேரிடக் கூடாது என்று வரம் கேட்டான். 'எந்தத் தாயேனும் தான் பெற்ற மகனை, அவன் எவ்வளவுதான் கொடியவனாக இருந்தாலும் கொலை செய்யத் துணியமாட்டாள் என்ற நினைப்பு அவனுக்கு. அவரும் அவன் கேட்ட வரத்தைத் தந்து மறைந்தார். இது நடந்தது சத்தியயுகத்தில்...

“சத்யபாமாவுடன் துவாரகை திரும்பிய கிருஷ்ணரிடம், நரகாசுரனின் அட்டகாசங் களைத் தாங்க மாட்டாத முனிவர்களும், ரிஷிகளும் நரகாசுரனை சம்ஹாரம் செய்து, தங்களைக் காப்பாற்ற வேண்டினர்.”

சத்தியயுகமும், திரேதாயுகமும் முடிந்து துவாபரயுகமும் தோன்றியது. இந்த யுகத்தில் சிசுபாலன் - தந்தவக்கிரன் ஆகியோரை சம்ஹாரம் செய்வதற்காக பகவான், ஸ்ரீகிருஷ்ணராக அவதரித்திருந்த காலம். அதே காலக்கட்டத்தில் பூமிதேவி சத்ராஜித் என்பவனின் மகளாக சத்தியபாமா என்ற பெயரில் தோன்றினார்.

மன்னன் சத்ராஜித்தால், அவன் வசமிருந்த சியமந்தக மணியைக் களவாடிவிட்டதாகப் பழிச்சொல் ஏற்ற கண்ணன், உண்மையை சத்ராஜித்துக்கு உணர்த்தியதுடன், அவன் பறிகொடுத்த சியமந்தக மணியையும் மீட்டுக் கொடுத்தார். அதனால், மனம் மகிழ்ந்த சத்ராஜித் தன் மகள் சத்தியபாமாவை கிருஷ்ணருக்குத் திருமணம் செய்துகொடுத்தான்.

சத்யபாமாவுடன் துவாரகை திரும்பிய கிருஷ்ணரிடம், நரகாசுரனின் அட்டகாசங்களைத் தாங்க மாட்டாத முனிவர்களும், ரிஷிகளும் நரகாசுரனை சம்ஹாரம் செய்து, தங்களைக் காப்பாற்ற வேண்டினர்.


நடந்ததும், நடப்பதும், நடக்கப்போவதும் அறிந்தவர் அல்லவா கிருஷ்ணர்? நரகாசுரனை சம்ஹாரம் செய்ய நாள் குறித்துப் போருக்குப் புறப்படுகிறார்.

அப்படி அவர் போருக்குப் புறப்பட்டபோது, சத்யபாமா அவருக்கு முன்னால் வந்து, "ஸ்வாமி, நரகாசுரனை எதிர்த்துப் போரிடச் செல்லும் தங்களுக்கு சாரதியாக நான் தங்களுடன் வருகின்றேனே" என்றாள். நரகாசுரனின் முடியப்போகும் விதிதான் அவளை அப்படிக் கேட்கச் செய்தது.

கிருஷ்ணரும் இசைவு தெரிவித்தார்.

இதோ-





‘தன்னைக் கொண்டவனா? அல்லது தான் பெற்றவனா? என்ற கேள்வி முன் நிற்கும்போது தன்னைக் கொண்டவன் பக்கமே துணையாக இருப்பதுதான் பாரதப் பெண்மையின் இலக்கணம். அந்த இலக்கணத்தின் நிதர்சன சாட்சியாக நின்று சத்தியபாமா நரகாசுரனை சம்ஹாரம் செய்தாள்.

கிருஷ்ணர் தேரில் அமர்ந்திருக்க, சத்யபாமா சாரதியாக அமர்ந்து, நரகாசுரனின் நகரமான பிரக்ஜோதிஷ புரத்தை நோக்கிப் போர்ப் பயணம் தொடங்கிவிட்டாள்.

பயணம் பிரக்ஜோதிஷபுரத்தில் முடிந்தது.

பயணத்தின் முடிவில் கிருஷ்ணருக்கும் நரகாசுரனுக்கும் கடும்போர் நடைபெற்றது.

’தன் தாயைத் தவிர வேறு யாராலும் தனக்கு மரணம் வந்துவிடக் கூடாது’ என்று வரம் பெற்றவன் அல்லவா அவன்?

கிருஷ்ணரால் அவனை ஒன்றும் செய்யமுடியாத நிலையில், சோர்வு அடைந்தவர் போல் தேரின் ஆசனத்தில் சாய்ந்தார்.

அந்த நிலையிலும் நரகாசுரன் கிருஷ்ணரைத் தாக்க முற்பட்ட வேளையில், சாரதியாக வந்த சத்தியபாமா, சினம் கொண்ட சிங்கமாக மாறி நரகாசுரனை எதிர்த்துப் போரிட்டாள்.

அதுதான் பாரதத்துக்கே உரிய பதிபக்தியின் சிறப்பு!

‘தன்னைக் கொண்டவனா? அல்லது தான் பெற்றவனா’ என்ற கேள்வி முன் நிற்கும்போது தன்னைக் கொண்டவன் பக்கமே துணையாக இருப்பதுதான் பாரதப் பெண்மையின் இலக்கணம். அந்த இலக்கணத்தின் நிதர்சன சாட்சியாக நின்று சத்தியபாமா நரகாசுரனை சம்ஹாரம் செய்தாள்.

நரகாசுரனை வதம் செய்ததும், அப்பொழுதுதான் மயக்கம் தெளிந்தவர் போல் கண் விழித்த கிருஷ்ணர், சத்தியபாமாவிடம், அவள் பூமிதேவியின் அம்சம் என்றும், நரகாசுரன் தங்கள் மகன்தான் என்றும், அவன் பெற்றிருந்த வரம் பற்றியும் கூறினார். உண்மை அறிந்த சத்தியபாமா சற்றும் கலங்கவில்லை. மாறாக, பெற்ற பிள்ளையிடமிருந்து தன் கணவரைக் காப்பாற்றிவிட்ட பெருமிதமே மிளிர்ந்தது.

உத்தம பத்தினியாகத் திகழ்ந்து, தன் கணவரான கிருஷ்ணரை மட்டுமா சத்தியபாமாவாகிய பூமிதேவி காப்பாற்றினாள்? அவளுடைய கோடானுகோடி பிள்ளைகளான நம்மையும் அல்லவா நரகத் துன்பங்களிலிருந்து காப்பாற்றிவிட்டாள்!

அவள் சாரதியாக அமர்ந்த இந்தப் பயணத்தின் முடிவில்– நம் எல்லோர் வாழ்க்கையிலும் இருள் விலகி, ஒளி படர்ந்து, ஆனந்தம் பெருகிட அனைவருக்கும் ஓம் சக்தியின் இனிய தீபாவளி வாழ்த்துகள்!

தமிழ் உலக மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழி. தமிழ் மொழியின் காலத்தை நிர்ணயிப்பது அவ்வளவு சுலபம் அல்ல. மொழி நூல் ஆராய்ச்சியாளர்கள் எல்லோரும் தமிழ்தான் ஆதிமொழியாக இருந்திருக்க வேண்டும் என்பதைப் பல ஆதாரங்களுடன் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள்.



மூவாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால், அப்போது தமிழ்நாட்டின் ஒரு பகுதியான சேரலர் நாட்டில் இருந்த காலடி என்னும் சிற்றூரில் ஆதிசங்கரர் பிறந்தார். அவர் ஒரு தமிழர். அவர் தாய்மொழி தமிழ்.

அவர் இந்தியா முழுவதும் சென்று தமிழரின் தெய்வக் கொள்கையான தெய்வம் ஒன்றே என்ற அத்வைதக் கொள்கையைப் பரப்பினார்.

தமிழ்ப் பண்பாட்டை, அப்போது இந்தியாவின் இணைப்பு மொழியாக இருந்த சமஸ்கிருத மொழியின் மூலமாகவே அவர் பாரதமெங்கும் பரப்பினார்.

தமிழ்ப் பண்பாட்டைத் தமிழ் தெரியாத மக்கள் மத்தியில் பரப்புவதற்காகவே தமிழர்களால் உருவாக்கப்பட்ட மொழி சமஸ்கிருதம். சமஸ்கிருதம் என்றால் செம்மைப்படுத்தப்பட்ட தமிழ் என்று பொருள்.

சமஸ்கிருதத்திற்குத் தமிழில் என்ன பெயர் தெரியுமா? வடல்மொழி என்பது அதன் ஆதி பெயர். வடல் மொழியை வடு, அல், மொழி என்று பிரிக்க வேண்டும்.

வடு, அல், மொழி என்றால் ஓசைக் குற்றம் இல்லாத மொழி என்று பொருள். இதைத்தான், ‘செந்திறத்த தமிழ் ஓசை வட சொல்லாகி’ என்கிறார் திருமங்கை ஆழ்வார்.

வடல் சொல் என்ற வார்த்தைதான், செய்யுள் இலக்கணப்படி, வடல் என்ற சொல்லில் இருக்கும் கடைசி எழுத்தான ல் குறைந்து கடைக் குறையாகி வடசொல் என்று வந்திருக்கிறது.

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத மற்றவர்களுக்கும் புரிய வேண்டும் என்பதற்காகச் செம்மை செய்யப்பட்டு வடல் சொல்லாக சமஸ்கிருதம் ஆகியது என்று திருமங்கை ஆழ்வார் சொல்கிறார்.

சமஸ்கிருதம் தமிழனால் உருவாக்கப்பட்ட அருமையான இணைப்பு மொழி என்பதும் அவர் கருத்து. சமஸ்கிருத மொழியின் துணையுடன்தான் சங்கரர் தமிழ்ப் பண்பாட்டைப் பாரதம் முழுவதிலும் பரப்பினார். சங்கரர் பிறந்த காலடி இன்றும் கேரள நாட்டில் இருக்கிறது. கேரள நாடும் மலையாள மொழியும் ஏற்பட்டு 700 ஆண்டுகள்கூட ஆகவில்லை என்பது வரலாற்று உண்மை.

அதற்கு முன் ஆதிசங்கரர் காலத்தில் அது மூவேந்தர்களில் ஒருவரின் நாடாகவும் தமிழ்மொழி வழங்கிய பிரதேசமாகவுமே இருந்தது. சேரலர் நாடு என்ற வார்த்தைதான் இங்கிலீஷ்காரர்களால் கேரள நாடு என்று மாற்றப்பட்டது.

விசிஷ்டாத்வைதக் கொள்கையை உலகிற்கு வழங்கியவர் இராமாநுஜர். அவர் ஒரு தமிழர். அவர் பிரம்ம சூத்திரத்துக்குச் சமஸ்கிருதத்தில்தான் விரிவான விளக்கங்களை எழுதியுள்ளார். மக்கள் அனைவரும் சமம் என்ற சமரச உணர்வை ஊட்டியவர். சாதி, இன, மொழி, மத வேறுபாடுகளைக் கடந்து, தம் குருவின் ஆணையையும் மீறி,

## சக்தி களஞ்சியம்

**நா.மகாலிங்கம்**

# தமிழன் உருவாக்கிய மொழி

சமயப் பொதுமையையும் சமய நல்லுணர்ச்சியையும் அனைவருக்கும் உபதேசித்தவர் அவர்.

இந்திய சமயத் தத்துவத்தில் சிறப்பு மிக்கது சைவ சித்தாந்தம். சைவ சித்தாந்தத்தை உருவாக்கியவர் மெய்கண்டார்.

அவரும் தமிழர். அவர் இயற்றிய சைவ சித்தாந்த நூல் சிவஞான போதம் என்பது. சிவஞான போதம் தமிழ் நூல்தான். ஆனால், அதன் விரிவான விளக்கம் எல்லாம் சமஸ்கிருதத்தில்தான் இப்போதும் இருக்கின்றன. சிற்பக் கலை நூல்களும், நாட்டிய நூல்களும், கோயில் கட்டடக் கலை நூல்களும் சமஸ்கிருத மொழியில்தான் இருக்கின்றன.

நமது தமிழ்ப் பண்பாட்டை விளக்கும் இந்த நூல்கள் எல்லாம் சமஸ்கிருதத்தில் இருப்பதனாலேயே தமிழர்கள் உருவாக்கிய மொழிதான் சமஸ்கிருதம் என்பதை ஆராய்ச்சியாளர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

பேரறிஞர் திரு. பா.வே. மாணிக்க நாயக்கர், சமஸ்கிருதம் தமிழரால் உருவாக்கப்பட்ட செம்மையான தமிழ்மொழி என்று தகுந்த ஆதாரங்களோடு குறிப்பிட்டுள்ளார். ரிக் வேதத்திற்குப் பொருள் காண வேண்டுமானால், அதற்குத் தொல்காப்பியம் போன்ற தமிழ் இலக்கண, இலக்கியங்கள்தான் வழிகாட்டுகின்றன என்று இன்றைய ஆராய்ச்சி அறிஞர்கள் ஆதாரங்களுடன் கூறுகின்றனர்.

தசாவதாரக் கதைகளும், கஜேந்திர மோட்சக் கதையும், வாமனன் கதையும், வானசாஸ்திரம் முதலியவற்றை விளக்கும் உவமை கதைகளாகும். இதை திரு. சுந்தரராஜன் தமது ரிக் வேத ஆராய்ச்சியில் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி இருக்கிறார்.

தமிழ் இலக்கியங்களில் இலைமறை காய்மறையாக இருக்கும் உண்மைகள்தான் ரிக் வேதத்தில் விரிவாக விளக்கிக் கூறப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிடுகிறார்.

சமஸ்கிருத நூல்களை ஆராய்ந்து அதில் கிடைக்கும் பண்டைய தமிழ்நாட்டின் செல்வத்தைத் தமிழில் இருந்த செல்வத்தை மீண்டும் தமிழில் எழுதி முதலில் காப்பாற்ற வேண்டும். பிறகு ஆங்கிலத்திலும் மற்ற இந்திய மொழிகளிலும் எழுதி வெளியிட வேண்டும். இந்த முயற்சியில் ஈடுபடுவதற்குப் பன்மொழிகளில் பயற்சியும், விஞ்ஞான அறிவும் நிறைந்த ஓர் இளைஞர் படையையே உருவாக்க வேண்டும். தமிழர்களால் உருவாக்கப்பட்ட மொழி சமஸ்கிருதம். தமிழனின் அறிவுக்குச் சான்றாக இருக்கும் சமஸ்கிருதத்தை வெறுக்கலாகாது.

குடந்தை ப.சரவணன்







நாதஸ்வரம்... தமிழர்களின் பாரம்பர்ய இசைக்கருவி. தெய்விக இசையை வாரிவழங்கும் அற்புத வாத்தியம். சுமார் மூவாயிரம் ஆண்டுக் காலப் பாரம்பர்யத்தின் அடையாளம். அதிகாலை துயில் எழுப்புவதில் தொடங்கி, நள்ளிரவு உறங்கும் காலம் வரை காலத்துத் தகுந்த இசையைத் தரும் கருவி.

பொதுவாக நாகஸ்வரம் எனப்படும் நாதஸ்வரம் 'ஆச்சாள்' என்ற மரத்தில் செய்யப்படுவது. பழைமையான இந்த மரம். பல ஆலயங்களில் தல விருட்சமாகவும் திகழ்கிறது. பல்லாண்டுகள் ஆன ஆச்சா மரமே நாதஸ்வரம் செய்யத் தகுதி பெறும் . மரத்தின் உடலில் உள்ள ஈரம் உலர்ந்து அது வைரம்போல் உறுதிப்பட்டால் அதைக் கொண்டு நாதஸ்வரம் செய்ய முடியும்.

மரத்தினால் செய்வதற்கு முன்பாக இதே இசை நுட்பத்தைக் கல்லிலிலும் செய்து பயன்படுத்தினார்கள் தமிழர்கள் என்றால் நம்ப முடிகிறதா... ஆம், கல்லால் செய்யப்பட்ட நாதஸ்வரம், கோயில் நகரமாம் கும்பகோணம் ஆதிகும்பேஸ்வரர் ஆலயத்தில் உள்ளது.

சாதாரண நாதஸ்வரத்தைப் போன்று ஆறு மடங்கு எடையுடையது கல் நாதஸ்வரம். மரத்தால் ஆன நாதஸ்வரத்தின் எடை சுமார் 600 கிராம் என்றால் கல் நாதஸ்வரத்தின் எடை 3.600 கிலோ கிராம் ஆகும். இந்த நாதஸ்வரம் சுமார் இரண்டடி நீளமுடையது. கும்பகோணத் தில் ஆதிகும்பேஸ்வரர் கோயிலில் உள்ள பெட்டகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது இந்தக் கல் நாதஸ்வரம்.

இதேபோன்று அற்புதமான ஒரு கலைப்படைப்பு தூத்துக்குடி மாவட்டம் நவ திருப்பதிகளில் ஒன்றான ஆழ்வார் திருநகரியில் உள்ள ஆதிநாதர் ஆழ்வார் கோயிலிலும் உண்டு. இது சுமார் 350 ஆண்டுகளுக்கு முன் அரசாண்ட கிருஷ்ணப்ப நாயக்கர் என்ற மன்னரால் இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட இந்தக் கல் நாதஸ்வரம் இசைக்கப்படாமல்



# கலை நயம் இசைக்கும்
# கல் நாதஸ்வரம்

இப்போது வெறும் காட்சிப் பொருளாக மட்டுமே பாதுகாக்கப்பட்டு வருகிறது.

கல்நாதஸ்வரத்தின் முகப்பில் உள்ள முக்கிய பாகமான சீவாளி, காவிரிக்கரையில் விளையும் ஒரு நாணல் புல்லில் செய்யப் படுகிறது. கல் நாதஸ்வரத்தில், உலவுப்பகுதி மூன்று உறுதியான கருங்கற்களால் தனித்தனி யாகச் செய்யப்பட்டு வெண்கலப் பூணால் இணைக்கப்பட்டு வெண்கல அனசுடன் மிக நேர்த்தியாக உருவாகி உள்ளது இந்தக் கல் நாதஸ்வரம். மரத்தால் செய்யப்படும் நாதஸ்வரங்களில் ஏழு ஸ்வரங்கள் இருக்கும். ஆனால், இந்தக் கல் நாதஸ்வரத்தில் 6 ஸ்வரங்கள் மட்டுமே இருக்கும். அதனால் சண்முகப்ரியா ராகத்தில் 'விளையாட இது நேரமா' எனும் கீர்த்தனையும் கல்யாணி போன்ற பிரதி மத்திம ராகங்கள் மட்டுமே வாசிக்க முடியும்.

இதில் மூன்று முதல் மூன்றரைக் கட்டை சுதியில் வாசிக்க இயலும். மேலும் சங்கராபரணம், கரகரப்பிரியா, தோடி போன்ற சுத்த மத்திம ராகங்களை இந்த நாதஸ்வரத்தால் வாசிக்க முடியாது. முழுமையாகவும், அடர்த்தி யாகவும் மூச்சை உள்ளே செலுத்தினால் மட்டுமே இதில் நல் இசை கிடைக்கும் எனவும் பயிற்சி இருந்தால் மட்டுமே இதை வாசிக்க முடியும் எனவும் கூறுகிறார் கும்பகோணம் நாதஸ்வர வித்வான் சுவாமிநாதன் பிள்ளை.

இந்தக் கல் நாதஸ்வரத்தை குடந்தையில் வாழ்ந்து மறைந்த நாதஸ்வர மேதை கும்பகோணம் பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் சுமார் 60 வருடங்களுக்கு முன் கும்பேஸ்வரர் ஆலய முக்கிய விழாக்களில் வாசித்துள்ளார். அவருக்குப் பின் திருக்கோவில் நாதஸ்வர வித்வானாக குஞ்சுதபாதம் பிள்ளை அவர்கள் 30 வருடங்களுக்கு முன் வாசித்து வந்துள்ளார். அவருக்குப் பின் இப்போதுவரை வாசித்து வருபவர் சுவாமிநாதன் பிள்ளை ஆவார்.

இக்கோயிலில் ஆஸ்தான நாதஸ்வர கலைஞராக 29 வருடங்களாக இறைப் பணியாற்றி வரும் சுவாமிநாதன் பிள்ளை 47 வருடங்களாக நாதஸ்வரம் வாசித்து வருகிறார். இவர் நாகப்பட்டினம் அருகிலுள்ள சிக்கல் சிங்காரவேலன் திருத்தல தேவஸ்தான இசைப் பள்ளியில் பணியாற்றி வந்த புகழ் பெற்ற நாதஸ்வர வித்வான் கலைமாமணி கோட்டூர் என்.ராஜரத்தினம்பிள்ளையின் சிஷ்யர் ஆவார்.

கடந்த 2017-ம் வருடம் சரஸ்வதி பூஜையின் போது கல் நாதஸ்வரத்தில் அம்சநாதம் ராகத்தில் 'பண்டுரோதி' கீர்த்தனை, சண்முகப்ரியா ராகத்தில் 'விளையாட இது நேரமா', ஹேமவதி ராகத்தில் ஸ்ரீகாந்திமதி கீர்த்தனை ஆகியவற்றை இசைத்ததாக ஆலயப் பணியாளர்கள் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு இப்போதுவரை கல் நாதஸ்வரம் இசைக்கப்படவில்லை.

இவ்வாத்தியம் முன்பு தென்னிந்தியாவிலுள்ள நாகூர், நாகப்பட்டினம் முதலிய ஊர்களில் உள்ளவர்களான, நாகத்தை தெய்வமாகப் பூசித்த நாகர் என்ற இனத்தவரால் வாசிக்கப்பட்டு வந்தது. நாகத்தினை போன்ற உருவத்தால் நீண்டிருந்ததின் காரணமாகவும் நாகஸ்வரம் என்னும் பெயர் ஏற்பட்டது. இதனுடைய

இனிமையான நாதம் காரணமாகப் பிற்காலத்தில் இது நாதஸ்வரம் என அழைக்கப்பட்டது.

17 – ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாத சங்கிரகம் என்னும் இசை நூல் துளைக் கருவிகள் பற்றிக் கூறும்போது இக் கருவியையும் நாகசுரம் என்ற பெயரில் குறிப்பிடுகிறது. இதுவே தற்போதைய நிலையில், கிடைக்கின்ற முதல் வரலாற்றுக் குறிப்பு எனலாம்.

இதனின் அமைப்பு வட இந்தியக் குழல் இசைக்கருவியான ஷெனாய் போன்றது ஆகும். எனினும் இந்த ஷெனாயை விட அளவில் பெரியது. இது நாதசுவரத்தின் நீளம் சுமார் 2.5 அடி. இக்கருவியின் மேல் பகுதியை உளவு

“17 - ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாத சங்கிரகம் என்னும் இசை நூல் துளைக் கருவிகள் பற்றிக் கூறும்போது இக் கருவியையும் நாகசுரம் என்ற பெயரில் குறிப்பிடுகிறது. இதுவே தற்போதைய நிலையில், கிடைக்கின்ற முதல் வரலாற்றுக் குறிப்பு எனலாம்.”

என்றும், கீழ்ப்பகுதியை அணசு என்றும் கூறுவர். உளவுப் பகுதியில் 12 துளைகள் அமைக்கப் படும். இக்கருவியின் அளவிற்கேற்ப, முகவீணை, திமிரி நாயனம், பாரி நாயனம், இடைப்பாரி நாயனம், மத்திம சுருதி நாயனம் என்ற பெயர்களுடன் வழங்கி வருகின்றனர்.

மேல் பகுதி வாய் வைத்து ஊதுவதற்கு ஏற்ற உலோக உருண்டை அமையப்பெற்று இருக்கும். பல நாணல்களும் நாதஸ்வரத்துடன் இணைக்கப்பட்டு இருக்கும். அவற்றுடன் சிறு தந்தத்தினாலான கூம்பு இருக்கும். இவை நாணலினில் உள்ள எச்சில் மற்றும் தூசு குப்பைகளை நீக்கிச் சரியான காற்று போகும் அளவுக்குத் திருத்தக் கொடுக்கப்பட்டிருக்கும்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள க்யூ ஆர் கோடை ஸ்கேன் செய்து கல் நாதஸ்வர இசையைக் கேட்டு ரசியுங்கள்

இவற்றுடன் ஓர் உலோக மணியும் பொருத்தப் பட்டிருக்கும். பாரம்பர்யமாக நாதஸ்வரத்தின் உடல் வன்மரத்தினால் செய்யப்பட்டது. ஆனால், தற்போது மூங்கில், சந்தனமரம், தாமிரம், பித்தளை, கருங்காலி மற்றும் ஐவரி ஆகியவற்றிலும் செய்கிறார்கள். நாதஸ்வரத்தில் ஏழு விரல் துளைகளும், ஐந்து கூடுதல் ஓட்டைகளும் போடப்பட்டிருக்கும். ஐந்து கூடுதல் ஓட்டைகளையும் தேவையானபொழுது பயன்படுத்திக்கொள்ள மெழுகு கொண்டு அடைத்திருப்பர். பான்சூரி புல்லாங்குழல் போன்று இரண்டரை எல்லை ஓட்டைகளும் போடப்பட்டு இருக்கும்.

சீவாளி:-

ஜீவ வளி என்பதுதான் சீவாளியாகி யிருக்கிறது. ஜீவன் என்றால் உயிர். வளி என்றால் காற்று. உடலாகிய நாதஸ்வரத்திற்கு காற்றின் மூலம் சீவாளி உயிர் கொடுக்கிறது நாதசுவரத்தின் மேல் பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படும். சாம வேதமே இசை யின் அடிப்படை என்று வேத விற்பன்னர்கள் கூறுவர். ஸ,ரி, க,ம,ப, த,நி ஆகிய ஏழு ஸ்வரங் களும் ஆகாயத்திலிருந்து ஒலிக்கக் கேட்டு பூமியில் இசையின் ஆதாரமாக வடிவெடுத்தது என்று மகாபாரதம் கூறும். ஒவ்வொரு ராகத்திற்கும் ஒரு தேவதை இருப்பதாக நமது பண்டைய இசை நூல்கள் கூறுகின்றன.

இசை ஒலியைக் கூர்ந்து நுட்பமாகக் கேட்டு அனுபவித்தவர்கள் தமிழர்கள். சட்ஜமம் மயில் அகவுதலையும், ரிஷபம் மாடு கத்துதலையும், காந்தாரம் ஆடு கத்துவதையும், மத்யமம் அன்றில் பறவை கூவுதலையும், பஞ்சமம் குயில் கூவுதலையும், தைவதம் குதிரை கனைப்பதையும், நிஷாதம் யானை பிளிறுவதை யும் போன்று இருக்கிறது என்று தமிழர்கள் இனம் கண்டனர். பின் அவற்றுக்கு ஸ்வரம் எனும் இசை வடிவம் தந்தனர். இத்தனை மகத்துவமான இன்னிசை எனும் சுக ராகத்தை மானுட கலாசார வாழ்வியலிலிருந்து விண்ணும் மண்ணும் இருக்கும்வரை பிரிக்க முடியாது என்பது நிதர்சன உண்மையாகும் கலைகளைக் காப்போம், கவலைகளை மறப்போம்.

உங்கள்

# ஓம் சக்தி

## கலை, இலக்கிய, ஆன்மிக மாத இதழ்



கடந்த முப்பத்தி ஒன்பது வருடங்களாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் ஓம் சக்தி ஆன்மிக, கலை, இலக்கிய மாத இதழ் தற்போது ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், ட்விட்டர் என்று சமூக வலைதளங்களிலும் தன் பயணத்தைத் தொடர்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்

கீழே உள்ள Qr code- ஐ ஸ்கேன் செய்து பார்க்கவும்

Facebook Twitter Instagram

தீபாவளி சிறப்பிதழ்

பண்டிகை

ஜெயா வெங்கட்ராமன், பெங்களூரு



# உடன்பிறப்புகளைக் கொண்டாடும் பண்டிகை!

இந்தியாவில் சிறப்பாகக் கொண்டாடப்படும் இந்துப் பண்டிகைகளில் தீபாவளி மிக முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. குழந்தைகளுக்கு மகிழ்ச்சியூட்டும் பண்டிகையாக இது விளங்குகிறது. புத்தாடைகள், விதவிதமான பலகாரங்கள்,தின்பண்டங்கள் என களைகட்டும். முக்கியமாகப் பட்டாசுகள் இந்த நாளில் குழந்தைகளை மிகவும் குதூகலப்படுத்தும்.

இந்து மதம் மட்டுமல்லாது, ஜெயினர்கள் ,சீக்கியர்கள், ஏன் புத்த மதத்தினர்கூட தீபாவளிப் பண்டிகையை அவரவர்கள் சம்பிரதாயப்படி கொண்டாடுகின்றனர். இந்தியா மட்டுமல்லாது. உலகம் முழுவதும் விரவியுள்ள மக்களும். குறிப்பாக கிழக்காசிய நாட்டினரும் கொண்டாடுகின்றனர்.

தீபாவளி என்பது தீபங்களின் வரிசை, அல்லது தீப ஒளித்திருநாள் என்று பொருள்படுவதுடன் ஐந்து நாள்கள் தொடர்ந்து கொண்டாடப்படும் பண்டிகை. தீய சக்திகளிலிருந்து நல்ல சக்திகள் நம்மைக் காக்கும் என்பதை இருட்டை விரட்டி, ஒளி வெற்றி கொள்வது போல் குறியீடாகச் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டில் சிலர் கேதார கௌரி விரதம் என்பதை தீபாவளியுடன் சேர்த்துக் கொண்டாடுகின்றனர்.



சீதா, ராமர், விஷ்ணு , ஸ்ரீகிருஷ்ணர், யமன்,யமி, துர்கா, காளி, அனுமன், பிள்ளையார், குபேரன், தன்வந்திரி, விஸ்வகர்மா என்று பல தெய்வங்களை முன்னிருத்தி அவரவர் நாட்டு வழக்கப்படி தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

சில பிராந்தியங்களில், ஸ்ரீராமர் பதினான்கு வருட வனவாசம், ராவண வதம் முடிந்து சீதை, லட்சுமணருடன் அயோத்திக்கு திரும்புவதைக் கொண்டாடும் விதமாக,விளக்குகள் ஏற்றி, புத்தாடை அணிந்து, அந்த நாள் தீபாவளியாக கொண்டாடப் படுகிறது. இதையொட்டியே தில்லியில் ராம் லீலா மைதானத்தில் ராவணனின் மிகப் பெரிய உருவத்தை செய்து அதன் மீது வெடிவைத்து தீக்கிரையாக்கி ராவண சம்ஹாரம் செய்து இதனையும் தீபாவளியுடன்



## ஜைனர்களின் தீபாவளி

அகண்டயுகத்தின் இருபத்தி நான்காவது மற்றும் கடைசித் தீர்த்தங்கரரான வர்த்தமான மஹாவீரர் மோட்சம் அடைந்த தினத்தை தீபாவளியாகக் கொண்டாடுகின்றனர். இந்துக்களின் தீபாவளிப் பண்டிகையான அதே தினத்தில் இது கொண்டாடப்படுகிறது. இந்த நாள் ஜைனர்களுக்கு பழைய ஆண்டின் முடிவும் புதிய ஆண்டின் தொடக்கமும் ஆகும். அன்று தங்களுடைய கடைகளை சுத்தப்படுத்தி, கணக்குப் புத்தகங்களில் குங்குமக் கரைசலால் ஸ்வஸ்திகா கோலம் இட்டு, சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு பூஜை செய்து புதுக் கணக்கு ஆரம்பித்து அன்று வரும் வாடிக்கையாளர்களுக்கு இனிப்புகள் வழங்கிக் கொண்டாடுகின்றனர். குஜராத்திகள் 'சால் முபாரக்' என்கின்றனர். இதுவும் அவர்களுடைய புது வருடம்தான். குஜராத்திகள் விக்ரம் சம்வத்சர நாள்காட்டியைப் பின்பற்றுகின்றனர். அவர்களுடைய புது வருடத்தின் பெயர் விக்ரம் சம்வத்சரம்.

தொடர்புபடுத்திக் கொண்டாடுகிறார்கள். மொத்தத்தில் வாழ்வின் இருளை நீக்கி ஒளியை வழங்கும் பண்டிகையாக தீபாவளி கருதப்படுகிறது.

வட இந்தியாவில் தீபாவளியை அடுத்த வளர்பிறை இரண்டாம் நாளன்று பௌபீஜ் என்ற பெயரில் விழா கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் குடும்பத்தின் உறுப்பினர்களான சகோதரர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ பிரார்த்தித்துக்கொள்ளும் சகோதரிகள், சகோதரர்களின் நெற்றியில் திலகம் இடுவார்கள். அதேபோல குடும்ப ஆண்களும் தங்களது உடன்பிறப்புகளுக்கு பரிசுப் பொருள்கள் வழங்குவார்கள். இந்த வழக்கம் மகாராஷ்டிரா, வங்காளம், கொங்கண் ஆகிய பகுதிகளிலும், கர்நாடகா மற்றும் கோவா பகுதிகளிலும் பின்பற்றப் படுகிறது. நேபாளத்தில் இது ஒரு முக்கியமான சமயத் திருவிழா. இந்து புராணங் களின்படி, நரகாசுரனை ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா வதம் செய்த பிறகு, தனது தங்கை சுபத்திரையை காண வருகிறார். அப்போது சுபத்திரை அவருக்கு விருந்தளித்து நெற்றியில் திலகமிட்டதை நினைவு படுத்தும் விதமாக பெண்கள் தங்கள் உடன்பிறப்புகளுக்கு திலகமிட்டு வரவேற்கின்றனர்.

இந்தியா, நேபாளம், ஸ்ரீலங்கா, மியான்மர், சிங்கப்பூர், மலேசியா, பிஜித்தீவு போன்ற நாடுகளிலும் இந்நாள் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தென் இந்திய முறைப்படி தீபாவளியைக் கொண்டாடு கின்றனர். அமாவாசையிலிருந்து ஐந்து நாள்கள் கொண்டாட்டம். இது 'தன் தேரா' என்று அழைக்கப்படுகிறது. வீடுகளைத் தூய்மைப் படுத்தி மாலைநேரத்தில் சீரோடும், சிறப்போடும் வாழவேண்டும் என்று லட்சுமிதேவியை வரவேற்றுப் பிரார்த்தனை செய்து, நகை, ரூபாய் நோட்டுகளை வைத்து வழிபடுகின்றனர். தீபாவளியின் நான்காவது நாள் கோவர்த்தன பூஜை ஆகியவை நடைபெறுகின்றன.

ஜோதி பெருமாள், புதுதில்லி

கவிதை

# மழையும் மழலையும்



உறைந்த மேகம் கரைந்து
இனிமையான சத்தத்துடன்
துளிவடிவில்
மண்ணை முத்தமிடும் மழையே!

நிலமகளின்
வறட்சி ஆடையைத் தைக்கவந்த
மழைஊசியே!

மரம் நனைத்து புதர் நனைத்து
செடி நனைத்து புல்நனைத்து
நிறமற்ற முத்தாய் நிலத்தில் வீழ்ந்து
வித்தின் உயிர்க்கதவு திறக்கும்
மழைச்சாவியே!

துளிகளால் நெய்யப்பட்ட ஆடையென
அருவியாய் விழுந்து
நகரும் நீல(ள)ப் புடைவைபோல
ஆறாய் மாறி
செல்லுமிடத்தையெல்லாம் செழிப்பாக்கி
கடலில் கலக்கிறாய் !

இலைக்குடையின் கீழ்
ஒரு மழலைப்பூவாய்
என்மேலிறங்கும் உன்னை
கண்மூடிச் சிலிர்(ரி)த்து ரசிக்கிறேன்
கடவுளை தரிசிப்பது போல்!

என் பட்டுமேனியில் பட்டுச்சிதறி
மோட்சம் பெறும் மழையே !
எனது பட்டாம்பூச்சியையும் தட்டானையும்
நான் செய்த பட்டத்தையும்
நனைத்து விடாதே!

இயற்கையின் பருவமாற்றம் ஏதுமற்று
இணைந்திருப்போம் என்றைக்கும்
நனைக்கும் மழையாக நீயும் – உன்னுள்
திளைக்கும் மழலையாக நானும்!

எல்லாம் சரி!
உனது அத்தனை துளிகளையும்
எனது சிறிய உள்ளங்கையில்
நான் எப்படி ஏந்திட ?!
எதைக் கொண்டு உனைச் சிறைப்பிடிக்க?!



தீபாவளி சிறப்பிதழ்

இலக்கியம்

காயத்ரி கணேஷ்

# அழகன் முருகனின் ஆற்றுப்படை

தேவர்களும், மனிதர்களும், அசுரர்களும் ஒரு முறை பிரமாவைப் போய்ச் சந்தித்தனராம். அப்போது பிரமா மூவருக்கும், 'த' என்கிற ஒற்றை எழுத்தை உபதேசித்தாராம். அசுரர்கள், 'த' என்றால் 'தயை' என்று புரிந்துகொண்டனர். தாம் பிறர்மேல் கருணையில்லாமல் இருப்பதால் அதுவே தமக்குத் தேவை என்கிறார்போலும் பிரமா என்று நினைத்துக் கொண்டனர். மனிதர்களோ 'த' என்பதை 'தத்த' என்று புரிந்துகொண்டனர். 'தத்த' என்றால் 'தானம்' என்று பொருள். தேவர்களோ 'த' என்பதை 'தாம்யுத' என்று புரிந்து கொண்டனராம். 'தாம்யுத' என்றால் 'புலனடக்கம்' என்று பொருள். மூவரும் தங்களிடம் எது இல்லையோ அதைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றே உபதே சித்தார் பிரமா என்று புரிந்துகொண்டனர்.

தேவர்கள் புலனடக்கம் இல்லாமல் இருப்பது புதிதல்லவே. அவர்களுக்குத் தங்களின் அழகில், அறிவில், மரணமில்லா வாழ்வில் எப்போதும் பெருமை, கர்வம். அதற்கு பிரமாவும் விதிவிலக்கல்ல. அவருக்குத் தன் படைக்கும் திறன் குறித்தும் பிரமப் பதவி குறித்தும் பெருமை உண்டாயிற்று.கயிலையில் சிவதரிசனம் முடித்துத் திரும்பும் பிரமா, அங்கே இருந்த பாலகனான அழகன் முருகனை வணங்காது செல்கிறார். பெரியவர்க்கு மரியாதை தர வேண்டும் என்று சண்முகன் எழுந்து வணங்கினான். ஆனால், பிரமாவோ பதில் வணக்கம் சொல்லாமல் அலட்சியமாகச் சென்றார்.மானிடர்கள்கூட தமக்கு வணக்கம் செய்யும் ஒருவரை கவனித்து பதில் வணக்கம் சொல்லுவர். இதில் ஒரு சூட்சுமம் உண்டு.

யார் வணங்குகிறார்கள், எதற்கு வணங்குகிறார்கள், ஏன் வணங்குகிறார்கள், உண்மையிலேயே மரியாதையோடு வணங்குகிறார்களா... என்றெல்லாம் சிந்திக்க வேண்டும். அவர்கள் வணங்கும் பாவத்தைக் கொண்டே அதைக் கண்டுகொள்ளவும் வேண்டும். சிந்தனையோடுகூட பதில் வணக்கம் சொல்லிவிட வேண்டும். அலட்சியம் செய்தல் அறிவுடைமை ஆகாது.

அலட்சியம் அகந்தையில் பிறக்கிறது. அகந்தை அறிவை மழுங்கச் செய்கிறது. பிரமாவுக்கு அப்போது ஆணவம் தலை நிறைய இருந்தது. ஐந்து நான்கான பின்பும் குறையாத ஆணவம்.

கந்தன் வழிமறித்தான். பிரணவத்தின் பொருள்கேட்டான். பிரமா பிரணவத்தின் பொருள் அறியாமல் சிருஷ்டிக்க முடியுமா...



# உயர்விலும் வேண்டுமாம் பணிவு...

## (திருஆவினன்குடி)

ஆனாலும் அகந்தை அவர் அறிவை மறைத்தது. பதில் சொல்ல முடியாமல் திண்டாடினார். தண்டபாணியோ பிரமனின் தலையில் குட்டி சிறையில் அடைத்தார். தானே படைக்கும் தொழிலையும் தொடங்கினார்.

அழியும் உடல் பிறக்கிறபோதே ஆணவமும் சேர்ந்து பிறக்கிறது. என்ன... பிரமா பல சதுர்யுகங்கள் வாழ்ந்து அடங்கும் உடல் கொண்டோன். ஆனாலும் மும்மூர்த்திகளில் ஒருவர் அல்லவா... அதனால்தான் அவருக்காகப் பரிந்துகொண்டு தேவர்களும் அவர்களை வழிநடத்தும் தேவர் தலைவனும் ருத்திரனும் விஷ்ணுவும் இங்கே ஊர்வலமாய் வருகிறார்கள்.

மாணாக்கனின் பிழை கண்டால் ஞானாசிரியன் தண்டிப்பான். ஆனால், பெற்றவனோ மனம் துடித்துப் பரிந்துகொண்டு வருவான். அப்படித்தான் சிவபெருமானும் விஷ்ணுவும் பிரமனுக்காகப் பரிந்துகொண்டு அந்த ஊர்வலத்தில் கலந்து வந்தனர். ஒரு வகையில் உலகுக்கு இது ஒரு பாடம். ஆணவம் அழிய அந்த ஆறுமுகனே கதி என்னும் ஞானம்.

தேவர்களுக்குப் பின் ஊர்வலத்தில் விஷ்ணு வருகிறார்.

கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்

றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்

பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்

புள்ளணி நீள்கொடிச் செல்வனும்

திருமால் கருடன் என்னும் புள்ளின் மீது வருகிறவர். அந்த கருடனின் பெருமையைச் சொல்லிவிட்டால் திருமாலின் பெருமை விளங்கிவிடும். இந்தப் பிரபஞ்சத்தில் நெருப்பையே தம் மூச்சுக்காற்றாகக் கொண்டிருக்கும் பாம்புகள் நிறைய உண்டு. ஆனால், அப்படிப்பட்ட நஞ்சு நிரம்பிய நாகங்களையும் அஞ்சி ஓடச் செய்வது கருடனின் சிறகடிப்பு. அதன் சிறகின் நிழலைக் கண்டாலே நாகங்கள் அஞ்சி ஓடுமாம். அத்தகைய பலம் வாய்ந்த பட்சிராஜனாகிய






கருடனை வாகனமாகக் கொண்டவர் திருமால்.

அவரைத் தொடர்ந்து ருத்திரன் வருகிறார். ருத்திரனைச் சுற்றி அவரின் பூதகணங்களும் அடியார்களும் வருகிறார்கள். அவர்கள் தம் கைகளில் இடபக்கொடியைப் பற்றியிருக்கிறார்கள். சிவபெருமான் தன் திண் தோள்களோடு நடந்துவருகிறார். அவரின் இடப்புறத்தில் அம்மை உமையவள் இருக்கிறாள்.

வெள்ளேறு வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ

ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்

மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனு...

சிவபெருமானுக்கு மூன்று கண்கள். அந்தக் கண்கள்தான் திரிபுரங்களையும் எரித்தன. திரிபுரம் எரிக்க சிவபெருமான் கிளம்பியபோது தேவர்கள் அனைவரும் கூடிவந்தனர். தம் வலிமைகளை அவரிடம் தந்தனர். ஆனால், அவை எல்லாம் உதவவில்லை. காரணம் அனைவருக்குள்ளுமே அகந்தை. தாமே திரிபுரங்களையும் எரிக்க உதவுகிறோம் என்கிற மாயையின் சிந்தை.

சிவனுக்கு எவன் உதவி தேவை... இதை உணர்த்தவே விநாயகர் தேரின் அச்சை முறித்தார். சிவனோ முக்கண்ணால் மூன்று புரங்களையும் எரித்தார். அப்போது கணபதியின் விளையாடல் அரங்கேறியதைப் போலவே இங்கு அகந்தை அழிக்க கந்தனின் விளையாடல் நடைபெறுகிறது.

கடைசியாக இந்திரன் வருகிறான். இந்திரன், தேவர்களின் தலைவனாக முன் நின்று சென்றிருக்கலாம். ஆனால், அவனோ சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பின்னால் வருகிறான். ஆனாலும் அவன் பெருமைகள் குறைவானது அல்லவே.





நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை

நூறைப் பத்தால் பெருக்கினால் வரும் ஆயிரம் கண்களுடனும் நூற்றுக்கும் மேற்பட்ட பல வேள்விகளை இயற்றி முடித்துப் பகைவரை அழித்த வெற்றியையும் உடையவன் இந்திரன். அவன் அழகிய நடையை உடைய ஐராவதத்தின் மீது அமர்ந்தவன் திருமகளின் அருள் பெற்ற இந்திரன் என்கிறார் நக்கீரர்.

நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்கு மொன்றுபுரி கொள்கை

இந்தப் பிரபஞ்சத்தில் நான்கு பெருந்தெய்வங்கள். இந்திரன், திருமால், ருத்திரன், பிரமா. இவர்கள் நால்வரும் உலகங்காக்கும் உன்னதமான கொள்கையை உடையவர்கள். அவர்களில் ஒருவரான பிரமா இப்போது சிறைப்பட்டிருக்கிறார். அவரை விடுதலை செய்யவேண்டும். இந்த நால்வருக்குள்ளும் உறவுமுறை உண்டு. திருமாலின் நாபியில் தோன்றியவர்தானே பிரமா. ஆனால், இங்கே உறவின் அடிப்படையில் ஓடி வரவில்லை. பிரமன் படைத்த உலகின் நலன் நாடி வந்திருக்கிறார்கள்.

முப்பெரும் தேவர்களே வந்திருக்கிறார்கள் என்றால் பிற தெய்வங்களும் அங்கே இருந்தனர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ...

முருகன் ஒரு திருவிளையாடலைத் தொடங்கியிருக்கிறான். அதன் காட்சிகளையும் அவனே தீர்மானிக்கிறான். அவனைத் தேடி வந்து தெய்வங்கள் சகலரும் வேண்டுவதை அறிந்துகொண்டால் சாமானியர்களுக்கு யாரைப் பணிந்துகொள்ள வேண்டும் என்று ஒரு தெளிவு ஏற்பட்டுவிடும் அல்லவா... முருகப்பெருமானின் கருணையைப் போன்று மிகுந்த கூட்டம் திருஆவினன் குடியை நோக்கி வந்திருக்கிறது. சந்நிதியில் நிற்கும் சிலிர்ப்பும் பெருமிதமும் அனைவருள்ளும் எழுந்தன.

நக்கீரரின் விவரிப்பில் தொள்ளாயிரத்துத் தொன்னூற்று ஒன்பதுபேரும் உணர்வுப் பெருக்கில் மகிழ்ந்திருந்தனர். இப்போது அவர்களுக்குக் கற்கிமுகி குறித்த பயம் போய்விட்டது. ஆவினன்குடியை மனதில் தியானித்து அதிலேயே திளைத்திருந்தனர். நக்கீரர் தொடர்ந்தார்:

தாவில் கொள்கை மடந்தையொடு சின்னா
ளாவி னன்குடி யசைதலு முரிய னதா அன்று.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு முருகன் புன்னகை சிந்தியபடி நிற்கிறான். அருகே குற்றம் இல்லாத கற்பினை உடைய தெய்வயானையோடு அமர்ந்திருக்கிறான் அவன். இது அவன் ஆட்சி செய்யும் நிலம். இங்கே அவன் அருள்வடிவாக வீற்றிருக்கிறான். இங்கே நம்பி வந்தவர்கள் ஞானத்தையும் செல்வத்தையும் அடையாமல் போவதில்லை. இதற்கு உதாரணம் அடுத்த படைவீடான திருஏரகம். வாருங்கள், அங்கே பரம்பொருளும் பாலகன் முன் பணிந்து நிற்கும் கோலத்தைக் காணுங்கள்.



தீபாவளி சிறப்பிதழ்

அனுபவ மருத்துவம்

எம்.மரிய பெல்சின்

# வீக்கம், சுளுக்கு, வாய்வுக்கோளாறு போக்கும் பிரண்டை!



நம்மைச் சுத்தி வளரக்கூடிய மூலிகைகளை வச்சே நமக்கு வரக்கூடிய நோய்களை விரட்டலாம். முதல்ல மூலிகைகள் பத்தின புரிதல் இருக்கணும். அதுமட்டுமில்லாம அதுல நம்பிக்கை வைக்கணும். இப்பிடி இருந்தா நிச்சயமா மூலிகைகள் பலன் தரும். அந்த வகையில நாம இப்போ பிரண்டையை பத்தி பார்க்கப்போறோம்.

பிரண்டை... இதைப் பற்றி பலபேருக்கு தெரிஞ்சாலும் அதை அதிகமா பயன்படுத்துறது கிடையாது. காரணம் என்னன்னா பிரண்டையை சாதாரணமா தொட்டாலே நமைச்சல் எடுக்கும். அது மட்டுமில்லாம அத்துடன் தேவையான பொருள்களை சேர்க்காம பயன்படுத்துனா அது வேற மாதிரி பிரச்னைகளை உருவாக்க வாய்ப்பிருக்கு.

பிரண்டை அடிபட்ட வீக்கம், சுளுக்கு, வாய்வுக்கோளாறுன்னு பல பிரச்னைகளுக்கு நல்ல மருந்து. கழுத்துல சுளுக்கு வந்து அவதிப்பட்ட ஒருத்தருக்கு பிரண்டை வைத்தியம் சொன்னேன். அவர் நான் சொன்னதை சரியா காதுல வாங்காம செஞ்சதால ரொம்பவே அவதிப்பட்டாங்க. அதாவது பிரண்டையோட புளி, உப்பு சேர்த்து அரைச்சி கொதிக்க வச்சி பத்து போடச்சொன்னேன். ஆனா, அவர் கொதிக்க வைக்காம பத்து போட்டுட்டார். இதனால என்ன நடந்துச்சின்னா சுளுக்கு பிரச்னை சரியாயிட்டு. ஆனா, பச்சையா பூசுனதால பிரண்டையோட நமைச்சல் தன்மை ரொம்ப பாடாய்ப்படுத்தி எடுத்திட்டு. தலைவலி போய் திருகுவலி வந்த கதை மாதிரி ஆனது.

பிரண்டை பத்தின தகவல் தேடும்போது, மறைந்த சித்த மருத்துவர் மதிப்புக்குரிய கே.பி.அர்ச்சுனன் எழுதுன புத்தகத்துல நிறைய குறிப்புகள் கிடைச்சது. அந்தப் புத்தகத்தை மேற்கோளா வச்சி எழுதுறேன். பிரண்டைக்கு வஜ்ஜிரவல்லின்னு ஒரு பேர் இருக்கு. வைரத்தை மாதிரியே எலும்புகளுக்கு வலிமை தர்றதால இந்தப் பெயர் வந்ததா சொல்றாங்க. வஜ்ஜிரம்னா வைரம்னு ஒரு பொருள் இருக்கு.

Vitis quadrangularis, Cissus quadrangularis... இது பிரண்டையோட தாவரவியல் பெயர். தெலுங்கில நல்லரு, கன்னடத்தில வஜ்ஜிரபாலி, மலையாளத்துல பிரண்டா, இந்தியில அர்லங்கர், சமஸ்கிருதத்தில அஸ்தின் சம்ஹாரின்னும் சொல்வாங்க.

பிரண்டையில பல வகைகள் இருக்கு. இரண்டு பட்டை பிரண்டை, மூன்று பட்டை பிரண்டை, உருட்டு, ஓலை, கதிர் பிரண்டை, செடி பிரண்டை, கொடி பிரண்டை, மர பிரண்டை, பெரும்பிரண்டை, சிறுபிரண்டை, காட்டுப் பிரண்டை, சதுர பிரண்டை, முப்பிரண்டை, களிபிரண்டை, தீம்பிரண்டை, புளி பிரண்டை, கணுப் பிரண்டைன்னு பலவகைப் பிரண்டைகள் இருக்கு. இத்தனை பிரண்டை இருந்தாலும் நாலு பட்டை உள்ள பிரண்டைதான் பொதுவா எல்லா இடங்கள்லயும் வளருது. அதைத்தான் பெரும்பாலும் மருந்தா பயன்படுத்தறாங்க.

பிரண்டை, மனுசனோட எலும்புக்கு உள்ளே இருக்கக்கூடிய மஜ்ஜை அப்பிடிங்கிற எலும்புச் சோத்துல உள்ள ஏற்றத்தாழ்வை சமப்படுத்தி எலும்புகளோட இணைப்புல உள்ள பசை, நீர், வாயு கூடினாலோ குறைஞ்சாலோ அதையெல்லாம் சமப்படுத்தி இயல்பா வச்சிருக்கும். அந்த வகையில முதுகுத்தண்டு, இடுப்பு, மூட்டு எலும்புகள்ல வரக்கூடிய பிரச்னைகளை சரிசெய்றதுக்கு பிரண்டை உதவும்.

பிரண்டையை பலவகைகள்ல மருந்தாகவும், உணவாகவும் பயன்படுத்துறாங்க. என்னைப் பொறுத்தவரைக்கும் ரொம்ப எளிமையா எல்லோரும் பயன்படுத்தக்கூடிய விதத்துல பிரண்டைத் துவையலையும் பிரண்டைப் பற்று போடுறதையும் நான் பரிந்துரை பண்ணுவேன். எளிமையான இந்த முறைகள்ல நான் செஞ்சி பார்த்து நல்ல பலன் கண்டிருக்கிறேன். பிரண்டையை துவையல் செய்யும்போது புளி, உப்பு, மிளகா வத்தல் (காய்ந்த மிளகாய்) சேர்க்கணும். பிரண்டை முத்தலா இருந்தா தோல் உரிச்சி நல்லெண்ணெய் விட்டு நல்லா வதக்கணும்.

இளம்பிரண்டையா இருந்தா தோல் உரிக்கத் தேவையில்லை. ஆனா கட்டாயம் நல்லெண்ணெய் விட்டு வதக்கணும். அதுக்குப் பிறகு மத்த பொருள்களை எண்ணெய் விடாம வறுத்து ஒண்ணா சேர்த்து அரைச்சி சாப்பிடலாம். பூண்டு, சின்ன வெங்காயம், உளுந்து, தேங்காய் சேர்த்தும் வதக்கி சாப்பிடலாம். இதை அப்பப்போ செஞ்சி சாப்பிட்டா நல்லது. சிலபேர் மொத்தமா அரைச்சி பிரிஜ்ல வச்சி சாப்பிடுறாங்க. இப்பிடி சாப்பிடுறதால பெரிய பலன் கிடைக்காது. சூடு ஆறுனதும் அம்மியில வச்சி மையா அரைச்சி சாப்பிடலாம், மிக்ஸியிலயும் அரைக்கலாம்.

செரிமானக்கோளாறு, வாய்வுத்தொல்லை, ஓடு வாய்வு, குடல் வாய்வு, மூச்சுப்பிடிப்புனு அவதிப்படுறவங்க இந்த பிரண்டைத் துவையலை அடிக்கடி செஞ்சி சாப்பிட்டு பலன் பெறலாம். ஆனா பல வீடுகள்ல பிரண்டை இருந்தும் அதைப் பயன்படுத்துறதில்லை. பலபேருக்கு அதோட பலன் தெரியல. சில பேருக்கு தெரிஞ்சும் அதோட தோலை உரிச்சி எண்ணெய்ல வதக்கி அரைச்சி சாப்பிடுறதுக்கு சோம்பேறித்தனம்ங்கறதால அதைச் சாப்பிடுறதில்லை. இன்னும் சிலபேர் பிரண்டையைத் தொட்டாலே கை அரிப்பு எடுக்குது, சாப்பிட்டா தொண்டையில நமைச்சல் எடுக்குதுனு காரணம் சொல்றாங்க. முறையா செஞ்சா எந்த பிரச்னையும் இல்லை.

பிரண்டையை தொடுறதுக்கு முன்னாடி கையில நல்லெண்ணெய் தடவலாம் இல்லன்னா புளி, உப்பை சேர்த்து தண்ணி விட்டுப் பிசைஞ்சி கை முழுக்க தடவலாம். இல்லைன்னா கையுறை மாட்டிக்கிடலாம். துவையல் செய்யும்போது கட்டாயம் புளி சேர்க்கணும். நல்லெண்ணெய்ல நல்லா வதக்கணும். அதாவது பச்சைத்தன்மை போகிற அளவுக்கு பிரண்டை பிரவுன் நிறத்துல மாறுற அளவுக்கு வதக்கணும். இப்படிச் செஞ்சா எந்தப் பிரச்னையும் வராது. அரை குறையாகச் செஞ்சா நிச்சயம் பிரச்னை வரும்.


பிரண்டைப்பற்று:முத்துனபிரண்டையைக்கூட இதுக்குப் பயன்படுத்தலாம். தேவையான அளவு பிரண்டையை எடுத்து புளி, உப்பு சேர்த்து மையா அரைச்சி நல்லா கொதிக்க விடணும். பிரண்டையை அரைக்கும்போது கொஞ்சமா நீர் விட்டா போதும். அதுக்கு அப்புறமா நல்லா கொதிக்கவிட்டு கட்டியானதும் அதை பொறுக்குற சூட்டுல வலி, வீக்கம், உடைஞ்ச எலும்பு, தசைப்பிறழ்வு மாதிரி பிரச்னைகளுக்கு பற்று போடலாம். ஒருதடவை அரைச்சி எடுத்த பிரண் டையை திரும்பத் திரும்ப சூடாக்கிப் பூசலாம்.

சிலபேர் பிரண்டை எங்க கிடைக்கும்னு யோசிப்பாங்க. கீரை விற்கிற பாட்டிமார்கிட்ட 20 ரூபாய் இல்லன்னா அதிகபட்சமாக 40 ரூபாய்க்குக் கிடைக்கும். ரெண்டு லட்சம் ரூபாய் செலவழிச்சும் கிடைக்காத பலன் இந்த பிரண்டைப் பற்று போட்டாலே கிடைக்கும்.



தீபாவளி சிறப்பிதழ்

இயற்கை



ஓ மு.அரி

"தாதுவை யுண்டாக்குந் தனிமேகத்தைத் தொலைக்கும்
ஆதரவா மேனிக் கழகுதருஞ் - சீதம்போம்
சீரிதழ்த் தாமரைவாழ் செய்ய மடவனமே?
ஓரிதழ்த் தாமரையை யுண்!"

– அகத்தியர் குணபாடம்

ஓரிதழ் தாமரை என்னும் இந்த அரிய வகை மூலிகை ஆண்களை வலுவாக்கும் அற்புத சஞ்சீவி என்றே போற்றப்படுகிறது. ஒரே இதழ் கொண்டு, வெளிர் சிவப்பு நிறம் கொண்டிருப்பதால் இது ஓரிதழ் தாமரை எனப்படுகிறது. வயோலேசியே (Violaceae) குடும்பத்தைச் சேர்ந்த இது மானாவாரியாக எங்கும் கிடைப்பது.

'ரத்தின புருஷ், ரத்னாயுரஷரி' என்று ஆயுர்வேதம் கொண்டாடும் இந்த மூலிகை இலை, தண்டு, பூ, வேர், காய் என முழுவதும் பயன் தரக்கூடியது. ஓரிதழ் தாமரையின் இலையை காலையில் வெறும் வயிற்றில் மென்று சாப்பிட்டு, பால் குடித்து வந்தால் ஆண்மைக் குறைவு நீங்கி பலம் பெருகும். ஓரிதழ் தாமரையின் சமூலத்தையும் உண்டு வர நல்ல பலன் கிடைக்கும். ஓரிதழ் தாமரையின் பூக்களை காய்ச்சி கஷாயம் செய்து குடித்து வந்தால் நோய்களால் மெலிந்த உடல் மீண்டும் பலம் பெறும்.

இளமையிலேயே முதுமைத் தோற்றம் கொண்ட இளைஞர்களுக்கு இந்த மூலிகை நல்ல பலன் தரும். ஆண்களுக்கு வரும் மேகவெட்டை, ஆண்மைக் குறைபாடு, குழந்தையின்மை பிரச்னை, தாம்பத்யத்தில் பிரச்னை போன்ற பல குறைபாடுகளுக்கு இந்த லேகியம் பயன் தரும்.

உடல் எடையைக் குறைக்க, ஆஸ்துமாவில் இருந்து விடுபட, சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் பிரச்னைகள் நீங்க, விஷக் காய்ச்சல் குணமாக என்று பலவித பயன்கள் இந்த மூலிகையால் உண்டு. உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றி ராஜ உறுப்புகளான சிறுநீரகம், கல்லீரல், மண்ணீரல், நுரையீரல் போன்றவற்றைப் பாதுகாக்கவும் இது உதவுகிறது. மேலும் கடுமையான உழைப்பால் உண்டாகும் உடல்வலியை, அசதியை நீக்கவும் இது பயன்படுகிறது. ஓரிதழ் தாமரையில் அதிக அளவு ஆன்டிஆக்ஸிடென்ட் இருப்பதால் இது வலி நிவாரணியாக உள்ளது. நீரிழிவு நோய்க்கும் இது அருமருந்து என்கிறார்கள் சித்தர்கள்.

## தெய்வ மூலிகைகள் 6

ரத்தத்தில் உள்ள கொழுப்பை குறைக்கும். தூக்கமின்மையை சரிப்படுத்தும். ரத்தசோகை, உடல் மந்தம் போன்றவற்றை சரியாக்கும். ரத்தத்தில் ஹீமோகுளோபினை இது அதிகரிக்கச் செய்வதால் இது உற்சாகம்



# உடலை வஜ்ஜிரமாக்கும் ஓரிதழ் தாமரை!

உண்டாக்கும் மூலிகை என்றும் கூறப்படுகிறது. இரும்புச்சத்து அதிகம் கொண்ட மூலிகை என்பதால் இது உடலுக்கு நல்ல பலத்தை அளிக்கும். மேனிக்கு பளபளப்பைத் தந்து இளமையை அளிக்கும். தொப்பை குறையும். வயிற்றுப்போக்கு நீங்கும். உடல் சூடு மட்டுப்படும். வெள்ளைப்படுதல் மறையும். சிறுநீர் பெருக்கும். உடல் வறட்சி, நாவறட்சி நீங்கும். நாடி சீராகும். பித்தம் தெளியும். கண் பார்வை தெளிவாகும். காமாலை அண்டாது. முழு ஆரோக்கியம் தந்து உடலை வஜ்ஜிரம் போல ஆக்கும். நுரையீரல் நோய்கள், இதய நோய்கள், தலைவலி போன்ற 42 வகை நோய்களை இது குணமாக்கும். கருத் தரித்தல் தொடர்பான பெண்களின் பிரச்னைக்கும் இது அருமருந்து எனலாம். நல்லெண்ணெயில் இதைப் போட்டு காய்ச்சி தலைக்குத் தேய்த்துக் கொள்ள முடி நன்கு வளரும். பொடுகு, ஈறு, பேன் பிரச்னைகள் இருக்காது. பாலியல் நோய்களுக்கும் இது அருமருந்து.

ஓரிதழ் தாமரையின் சமூலத்தைப் பொடியாக்கி தேன் அல்லது பனை வெல்லத்துடன் சேர்த்து பசும்பாலில் கலந்து இரவில் குடித்து வந்தால் தாது விருத்தி உண்டாகும். இந்த மூலிகையால் உருவாகும் லேகியம், பொடி, சூரணம் என அனைத்துமே பயன் மிக்கவை. ஆனால், தரமானதாகப் பார்த்து வாங்கவும். தங்கச் சத்து அதிகம் கொண்ட இந்த மூலிகை ஆண்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

கருவுற்ற பெண்கள் இந்த மூலிகையை பயன்படுத்தவே கூடாது. இது கருவைக் கலைத்துவிடக் கூடிய அளவுக்கு வீரியமிக்க மூலிகை. மேலும் இந்த மூலிகையை எடுத்துக் கொள்ளும்போது கடுமையான பத்தியம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இந்த மூலிகை வேலை செய்யாது. மது, மாது, புகை, கோழிக்கறி, புளிப்பு, சூடான உணவு கூடாது. புளிப்பில்லா தயிர், பால், மோர், இளநீர் அதிகம் எடுக்க வேண்டும். அளவு அதிகமானால் இந்த மூலிகையே விஷமாகும் ஆபத்து உள்ளது.

எனவே, தானாக நீங்களே இந்த மூலிகையை எடுத்துக் கொள்ளாதீர்கள். தகுந்த மருத்துவரிடம் ஆலோசித்து உங்கள் உடம்புக்கு ஏற்ற வகையில் இதை எடுத்துக் கொள்ளவும்.

சுவாமி கமலாத்மானந்தர்

# தீபாவளி தேசிய திருவிழா!




தீப + ஆவளி ஆகிய இரண்டு சொற்களும் சேர்ந்து தீபாவளி என்று ஆயிற்று. 'ஆவளி' என்றால் 'வரிசை' என்று பொருள். எனவே 'தீபாவளி' என்பதற்கு 'தீபங்களின் வரிசை' அல்லது 'விளக்குகளின் வரிசை' என்று பொருள். தீபாவளியை வடஇந்தியாவில் 'தீவாலி' என்றும் அழைக்கிறார்கள். தீபாவளி ஐப்பசி மாதம் சதுர்த்தசி திதியில் வருகிறது.

இந்தியா முழுவதும் எல்லாத் தரத்தைச் சேர்ந்த மக்களாலும் கொண்டாடப்படும் ஒரே பண்டிகையாக தீபாவளி விளங்குகிறது. எனவே தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்தும் தீபாவளியை 'இந்தியாவின் தேசிய விழா' என்று கூடச் சொல்லலாம்.

இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் பெரியவர்கள், சிறியவர்கள், ஆண், பெண், கற்றவர்கள், கல்லாதவர்கள், ஏழை எளியவர்கள் உட்பட எல்லோரும் நீராடி, புத்தாடை உடுத்தி, இறைவனை வழிபட்டு, தின்பண்டங்கள் பலவற்றைத் தாங்களும் உட்கொண்டு - பிறரையும் உட்கொள்ளச் செய்து மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் இனிய விழாவாக தீபாவளி விளங்கி வருகிறது.

பண்டைய தமிழ் நூல்களில், பழந்தமிழ் இலக்கியங்களில் தீபாவளி பற்றிய செய்தி எதுவும் இடம் பெறவில்லை. தீபாவளி விழா தோன்றியது பற்றி பல கதைகள் வழங்கி வருகின்றன. அவற்றில் சில... ஸ்ரீராமர் 14 ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டார். வனவாசத்தின் இறுதியில் அவர் ராவணனை வதம் செய்தார். ராவணன் வதம் முடிந்த பிறகு ஸ்ரீராமர் அயோத்திக்குத் திரும்பியபோது, அயோத்தி

மக்கள் தங்கள் வீடுகளில் தீபங்களை ஏற்றி வைத்து அவரை வரவேற்றார்கள். அந்த நாளே பிற்காலத்தில் தீபாவளிப் பண்டிகையாக ஆயிற்று.

பிரகலாதனின் பேரனான அசுர மன்னன் மகாபலி அரியணை ஏறிய நிகழ்ச்சி ஒரு தீபாவளியன்று நடைபெற்றது. திருமால் வாமன அவதாரம் எடுத்து மகாபலி சக்கரவர்த்தியிடம் சென்று மூன்றடி நிலம் யாசித்தார். வாமனர் கேட்டபடியே மூன்றடி நிலம் தருவதாக மகாபலி ஒப்புக்கொண்டான்.

வாமனர் தன் ஓர் அடியால் முதல்நாள் பூமியையும், மற்றோர் அடியால் இரண்டாம் நாள் விண்ணையும் அளந்தபிறகு, மூன்றாம் நாள் தன் திருவடியை மகாபலியின் தலையில் வைத்து அழுத்தி அவனைப் பாதாள லோகத்திற்கு அனுப்பினார்.

> மனிதனிடம் உள்ள உயர்ந்த தெய்வ இயல்புக்கும், கீழான அசுர இயல்புக்கும் எப்போதும் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடந்து கொண்டே இருக்கிறது. இந்தப் போராட்டத்தின் முடிவில் அசுர இயல்பு தோற்று, தெய்விக இயல்பு வெற்றி பெறுகிறது; தர்மம் வெற்றி பெறுகிறது; சத்தியம் வெற்றி பெறுகிறது. இதுவே நரகாசுரன் வதம் என்ற கதை உணர்த்தும் தத்துவமாகும்.

அந்தச் சமயத்தில் மகாபலி, “பகவானே! வருடத்திற்கு ஒரு முறை நான் பூமிக்கு வர விரும்புகிறேன். அந்த நாளை மக்கள் தீபங்கள் ஏற்றி மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதற்கு அருள் புரியுங்கள்” என்று பிரார்த்தனை செய்தான். அவனது பிரார்த்தனையை பகவானும் ஏற்று அருள் புரிந்தார். அதுமுதல் தீபாவளி கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டது.

இப்போதும் தீபாவளி நாளன்று வட இந்தியாவில், மகாராஷ்டிர மாநிலம் போன்ற சில இடங்களில் மகாபலியின் உருவச்சிலையை வைத்து பூஜிக்கும் வழக்கம் இருந்து வருகிறது. மகாராஷ்டிர மாநிலத்தில் தீபாவளி நான்கு நாள்கள் கொண்டாடப்படும் பெருவிழாவாக விளங்குகிறது.

மகாவிஷ்ணுவிற்கும் மகாலட்சுமிக்கும் திருமணம் நடந்த நாளே தீபாவளி பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. அதனால் தீபாவளியை ‘லட்சுமி பரிணய (திருமண) தினம்’ என்றும் அழைக்கிறார்கள். தீபாவளியன்று விடியற்காலையில் வீட்டில் தீபம் ஏற்றி அதை லட்சுமியாக நினைத்து வணங்கவேண்டும் என்பது மரபு.

நரகாசுரன் என்ற அஞ்ஞானம் தோற்று, ஞானம் என்ற நாராயணன் வெற்றி பெற்ற நாள்தான் தீபாவளி

உலகியல் சிந்தனைகளிலேயே மூழ்கித் திளைத்திருக்கும் மனிதனை ஆன்மிகச் சிந்தனைகளை நோக்கிச் செலுத்தும் நாளே தீபாவளி.



மனிதனிடம் உள்ள உயர்ந்த தெய்வ இயல்புக்கும், கீழான அசுர இயல்புக்கும் எப்போதும் உள்ளத்தில் ஒரு போராட்டம் நடந்து கொண்டே இருக்கிறது. இந்தப் போராட்டத்தின் முடிவில் அசுர இயல்பு தோற்று, தெய்விக இயல்பு வெற்றி பெறுகிறது; தர்மம் வெற்றி பெறுகிறது; சத்தியம் வெற்றி பெறுகிறது. இதுவே நரகாசுரன் வதம் என்ற கதை உணர்த்தும் தத்துவமாகும். நரகாசுரனின் கொடும்பாவியைத் தீ வைத்து எரிக்கும் குறியீடாகவே தீபாவளியன்று பட்டாசுகள் வெடிக்கும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது.

ஸ்ரீகிருஷ்ணர் உலகில் தன் அவதாரப் பணி முடிந்ததும், பூவுலகை விட்டு மறைந்து வைகுண்டம் திரும்பிய நிகழ்ச்சி ஒரு தீபாவளியன்று நடைபெற்றது. சாவித்திரி இறந்த தன் கணவன் சத்தியவான் உயிரை யமனிடமிருந்து மீட்ட நிகழ்ச்சி ஒரு தீபாவளியன்று நடந்ததாகக் கூறப்படுகிறது.

ஆகாச கங்கை, பகீரதன் செய்த தவத்தால் பூமிக்கு இறங்கி வந்தாள். அப்படி அவள் பூமியில் இறங்கி ஓட ஆரம்பித்த நாளே தீபாவளி என்றும் கூறுவர். அப்படிப் பார்த்தால் கங்கை நதி பூமியில் அவதரித்த நாள்தான் தீபாவளி.



தீபாவளியன்று விடியற்காலையில் எல்லா நீர்களிலும் கங்கை எழுந்தருளியிருப்பதாகவும், அந்த விடியற்காலைப் பொழுதில் எண்ணெயில் லட்சுமி எழுந்தருளியிருப்பதாகவும் ஐதிகம்.இதையே, “ஜலே கங்கா தைலே லட்சுமி தீபாவளி வஸேத்” என்று துலா புராணம் குறிப்பிடுகிறது.

தீபாவளியன்று காலையில் எண்ணெய் தேய்த்து நீராடுவது கங்கையில் நீராடிய பலனைத் தரும் என்பது பெரியோர்களின் கருத்தாகும். அன்று காலையில், “நீங்கள் நீராடிவிட்டீர்களா?” என்ற கருத்தில் ஒருவரை ஒருவர், “கங்கா ஸ்நானம் ஆயிற்றா? ” என்று கேட்கும் வழக்கம் தென்னிந்தியாவில் இருந்து வருகிறது.

கங்கை என்பது ஞான சொரூபம். தீபாவளியன்று கங்கையில் நீராடுவது, மனிதன் எப்போதும் ஞானத்தில் திளைத்திருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. யமுனைநதிக் கரையில் வாழ்பவர்கள் தீபாவளி நாளில் யமுனையில் நீராடுவது, நன்மைகளைத் தரவல்ல புண்ணியச் செயல் என்று கருதுகிறார்கள்.

வட இந்தியாவில் பெண்கள் மகாலட்சுமியை வரவேற்கும் பொருட்டு தீபாவளி நாளன்று, ‘ரங்கோலி’ எனப்படும் அழகிய பல வண்ணக் கோலங்களைப் போடும் வழக்கம் இருந்து வருகிறது. வட இந்தியாவில் தீபாவளி லட்சுமி பூஜையாக விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. அன்றுதான் வியாபாரிகள், அந்த ஆண்டின் புதிய கணக்கு புத்தகத்தில் மஞ்சளால் ஸ்வஸ்திகா எனப்படும் மங்களக் குறியிட்டு புதிய கணக்கு எழுத ஆரம்பிக்கிறார்கள்.

ஸ்ரீகிருஷ்ணன் சிறுவனாக இருந்தபோது கோவர்த்தன மலையைத் தூக்கிப் பிடித்து பெருமழையிலிருந்து மக்களைக் காப்பாற்றிய நிகழ்ச்சி ஒரு தீபாவளி நாளில் நடைபெற்றது. அதை நினைவு கூர்ந்து வட இந்தியாவின் சில பகுதிகளில் தீபாவளி, கோவர்த்தன் பூஜையாகக் கொண்டாடப்படுகிறது. அன்று சிறப்பாக அன்னதானம் செய்கிறார்கள்.

வட இந்தியாவில் தீபாவளியன்று ஆறு, குளம் போன்ற நீர் நிலைகளில் பெண்கள் தீபங்கள் ஏற்றி மிதக்க விடுவார்கள். அந்த தீபங்கள் மூழ்காமலும், அணையாமலும் நீரில் மிதந்து சென்றால் அந்த ஆண்டு முழுவதும் தங்களுக்கு சுபிட்சமான நல்வாழ்க்கை அமையும் என்ற நம்பிக்கை அவர்களிடையே நிலவுகிறது.

குஜராத்தில் தீபாவளியை ஐந்து நாள் விழாவாகக் கொண்டாடுகிறார்கள். மத்திய பிரதேச மக்கள் தீபாவளி நாளன்று விஷ்ணு பூஜை செய்கிறார்கள்.

வங்காளத்தில் தீபாவளியை காளிபூஜையாகக் கொண்டாடுகிறார்கள். அந்த நாளை வங்காளிகள் செல்வத் திருமகளான ஸ்ரீதேவியை வரவேற்று, மூதேவியை விரட்டும் நாள் என்று கருதுகிறார்கள். குஜராத்திலும், கிழக்காசிய

நாடுகளிலும் தீபாவளி செல்வத்தின் அதிபதியான குபேரனைப் பூஜிக்கும் குபேர பூஜையாகக் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுவதைப் போல, ஹிமாச்சலப் பிரதேச மக்களும், ராஜஸ்தான் மக்களும் தீபாவளியன்று மாடுகளை நீராட்டி, அலங்கரித்து கோபூஜை செய்கிறார் கள்.

ராஜஸ்தான் மக்களுக்கு தீபாவளி, லட்சுமியையும் ஸ்ரீராமரையும் பூஜிக்கும் நாளாக விளங்குகிறது. அன்று அவர்கள் தங்கள் முன்னோர்களின் வீரத்தை நினைவுபடுத்திக்கொள்ளும் விழாவாகவும் தீபாவளியைக் கொண்டாடுகின்றனர். அன்று அவர்கள் பலவிதமான வீர விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர்.

தமிழ்நாட்டில் கார்த்திகை தீபம் சமயத்தில் வீடுகளில் தீபங்கள் ஏற்றும் வழக்கம் இருந்து வருகிறது. ஆனால், வடஇந்தியாவில் ஒளித்திருநாளாக விளங்கும் தீபாவளியன்று இரவு வீட்டின் எல்லா இடங்களிலும் தீபங்கள் ஏற்றி வைக்கிறார்கள். அவ்விதம் வீட்டில் தீப ஒளி பரவும் இடங்களில் திருமகள் வந்து குடியிருப்பாள் என்பது நம்பிக்கை.



“ஆறுமுகம் கொண்ட முருகப்பெருமானை ஆறு ஆதார ஸ்தானங்களில் தீபமேற்றி வழிபடுவது தீபாவளியாகும்” என்று கௌமாரம் கூறுகிறது. தீபாவளி எப்போதும் அமாவாசை நாளன்றுதான் வரும். இறந்த நம் முன்னோர்களுக்குத் தீபாவளி அமாவாசை தினத்தில் தர்ப்பணம் கொடுப்பது மிகவும் நல்ல பலனைத் தரும்.

சந்திரகுப்த விக்கிரமாதித்த மன்னனுக்கு ஒரு தீபாவளி நாளன்று முடிசூட்டு விழா நடைபெற்றது. அது முதல் ‘விக்கிரம சகாப்தம்’ என்ற ஆண்டுகளைக் கணக்கிடும் வழக்கம் தோன்றியது. ஆதிசங்கரர் ஞான பீடங்களை ஒரு தீபாவளி நாளன்று ஸ்தாபித்தார் என்று கூறப்படுகிறது. ஆர்ய சமாஜம் நிறுவிய சுவாமி தயானந்த சரஸ்வதி ஒரு தீபாவளி நாளன்றுதான் மகாசமாதி அடைந்தார்.

காசியில் பிரசித்திப் பெற்ற அன்னபூரணி கோயில் இருக்கிறது. இந்தக் கோயிலில் தீபாவளி சமயத்தில் மூன்று நாள்களுக்கு அன்னபூரணி தங்க அன்னபூரணியாகத் தரிசனம் தருகிறாள்.

பவிஷ்ய புராணம் என்ற நூலிலுள்ள ஒரு சுலோகம், “தீபாவளி நாளன்று இரவு தொடங்கும் நேரத்தில் வீட்டின் வெளிப்புறம் தீபங்கள் ஏற்றினால் யமதர்மனுக்கு மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்படும். அதனால் அந்த வீட்டில் யாருக்கும் அகால மரணம் - துர்மரணம் ஏற்படாது; யமனால் பயமில்லை; நரகத்திற்குச் செல்ல வேண்டிய பயமில்லை; நரகம் செல்லமாட்டார்கள்” என்று குறிப்பிடுகிறது. தீபாவளி வாழ்த்துகளை வழங்குவதும் பெறுவதும் மக்களிடையே இனிய நல்லுறவுகளை வளர்க்கிறது.



தீபாவளியன்று விடியற்காலையில் நாம் நீராடும்போது இறைவனை நினைத்து, இறைவன் திருவருள் துணையோடு நம்மிடம் உள்ள நரகாசுரனைக் குறிக்கும் அசுர குணங்களுக்கும், மிருக குணங்களுக்கும் ஒரேயடியாகத் தலைமுழுகி விட வேண்டும். அதோடு நம் வீட்டில் இருள் விலக விளக்கு ஏற்றுவது போல், நம் உள்ளத்தில் ஞானவிளக்கேற்றி அஞ்ஞான இருளை நிரந்தரமாக ஒரேயடியாக நீக்கிவிட வேண்டும் - தீபாவளியன்று நம் உடல் தூய்மை அடைய வேண்டும் - அன்றைய தினம் பட்டாசுகளைச் சுடுவதைப் போல, இறைவனின் நாமங்களைச் சொல்லி நம்மிடமுள்ள தீய குணங்களைச் சுட்டுப் பொசுக்கிவிட வேண்டும். இப்படி நாம் செய்வோமானால் அதுவே நாம் உண்மையில் தீபாவளி கொண்டாடியதாகும்.

டாக்டர் ப.சரவணனுடன் ஒரு நேர்காணல்
சந்திப்பு: இரா.பொன்னாண்டான்

# ‘மனித உடல் நோய்களிலிருந்து மீள்வதற்கான கொடையே சித்த மருத்துவம்’

கோவை கஸ்தூர்பா காந்தி நினைவு சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் தலைமை மருத்துவர் டாக்டர் ப.சரவணன் அவர்களை ஓம் சக்தி மாத இதழுக்காக சந்தித்து உரையாடினோம்.

**கேள்வி:** சித்தமருத்துவம் என்கிற பயன்பாடு எத்தனை காலமாக பின்பற்றப்பட்டு வருகிறது?

**பதில்:** சித்தமருத்துவத்தின் வரலாறு என்று பார்த்தால் மனித இனம் இந்த உலகில் தோன்றியதில் இருந்தே உருவானது என்றுதான் சொல்கிறார்கள். சிவபெருமான் உமையம்மைக்குச் சொல்லி அவர் நந்தியெம்பெருமானுக்கு சொல்லி அவர் வழியாக 18 சித்தர்களும் அறிந்து உலகுக்கு அளித்த ஒரு மருத்துவ முறைதான் சித்த மருத்துவம். மனிதன் தோன்றும்போதே நோயும் தோன்றிவிட்டது. சித்த மருத்துவமானது, மனித உடல் நோயில் இருந்து மீள்வதற்காக வழங்கப்பட்ட கொடை என்றே சொல்லலாம். மனிதன் நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு என்னும் ஐந்து நிலைகளையும் கடந்து நீண்ட காலம் நோயின்றி வாழ இறைவன் நமக்குக் கொடுத்த ஒரு வரம் சித்த மருத்துவம். நமது பண்டைய இலக்கியங்களில் மருத்துவம் சம்பந்தமான ஏராளமான செய்திகள் விரவிக் கிடக்கின்றன.

**கேள்வி:** சித்தமருத்துவம் இப்போது எந்தெந்த நாட்டில் பயன்பாட்டில் உள்ளது என்று சொல்ல முடியுமா?

**பதில்:** இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் ஆதிகாலத்திலிருந்து இன்றைய நாள்வரை சித்த மருத்துவம் நல்ல விழிப்பு உணர்வோடு பயன்பாட்டு வழக்கில் உள்ளது. இலங்கையில் தமிழ்






Rotary
ரோட்டரி கிளப் சக்தி மகாலிங்கபுரம்
சக்தி ஆட்டோ காம்பனண்ட் லிமிடெட்
பல்லகவுண்டன் பாளையம் மற்றும்
இலவச சித்த மருத்துவ முகாம்
நாள் : 08.12.2019 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 09.30 முதல் மதியம் 01.00 மணி வரை
இடம் : அம்மா பூங்கா சமுதாயக் கூடம், பல்லகவுண்டன் பாளையம்.
பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுவீர் !







> சிவபெருமான் உமையம்மைக்குச் சொல்லி அவர் நந்தியெம் பெருமானுக்கு சொல்லி அவர் வழியாக 18 சித்தர்களும் அறிந்து உலகுக்கு அளித்த ஒரு மருத்துவ முறைதான் சித்த மருத்துவம்.



## குணமடைந்தவர்களின் குரல்...

இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சில நோயாளிகளை தொடர்பு கொண்டபோது அவர்கள் தங்களுடைய அனுபவங்களை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்கள். கோவை வெள்ளளூரைச் சேர்ந்த திவ்யா என்பவர் பேசுகையில் “எனக்கு 10 வருடங்களாக முகத்தில் பரு மற்றும் கரும்புள்ளிகள் இருந்தன. நானும் பல மருத்துவமனைகளுக்கு சென்று பார்த்து எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையில் கோவை கஸ்தூர்பா காந்தி நினைவு சித்த மருத்துவமனையில் வந்து டாக்டர் சரவணன் அவர்களிடம் சிகிச்சை பெற்றேன். இப்போது எனது முகத்தில் பருக்கள், கரும்புள்ளிகள் குறைந்து அதில் நல்ல முன்னேற்றம் தெரிகிறது... நானும் தொடர்ந்து அங்கு சிகிச்சை பெற்று வருகிறேன்..” என்று நன்றியோடு மருத்துவமனையையும் டாக்டரையும் நினைவு கூர்கிறார்.

கோவை சாய்பாபா காலனியைச் சேர்ந்த புஷ்பராஜ், “எனக்கு கடந்த 7 மாதமாக முழங்கால் வலி இருந்து வந்தது. இதனால் எழுந்திருக்கவும் நடக்கவும் இயலாமல் அவதிப்பட்டு வந்தேன். இது சம்பந்தமாக பல டாக்டர்களையும் சென்று பார்த்தேன். அவர்கள், வலிக்கு பெயின் கில்லர் மாத்திரை கொடுத்து வந்தார்கள். அந்த மாத்திரை சாப்பிடும்போது வலி நின்றுவிடும். அதன் பின் மறுபடியும் வலி வந்துவிடும். இது நாளடைவில் அதிகமானது. இந்த நிலையில் எனது மைத்துனர் ஒருவர் கோவை வரதராஜபுரத்தில் உள்ள இந்த சித்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று நோயிலிருந்து குணம் பெற்றதாகவும் – எந்த பக்கவிளைவும் இல்லை என்றும் கூறி, என்னையும் அங்கு சென்று மருத்துவர் சரவணன் அவர்களைப் பார்க்கச் சொன்னார்கள். நானும் அதே போல் டாக்டர் சரவணன் அவர்களைச் சந்தித்து சிகிச்சை பெற்று வந்தேன். இப்போது நல்ல நிலையில் உள்ளேன். முன்பு 10 நிமிடம் கூட எழுந்து நிற்க முடியாத நிலையில் இருந்த நான் இப்போது நன்கு எழுந்து நிற்கிறேன் நடக்கிறேன். எந்த பக்கவிளைவுகளும் இல்லை “ என்றார்.

**மேலும் தொடர்புக்கு:** டாக்டர் ப.சரவணன் பி.எஸ்.எம்.எஸ்., தலைமை மருத்துவர் (செல்.9043212789, கஸ்தூர்பா காந்தி சித்த மருத்துவ மையம், கோவை.

சித்தமருத்துவ பல்கலைக்கழகமே உள்ளது. மேலும் சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ் தேசங்களிலும், துபாயிலும், ஆஸ்திரேலியாவிலும் இங்கிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களால் வளர்ந்து வருகிறது..

**கேள்வி:** கஸ்தூர்பா காந்தி நினைவு சித்த மருத்துவமனை எப்போது தொடங்கப்பட்டது?

**பதில்:** அய்யா அருட்செல்வர் அவர்கள் இயற்கையாகவே நமது பாரம்பர்யக் கலைகள் மீது மிகுந்த பற்று கொண்டவர்கள். அதன் ஒரு பகுதியாக சித்த மருத்துவம் என்ற பெயரில் தேர்ச்சியும் அனுபவமும் பெற்ற நாட்டு வைத்தியர்களின் ஆதரவோடு 1986 –களில் தொடங்கினார்கள். அப்போது பஸ்பங்கள், செந்தூரங்கள், லேகியங்கள், சூரணங்கள் எனத் தயார் செய்து நோயாளிகளுக்கு கொடுத்து வந்தார்கள். பிறகு அதனுடைய தொடர்ச்சியாக படித்த பட்டதாரி சித்த மருத்துவர்களை வைத்து கடந்த 1991-ல் முறையாக முழுமையாக அங்கீகரிக்கப்பட்ட சித்த மருத்துவமனையாக இது ஆரம்பிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

**கேள்வி;:** தற்போது இந்த மருத்துவமனையில் எத்தனை மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள்? பணியாளர்களைப் பற்றியும் சொல்லுங்களேன்

**பதில்:** தற்போது மருத்துவர் என்று பார்த்தால் நான் மட்டும்தான். தலைமை மருத்துவராக பணி புரிந்து வருகிறேன். இங்கு பயிற்சி பெறுவதற்காக பட்டதாரி சித்த மருத்துவர்கள் பலரும் வந்து பயிற்சி பெற்றுச் செல்கிறார்கள். தற்போது மருந்து செய்யும் அனுபவம் வாய்ந்த மருத்துவ உதவியாளர்கள் இங்கு பணிபுரிந்து வருகிறார்கள்.



**கேள்வி;:** இந்த சித்த மருத்துவமனையில் என்ன மாதிரியான மருந்துகள் தயாரிக்கிறீர்கள்?

**பதில்:** இப்போது நாங்கள் 40 வகையான மருந்துகள் தயாரிக்கிறோம். இவை முழுக்க முழுக்க மூலிகைகளால் மட்டுமே தயாரிக்கப்படுகிறது. உதாரணமாக கபசுரக் குடிநீர், சர்க்கரை நோய்க்கான ஆவாரைக் குடிநீர், சிறுநீரகத் தொற்று நோய்க்கான நெருஞ்சில் குடிநீர், அஸ்வகந்தா சூரணம், லேகியம், நெல்லிக்காய் லேகியம், மூட்டுத் தேய்மானத்தை குணமாக்கக்கூடிய குங்கிலியத் தைலம், மூலத்தை குணமாக்கும் குடோரி எண்ணெய், சொரியாசிஸ் எனப்படும் செதில், மரு நோய்க்கான வெட்பாலைத் தைலம், பல்பொடி, பெண்களுக்கு முடி உதிர்வதற்கான சிகிச்சை, பொடுகுத் தொல்லையிலிருந்து மீள்வதற்கும் மருந்து கொடுக்கிறோம்.

இது மட்டுமல்லாது நீடித்த நோய்களான சர்க்கரைநோய், புற்றுநோய், இருதய நோய்கள், இருதய பலவீனம், குழந்தையின்மைக்கான சிகிச்சை இவற்றுக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.



**கேள்வி:** மருந்துகள் தயாரிப்பதற்கான மூலப் பொருள்கள் எங்கு, எப்படி கிடைக்கிறது?

**பதில்:** மூலப்பொருள்களைப் பொறுத்தவரை சிலவற்றை வெளியிலிருந்து வாங்குகிறோம். குறிப்பாக கிராமப்புறங்களில் விவசாயிகளிடம் நேரடியாகச் சென்று மருத்துவரின் நேரடிப்பார் வையில் வாங்கி தரமான மருந்துகளாகத் தயாரிக்கிறோம்.

**கேள்வி:** வேறு முறையிலான சிகிச்சைகள் எதுவும் செய்கிறீர்களா?

**பதில்:** சக்தி சுகர்ஸ் சேர்மன் டாக்டர் ம.மாணிக்கம் அவர்களுடைய அறிவுறுத்தலுக் கிணங்க 'பழைய நோய்களுக்கு புதிய மருந்துகள்' என்ற ஒரு பரீட்சார்த்த முறையில் புதிதாக மருந்துகள் தயாரித்து நோயாளிகளை குணப்படுத்துவதில் ஆராய்ச்சிப்பூர்வமாக ஈடுபட்டு வருகிறோம். இதுவும் நோயாளிகளுக்கு நல்ல பலனையே அளித்து வருகிறது. குறிப்பாக சிறுநீரக பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு நோய்க்கான மருந்துகளை சித்த மருத்துவத்தின் மூலம் கொடுத்து அவர்களை நோயிலிருந்து மீட்டு வருகிறோம்.

**கேள்வி:** மிராக்கிள் – ஊட்டச்சத்து பானத்தின் செயல்திறன் எப்படி உள்ளது?

**பதில்:** கோவிட் – 19 பாதித்த நோயாளிகளுக்கு நாங்கள் சித்த மருத்துவ மருந்துகள் கொடுத்து வந்த நிலையில், அப்போது அதனுடன் மிராக்கிள் விட்டமின் -சி பானம் கொடுத்துப் பார்த்தோம். இதை ஒரு பரீட்சார்த்த முறையில்தான் முதலில் செய்தோம். ஆனால், அது நல்ல பலனைத் தரவே செய்தது.

குறிப்பாக கோவை மாவட்டம் இ.எஸ்.ஐ மருத்துவமனையில் கோவிட் பாதித்த கொரோனா நோயாளிகளுக்கு மிராக்கிள் பானம் வழங்கப்பட்டு வந்தது. இதற்கு நல்ல பலன் கிடைத்தது. இதை அரசும் பாராட்டி பரிந்துரை செய்துள்ளது.

உடலில் உள்ள செல்களின் ஆரோக் கியத்தை மேம்படுத்தும் கிரியா ஊக்கியாகவே மிராக்கிளின் செயல்பாடு உள்ளது.கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்ட ஆறாயிரம் நோயாளிகளுக்கு எங்கள் மருத்துவமனையில் சித்தமருத்துவ மருந்தோடு மிராக்கிளையும் சேர்த்துக் கொடுத்துப் பார்த்ததில் அறிவியல் பூர்வமாக பத்து நாள்களின் குணமாக வேண்டிய நோய் ஆறு நாள்களில் கொரோனா அறிகுறிகள் குறைந்து உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. புற்றுநோய் செல்களை அழிப்பதற்காக டாக்டர் ம. மாணிக்கம் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் ஒரு பகுதியாகத்தான் மிராக்கிள் பானம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதே வளாகத்தில் பொள்ளாச்சியில் உள்ளது போல வெல்னெஸ் கிளினிக் விரைவில் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது. அவ்வாறு வந்துவிட்டால் கூட்டு மருத்துவச் சிகிச்சை மூலம் எந்த நோயாக இருந்தாலும் குறைந்த செலவில் நோயாளிகளை நோயிலிருந்து மீட்கலாம்..

**கேள்வி:** கஸ்தூர்பா காந்தி நினைவு சித்த மருத்துவமனை மூலம் சித்தமருத்துவ முகாம்கள் நடத்துவதுண்டா?

**பதில்:** சித்த மருத்துவத்தை வளர்ப்பதற்காக கோயம்புத்தூர் ஏர்போர்ட், சென்ட்ரல் ஜெயில் போன்ற இடங்களில் விழிப்பு உணர்வு முகாம் நடத்தியுள்ளோம். சக்தி ஆட்டோ காம்பொ னொன்ட், ரோட்டரி கிளப் மூலம் விஜய மங்களம் கிராம சுற்று வட்டார மலைவாழ் மக்களுக்கான முகாம்களும் நடத்தியுள்ளோம்.

> "பத்தியம் என்பது நோய்க்குத்தானே தவிர மருந்துக்கு அல்ல. காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளியை எந்த மருத்துவராக இருந்தாலும்; சுடுநீர் குடிக்கச் சொல்வது, எளிய உணவு வகைகளை சாப்பிடச் சொல்வது போன்றதுதான் நோய்களுக்குத் தகுந்தாற்போல் உணவுகளை மாற்றுவதும்."

பிரதி மாதம் 1-வது 3-வது சனிக்கிழமைகளில் சக்தி ஆட்டோ காம்பொனொன்ட் ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கான சித்தமருத்துவ முகாம் நடத்தப்பெற்று வருகிறது.

பிரதி மாதம் 2-வது 4-வது சனிக்கிழமைகளில். சக்திநகர், சர்க்கரை ஆலை வளாகத்தில் வி.எம் கே. மருத்துவமனையுடன் இணைந்து ஆலை ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சித்தமருத்துவ முகாம் நடத்தி சிகிச்சை அளித்து வருகிறோம்.

பிரதி மாதம் 3-வது புதன்கிழமைகளில் ஆர். எஸ் புரம் புரந்தரதாசர் மகாலில் பொதுமக்களுக்கான சித்தமருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது.

**கேள்வி**: **சித்த மருத்துவ மருந்து சாப்பிடும்போதே அலோபதி மருந்துகள் எடுத்துக்கொள்ளலாமா?**

**பதில்:** தாராளமாக எடுத்துக்கொள்ளலாம். சர்க்கரை நோய்க்கான அலோபதி மருந்து எடுத்துக் கொண்டிருப்பவர்களுக்கு சித்த மருத்துவத்தில் தோல் நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதுபோல் மருந்து எடுத்துக் கொள்ளும் தன்மைக்கேற்ப மருத்துவரின் பரிந்துரையின் பேரில் எடுத்துக்கொள்ளலாம்.

**கேள்வி;: சித்த மருத்துவத்தில் ஒரு நோய் குணமடைய எத்தனை காலம் பிடிக்கும்?**

**பதில்:** நோயைப் பொறுத்துத்தான் அதை கணிக்க முடியும் சளி. காய்ச்சலை 3-4 நாள்களில் குணமாக்கலாம். சர்க்கரை, ரத்த அழுத்தம், அல்சர், மூட்டு வலி போன்ற நீண்ட நாள் நோய்கள் அதன் தாக்கத்திற்கேற்ப குணமடையும் நாள்கள் மாறுபடும்.

**கேள்வி;: சித்த மருத்துவம் என்றால் பத்தியம் இருக்கவேண்டும் என்ற ஒரு கோட்பாடு உள்ளதே?**

**பதில்:** பத்தியம் என்பது நோய்க்குத்தானே தவிர மருந்துக்கு அல்ல. காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நோயாளியை எந்த மருத்துவராக இருந்தாலும்; சுடுநீர் குடிக்கச் சொல்வது, எளிய உணவு வகைகளை சாப்பிடச் சொல்வது போன்றதுதான் நோய்களுக்குத் தகுந்தாற்போல் உணவுகளை மாற்றுவதும். உதாரணமாக வாயுக் கோளாறு உள்ளவர்ளை, பருப்பு






வகைகளையும், கொலஸ்ட் ரால் உள்ளவர்களை எண்ணெயில் பொறித்த பதார்த்தங்களையும,; சர்க்கரை நோயாளிகளை இனிப்பு பதார்த்தங் களையும் தவிர்க்கச் சொல்கிறோம்.

**கேள்வி: இந்த மருத்தவமனையின் நோக்கம் என்ன?**

அருட்செல்வர் அவர்களால் தொடங்கப் பெற்ற இந்த மருத்துவமனை தற்போது சக்தி குழுமத்தின் தலைவர் டாக்டர் ம.மாணிக்கம் அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மக்களுக்கு எளிய முறையில் பக்கவிளைவுகள் இல்லாத சிறந்த சிகிச்சை அளிக்கவேண்டும் என்பதே இந்த மருத்துவமனையின் குறிக்கோள். இதன் மூலம் நோயாளிகள் பூரண குணமடையவேண்டும். அதுவே எங்களது நோக்கமாகும். மொத்தத்தில் சத்தமில்லாமல் சாதனை புரிந்து வருகிறது கஸ்தூர்பா காந்தி நினைவு சித்த மருத்துவ மனை.

அவர்களின் மக்கள் நல்வாழ்வுக்கான பணி சிறக்க வாழ்த்துகிறோம்.






வானம் மெல்லத் தூறி அந்த மாலையை அழகாக்கிக் கொண்டிருந்தது. நிர்மலா வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தாள். நாலாவது வீட்டில் பிள்ளைகள் மத்தாப்புகள் கொளுத்திக் கொண்டிருந்தார்கள். மழைச் சாரலில் மத்தாப்பு வெளிச்சம் பட்டு எதிரொளிப்பதுபோல மினுமினுத்தது. நிர்மலாவுக்கு என்னவோ இந்த தீபாவளி அவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது. ஆனால், வீட்டில் அவளைத் தவிர வேறு யாருக்கும் அந்த மகிழ்ச்சியோ கொண்டாட்டமோ தொடங்கவேயில்லை.

தலை தீபாவளிக்கு வரும் மருமகனுக்காக நிர்மலா நேற்றிலிருந்தே பரபரப்பாக பட்சணங்கள் செய்ய ஆரம்பித்திருந்தாள். கூட்டத்தில் போட்டிபோட்டுப் பட்டாசு வாங்கினாள். அந்த நெருக்கடியில் கொரோனா என்பதெல்லாம் அவளுக்கு மறந்துபோயிருந்தது. அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் கடனே என்று கூடவே வந்தார் அவள் கணவர்.

மாப்பிள்ளை பட்டாசு வெடிப்பாரா என்று தெரியாது.

"மாப்பிள்ளைக்கு என்ன மாதிரி பட்டாசு பிடிக்கும்..." என்று ஜாடையாக சம்பந்தியிடம் விசாரித்தாள் நிர்மலா.

"அதை ஏன் கேட்கிறீங்க. ஏழு கழுதை வயசாயிடுச்சி. இன்னும் தீபாவளின்னா பட்டாசு வாங்கிக் குவிச்சுடுவான். இது அதுன்னு இல்லை. பக்கத்துவீட்டு சின்னப் பசங்களை சேர்த்துக்கிட்டு ஆட்டமா ஆடுவான். போன வருஷம்தான் அது நடக்கலை. காரணம், அவங்க அப்பா தவறி ஒரு வருஷம் கூட ஆகலை..."

குரல் மெல்ல ஒடிந்து போவதைக் கண்ட நிர்மலா... "அதனால் என்ன, இந்த வருஷம் சேர்த்துவச்சிக் கொண்டாடிடலாம்" என்று சொல்லி உற்சாகப்படுத்தினாள். நேற்று பட்டாசுக்கடையில் இருந்த பட்டாசுகள் அனைத்திலும் ஒன்றை வாங்கிக் குவித்தாள். அவளுக்கு மாப்பிள்ளைக்குக் குறைவில்லாத, எப்போதும் நினைவில் நிற்கும் ஒரு தீபாவளியைப் பரிசளித்துவிட வேண்டும் என்று தீர்மானம் கட்டிக்கொண்டாள். ஆனால், அத்தனை ஆசைகளும் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக நமத்துப் போவதுபோலத் தோன்றியது.

"ஏய்... மாப்பிள்ளை ஏன் ஒரு மாதிரி இருக்கிறார்... உங்களுக்குள்ள ஏதாவது பிரச்னையா?"

அம்மா இப்படிக் கேட்பாள் என்பதை மகள் எதிர்பார்க்கவேயில்லை.

"அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா... நீயா ஏதாவது கற்பனை பண்ணிக்காதே..."

நிர்மலா பார்த்துக்கொண்டேயிருந்தாள். ஏதோ பிரச்னை இருக்கிறது. மாப்பிள்ளை சிரிக்கிறார், ஆனால் அதில் உயிர் இல்லை. காலையில் சீக்கிரம் எழுந்துகொள்ள வேண்டும் என்று சொன்னபோதுகூட மாப்பிள்ளை தலையாட்டினாரே தவிர பதில் சொல்லவில்லை. மகளோ அந்த நேரத்திலேயே போய் படுத்துக் கொண்டுவிட்டாள்.




# அன்பின் கண்மணிகள்

**எஸ்.லலிதா**

பெரிய பிரச்னை எதுவுமில்லை என்றாலும் ஏதோ மாப்பிள்ளையின் மனதில் ஓடிக்கொண்டேயிருக்கிறது. இரண்டு நாள்களாக அவள் மனதின் ஆசையெல்லாம், மறக்கமுடியாத ஒரு தீபாவளிக் கொண்டாட்டத்தை மாப்பிள்ளைக்குப் பரிசளிப்பதுதான். ஆனால் அது நிறைவேறாது என்று இப்போது அவளுக்குத் தோன்றுகிறது.

----------

இரவு விளக்கு நீல ஒளியைப் பரப்பியிருந்தது. அவன் மெல்ல உள்ளே வந்து கதவை மூடிவிட்டுப் படுக்கையில் படுத்தான். ஜானு உறங்கிவிட்டாளா என்று பார்த்தான். அசைவு இல்லை. தலையணையைச் சரிசெய்துகொண்டு படுத்தான். சில நொடிகளில் அறையின் விளக்கு எரிந்தது. கண்கள் கூட விழித்துப் பார்த்தால் ஜானு நின்றிருந்தாள்.

"என்ன ஆச்சு..."

"அது நான் கேக்கணும்... என்ன ஆச்சு உங்களுக்கு... ஏன் ஏதோ போல இருக்கீங்க?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லையே. நான் சாதாரணமாத்தான் இருக்கேன்"

"பொய் சொன்னாலும் பொருத்தமா சொல்லுங்க. வந்ததுலேர்ந்து அம்மா என்னைக் கேள்விமேல கேள்வி கேட்டு நோகடிக்கிறாங்க. நமக்குள்ள ஏதாவது சண்டையான்னு கேக்குறாங்க. மாப்பிள்ளை தங்கமானவரு. அவர் மனசு கோணுறாமாதிரி நடந்துக்காதன்னு அட்வைஸ் பண்றாங்க. அந்த அளவுக்கு இருக்கு உங்க மூஞ்சி. சொல்லுங்க என்ன பிரச்னை?"

"இதோ பார், எதுவும் இல்லைன்னு சொன்னா நம்பணும். கொஞ்சம் தலைவலி. சரியாயிடும்."

"இதெல்லாம் சும்மாப் பேச்சு. நான் சொல்லவா என்ன காரணம்னு. கோவிச்சுக்கக் கூடாது..."

அவன் ஜானுவையே உற்றுப் பார்த்தான். அவள் உக்கிரமான ஒரு பெண் சிலையைப் போல இருந்தாள்.

"உங்களுக்கு அத்தையை அதான் உங்க அம்மாவைக் கூட்டிக்கிட்டு வரலைன்னு கோபம். நான் அவங்க கட்டாயம் வரணும்னு கூப்பிடலை. அதனால அவங்க வரலை. அதானே..."

அவன் படுக்கையிலிருந்து எழுந்து கொண்டான். அந்த கணத்தில் அறையை விட்டு வெளியே போய்விடவேண்டும்போல் இருந்தது. ஆனால், வெளியே அத்தை இன்னும் விழித்துதான் இருப்பார்கள். தேவையில்லாமல் அவர்களைக் கலவரப்படுத்தியதுபோல் இருக்கும். மெல்ல நடந்து பால்கனி வந்தான்.

ஜானு சில நிமிடம் அமைதியாக இருந்தாள்.

வானத்தில் யார் யாரோ விட்ட வாணவேடிக்கைகள் வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தன. அவன் அதையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். ஜானு அறை விளக்கை அணைத்துவிட்டு பால்கனி சென்று அவனைப் பின்புறம் இருந்து கட்டிக்கொண்டாள். மெல்ல அவன் கழுத்தில் முத்தமிட்டாள்.

"இதோ பாருங்க. அத்தையை இன்வைட்

பண்ணக்கூடாத அளவுக்கு மோசமான மருமகளா நான்... ஒரு விஷயம் யோசிங்க. அங்க இருந்தப்போ அத்தைக்கு ஏதாவது குறை வச்சிருக்கேனா... இல்லை மரியாதைக் குறைவா நடத்தியிருக்கேனா... இந்த நாலு நாள் எங்க அம்மாவீட்டுக்கு வந்திருக்கேன். என் இஷ்டத்துக்கு எழுந்துப்பேன். சாப்பிடுவேன். அத்தையும் வந்தா நான் இந்த சுதந்திரத்தை அனுபவிக்க முடியுமா சொல்லுங்க. புரிஞ்சிக்கோங்க. நாலு நாள் கழிச்சு, யாரு அத்தையைப் பார்த்துக்கப் போறது, நான்தானே. நீங்க புரிஞ்சிப்பீங்கன்னு நினைச்சேன். ஆனா, எனக்குக் கெட்ட பேரு வாங்கிக் கொடுக்காம விடமாட்டீங்க போல... எங்க அம்மாவே என்னை அவ்வளவு கேக்குறாங்க. மத்தவங்க என்ன பேசுவாங்க." ஜானுவின் குரல் மெல்ல உடையத் தொடங்கியது. அவன் திரும்பி அவளை அணைத்துக்கொண்டான்.

"ஏன் இப்படி எல்லாம் பேசுற... எல்லாம் காலைல சரியாயிடும் வா" என்று அவள் கைகளைப் பற்றிப் படுக்கைக்கு அழைத்து வந்தான்.

"உங்களுக்கு உங்க அம்மா எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு எனக்கு எங்க அம்மா முக்கியம். ப்ளீஸ், காலைல கொஞ்சம் நார்மலா இருங்க. இல்லைன்னா, அவங்க உடைஞ்சி போய்டுவாங்க"

ஜானு இதைச் சொன்னபோது அவனுக்கு சொல்வதற்கு பதில் ஏதும் இல்லை. கரங்களைக் கொஞ்சம் இறுக்கி அவளைக் கட்டிக்கொண்டான்.

------

சுரேஷுக்குத் தூக்கம் வரவில்லை. பேசவேண்டியதை எல்லாம் பேசிவிட்டு ஜானு நிம்மதியாக உறங்கிவிட்டாள். சுரேஷ் மெல்ல அவளை விலக்கி விட்டுவிட்டு மீண்டும் பால்கனிக்கு வந்தான். இத்தனை மணிக்கு தான் வெடிக்க வேண்டும் என்னும் சட்டம் வானத்தில் வண்ண வண்ணமாகப் பறந்து வெடித்துக்கொண்டிருந்தது.

தீபாவளி... எவ்வளவு மகிழ்ச்சியான பண்டிகை... சின்ன வயதில் அம்மாவும் அப்பாவும் தங்கள் சக்திக்கு மீறி எப்படியெல்லாம் மகிழ்வித்தார்கள். அதிலும் அம்மா... பண்டிகை நாள்களில் அம்மா எப்போது உறங்குவாள் என்று யாருக்கும் தெரியாது. அவன் உறங்கப் போகும்போதும் அவள் அடுப்படியில்தான் இருப்பாள். பட்டாசு சத்தம் கேட்டு அவன் விழித்துக்கொண்டு பார்க்கும் எந்த நேரத்திலும் அம்மா அடுப்படியிலோ அல்லது சாமி ரூமிலோதான் இருப்பாள். அப்பா மூன்று மணிக்கெல்லாம் எழுந்துகொள்வார். இன்னும் உறங்க விரும்புபவனைப் போலப் பாசாங்கு செய்து எழுந்துகொண்டு பல் துலக்க ஓடுவது வழக்கம். பல் துலக்கியதும் அம்மா கிழக்கு நோக்கி அமர வைப்பாள். கால் சராயை தொடையில் சுருட்டி விடுவாள். பின்பு சூடான எண்ணெய் எடுத்து இரண்டு தொடைகளிலும் 'அச்சுதாமா, பலீர்வாசா, அனுமந்தனா, சகாதேவா, விபீஷணா' என்று சொல்லிக்கொண்டே ஐந்து புள்ளிகளாக வைப்பாள். பின்பு அவற்றை அழிப்பதைப்போலத் தேய்த்துவிடுவாள். பின்புதான் தலையின் உச்சியில் எண்ணெய் வைப்பாள். தலையில் சூடு இறங்கும். 'போதும்' என்றாலும் கேளாமல் தலையைத் தேய்த்துவிடுவாள்.

வழக்கமாக வெற்றிலையைத் தொட்டாலே திட்டும் அம்மா அன்று வெற்றிலையை மடித்துக் கொடுப்பாள். அதன் காரல் புது சுவையாக இருக்கும். வெந்நீரை எடுத்துத் தன் கைமேல் விட்டு என் மேல் படுமாறு குளிக்க ஊற்றுவாள். அதுவே சில நேரம் பொறுக்கமுடியாத சூடாக இருக்கும். குளிரான அந்தக் காலை வேளைக்கு அது அத்தனை இதமாக இருக்கும்.

இருள் விலகாதபோதே அப்பா பட்டாசோடு வாசலுக்கு வந்துவிடுவார். கை கொள்ளாமல் பட்டாசை அள்ளிக்கொண்டு வாசலில் வைத்துவிட்டு ஒன்று ஒன்றாக வெடிக்க வானம் வெளுத்துக்கொண்டே வரும் காட்சி சொர்க்க லோகம் போல இருக்கும்.

நினைவு தெரிந்த நாளிலிருந்து 25 வருடங்கள் அம்மாவுடன்தான் தீபாவளி கொண்டாடி யிருக்கிறேன். தாத்தா பாட்டி இறந்த வருடம் கூட அம்மாவும் அப்பாவும் பட்டாசுகள் வாங்கிக் கொடுத்து, "உனக்கு ஒண்ணும் இல்லைடா... நீ சந்தோஷமா இரு" என்று சொன்னார்கள். அப்பா தவறியதால் போனவருடம் தீபாவளி கொண்டாட எனக்கே மனம் இல்லை. அம்மா சகஜமாக இருக்க முடிந்து தோற்றுப்போனாள். இந்த ஆண்டு தலைதீபாவளி ஆயிற்று. அம்மாவுக்குக் கொஞ்சமேனும் மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டும் என்று மனம் துடித்தது. அதனால், 'அம்மா, நீயும் கூட வாயேன்' என்று எவ்வளவோ சொல்லியும் அம்மா புன்னகை மாறாமல் மறுத்துக்கொண்டேயிருந்தாள்.

ஒருவேளை ஜானு அழைக்க வேண்டும் என்று விரும்பினாளோ என்னவோ... ஜனுவிடம் சொல்லி அம்மாவை அழைக்கச் சொன்னபோது ஜானு சம்பிரதாயமாக ஒருமுறை அழைத்துவிட்டு, 'அப்புறம் உங்க சௌகர்யம்' என்று சொன்னது ஏமாற்றமாக இருந்தது. அம்மாவைப் பிரிந்து தீபாவளி கொண்டாடியதே இல்லை.

எனக்கே இப்படி இருக்கிறதே... அம்மாவுக்கு



> சுரேஷ் மெல்ல அவளை விலக்கி விட்டுவிட்டு மீண்டும் பால்கனிக்கு வந்தான். இத்தனை மணிக்குதான் வெடிக்க வேண்டும் என்னும் சட்டம் வானத்தில் வண்ண வண்ணமாகப் பறந்து வெடித்துக்கொண்டிருந்தது.

எப்படி இருக்கும்... அப்பாவும் இல்லை. அருகில் நானும் இல்லை. அம்மா இந்த நாளை எப்படிக் கடப்பாள்? பரபரப்பில்லாமல் தீபாவளி விடிந்துகொண்டிருக்க ஒரேஇடத்தில் சும்மா அமர்ந்திருக்க வேண்டிய நிலை அம்மாவுக்கு எப்படி இருக்கும்?

சுரேஷுக்கு மனம் என்னவோ செய்தது. காலையில் அம்மாவுக்கு போன் செய்து பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். நிர்மலா அத்தையின் நினைவும் வந்தது. அவர்களுக்காகவாவது கொஞ்சம் மாறத்தான் வேண்டும் என்று எண்ணிக்கொண்டான். அந்த இரவு தாமதமாகவே அவனுக்கு முடிந்தது. நாலு மணி இருக்கும்போதே அறைக் கதவைத் தட்டி அவர்களை எழுப்பிவிட்டாள் நிர்மலா.

-----

சுரேஷ் தான் நார்மலாக இருப்பதைப்போன்று நடந்துகொள்ள ஆரம்பித்தான். காலை வணக்கம் சொன்னான். அத்தையைப் பார்த்து சிரித்தான். பலகாரத்தில் சிறு துண்டைப் பிய்த்து வாயில் போட்டுக்கொண்டான். அத்தை திரும்பி நின்ற போது நீலாவைக் கிள்ளி முத்தம் கொடுத்தான். நிர்மலாவுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

"மாப்பிள்ளைக்கு இன்னும் எண்ணெய் வைக்கலியா..." ஜானுவின் அப்பா சத்தமாகக் கேட்டார். இதோ என ஓடி வந்தாள் நிர்மலா. சுரேஷுக்கு வெட்கமாக இருந்தது.

"வேண்டா அத்தை. நானே வெச்சுக்கிறேன்."

"ஏன் மாப்பிள்ளை... வீட்ல இருந்தா அம்மாதானே வச்சுவிடுவாங்க. நான் உங்க அம்மா இல்லையா... நான் வச்சுவிடக் கூடாதா"

சுரேஷுக்கு அம்மா என்றதும் அதுவரை இருந்த அத்தனை பாசாங்குகளும் தூள் தூளாகிக் கண்ணீர் பெருகியது. அப்படியே கிழக்கு நோக்கிக் கோலத்துக்கு மேல் போட்டிருந்த பலகையில் அமர்ந்தான். நிர்மலா, "நான் சாஸ்திரத்துக்குத் தலையில் வைக்கிறேன் மாப்பிள்ளை. அப்புறம் நீங்க தேய்ச்சுக்கோங்க" என்று சொல்லிவிட்டுத் தலையில் சூடா எண்ணெயை விட்டுத் தேய்த்தாள். சூடு கபாலத்தில் இறங்கியது. அம்மாவின் ஞாபகம் இன்னும் அதிகமானது.

நிர்மலா, எண்ணெய் பாத்திரத்தை சுரேஷ் பக்கம் நகர்த்திவிட்டு வெற்றிலை எடுத்துக் கொடுத்தாள். அங்கிருந்து போகப் போனவள் திரும்பி வந்தாள்.

"அம்மா என்ன சொல்லியிருந்தாலும் இரண்டு பேரும் விட்டுட்டு வந்திருக்கக் கூடாது. தனியா அந்த வீட்ல அவங்க என்ன செய்வாங்க, பாவம். அதான் என் தம்பியைக் காரெடுத்துக்கிட்டுப் போய் கூட்டிக்கிட்டு வரச் சொல்லியிருக்கேன். இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துருவாங்க. அதுக்குள்ள ரெண்டுபேரும் குளிச்சி ரெடியாகுங்க. அடியே ஜானு... மாப்பிள்ளைக்கு நல்லா எண்ணெய் தேய்ச்சுவிடு" என்று சொல்லிவிட்டு அடுக்களைக்குள் நுழைந்துகொண்டாள் நிர்மலா. சுரேஷுக்குக் கண்ணீர் பெருகி வழிந்தது. ஜானு அருகே வந்து 'எண்ணெய் வைக்கவா' என்றாள். சுரேஷ் நீர் ததும்பும் கண்களோடு சிரித்தான்.

"சாமர்த்தியம்..." என்று சொல்லிச் செல்லமாக அவன் மார்பிலேயே குத்தினாள். சுரேஷ் அவளை அணைத்துக் கொண்டான். வாசலில் யாரோ கொளுத்தும் மத்தாப்பின் வெளிச்சம் பரவி அந்த அதிகாலை வண்ணமயமாகிக் கொண்டிருந்தது.

ஆன்மிகம்

● புவனா தியாகராஜன்
● ஓவியம்: ஸ்யாம்



இறைவன் இனம், மொழி போன்ற அனைத்து பேதங்களையும் கடந்தவர் ஆவார். நாம் திருக்கோயில்களுக்குச் செல்கிறோம். அவற்றில் சில ஆலயங்களில் பணத்தின் அடிப்படையில் பல வரிசைகள் இருக்கின்றன. ஆனால், இறுதியாக மூலவரின் அருகில் செல்லும்போது அனைத்து வரிசைகளும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே வரிசையாக இறைவனை அடைகின்றன. கடவுளுக்கு முன்பாக அனைவரும் சமம் என்பதே ஆகும். இறைவனை அடைய நமக்கு மிகவும் முக்கியமானது தூய்மையான பக்தி ஒன்றேயாகும். அந்த பக்தி ஒன்றே நம்மை இறைவனுடன் இரண்டறக் கலக்கச் செய்யும் சாதனமும் ஆகும்.




# சபரியின் பக்தியும்... சுபத்திரையின் பிறப்பும்!

தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்திருந்தாலும் தூய்மையான மனத்தினால் இறைவனை வணங்கி அவனால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் பலர். வேடுவ குலத்தில் பிறந்து, முக்கண்ணனால் ஆட்கொள்ளப்பட்டவர் கண்ணப்பர். அதே வேடுவ குலத்தில் பிறந்து படகோட்டியாக இருந்த குகன், ஸ்ரீராமபிரானுக்கு உதவி செய்து, அதற்குப் பலனாக, ஸ்ரீராமபிரானுக்கு சகோதரனாகும் பேற்றினைப் பெற்றவர்.


இத்தகைய வேடுவ குலத்தில் பிறந்து தன் அன்பினால் இறைவனின் அருளைப் பெற்ற ஒரு பெண்ணின் கதையைக் காண்போம்.

வேடுவ குலத்தில் தோன்றியவள் சபரி. வேடுவகுலத்துக்கே உரிய உணவான மாமிசம் உண்பதை விரும்பாதவள், மெய்ஞ்ஞானத் தேடலில் நாட்டம் கொண்டவள். அதன்பொருட்டு மகரிஷி ஒருவரைத் தேடும் பயணத்தை மேற்கொண்டாள். அவ்வாறு செல்லும்போது, வழியில் ஒரு ரிஷியினைக் கண்டாள். அவரிடம் தனக்கு மெய்ஞ்ஞானத்தை அளிக்குமாறு வேண்டினாள். சபரியின் தூய்மையான உள்ளத்தைக் கண்ட அவர், ‘தன்னால் மெய்ஞ்ஞானத்தை அளிக்க இயலாது என்றும், மதங்க மகரிஷியின் ஆசியினால் மட்டுமே அதைப் பெற இயலும்’ என்றும் கூறி சபரிக்கு வழிகாட்டினார். அது மட்டுமல்லாது அவர் இன்னொரு விஷயத்தையும் கூறினார். மதங்க ரிஷியின் சீடர்கள், வெளியாள்கள் யாரையும் அவ்வளவு எளிதாக உள்ளே அனுமதிக்கமாட்டார்கள் என்பதே அவர் கூறிய விஷயம்.

இதைக் கேட்ட சபரி, ’நான் எப்படியேனும் அவரைத் தரிசிப்பேன்’ என்று கூறி மகரிஷியின் ஆசி பெற்றுச் சென்றாள்.

பல காத தூரம் பயணித்தவள், மதங்க மகரிஷியின் ஆசிரமத்தை அடைந்தாள். ரிஷி கூறியபடியே மதங்க ரிஷியின் சீடர்கள் சபரியை உள்ளே அனுமதிக்கவில்லை. ஆயினும், மனம் தளராத சபரி எப்படியாவது மதங்க மகரிஷியை தரிசித்தே ஆக வேண்டும் என்று உறுதிகொண்டாள்.

எனவே, ரிஷியின் ஆசிரமத்தின் அருகே இருக்கும் ஓர் மரத்தின் மீது ஏறி அமர்ந்து கொண்டாள். விடியற்காலையில் நீராடுவதற்காக மதங்க முனிவர் அந்த மரத்தைக்



“பல காத தூரம் பயணித்தவள், மதங்க மகரிஷியின் ஆசிரமத்தை அடைந்தாள். ரிஷி கூறியபடியே மதங்க ரிஷியின் சீடர்கள் சபரியை உள்ளே அனுமதிக்க வில்லை. ஆயினும், மனம் தளராத சபரி எப்படியாவது மதங்க மகரிஷியை தரிசித்தே ஆக வேண்டும் என்று உறுதிகொண்டாள்.”

கடந்து ஆற்றங்கரைக்குச் சென்றார். அதைக் கண்ணுற்ற சபரி, இந்த இருட்டு வேளையில் முனிவர் எங்கே செல்கிறார் என்று யோசித்தாள். அது மட்டுமல்லாமல் இத்தகைய மாபெரும் முனிவர் செல்லும் பாதை கற்களும் முட்களுமாக இருக்கிறதே என்று மிகவும் மனம் வருந்திய அவள் ஒரு முடிவிற்கு வந்தாள்.

பொழுது விடிந்தவுடன் மரத்தில் இருந்து கீழே இறங்கி, அங்கேயிருந்த கற்களையும் முட்களையும் நீக்கிச் சுத்தம் செய்தாள். பின்னர் அங்கே நீர் தெளித்து அந்த இடத்தைக் குளிர்ச்சியானதாக மாற்றினாள். பின் அங்கே பல தீப்பந்தங்கள் கொண்ட கம்பங்களை நட்டு வைத்து அந்த இடத்துக்கு வெளிச்சம் ஏற்படுத்தினாள்.

இது தினமும் தொடர்ந்தது. தான் செல்லும் பாதை வழக்கத்திற்கு மாறாக வெளிச்சமாகவும், குளிர்ச்சி பொருந்தியதாகவும் இருப்பதை மதங்க மகரிஷி கண்ணுற்றார். தொடர்ந்து இது நிகழ்வதைக் கண்ட மதங்க முனிவர், தன் சீடர்களிடம் இதைப் பற்றிக் கேட்டார். ஆனால், இந்த நிகழ்ச்சியைப் பற்றி எதுவும் அறியாத அவர்கள் ஒன்றும் பேசாமல் அமைதியாக இருந்தனர்.

தான் செல்லும் வழியினைத் தூய்மைப் படுத்துவது யார் என்பதை அறிய விரும்பினார். அடுத்த நாள் வழக்கத்துக்கு முன்னதாகவே வந்தார். அங்கே ஒரு பெண் நீர் தெளித்து பாதையை தூய்மைப்படுத்துவதைக் கண்ணுற்ற அவர், அவளிடம் வந்து அவளைப் பற்றி விசாரித்தார். மதங்க மகரிஷியைக் கண்டதால் மிகுந்த மகிழ்ச்சி கொண்ட சபரி, அவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவளைப் பற்றிய முழு விவரத்தையும் கூறினாள். அவளின் விருப்பப்படி அவளுக்கு மெய்ஞ்ஞானத்தை அளித்த அவர், அவளைத் தன் ஆசிரமத்திலேயே தங்க அனுமதித்தார்.

இவ்வாறு பல ஆண்டுகள் அங்கே தங்கி மதங்க முனிவருக்கும், அவரது சீடர்களுக்கும் பல தொண்டுகள் புரிந்து வந்தாள் சபரி. மதங்க முனிவரின் கூற்றின் மூலம் விஷ்ணு பகவானின் அவதாரமே ஸ்ரீ ராமபிரான் என்பதை அறிந்த அவள், அவரைத் தரிசிக்கவேண்டும் என்பதையே தனது வாழ்நாள் நோக்கமாகக் கொண்டிருந்தாள். ராமபிரான் வந்தால், அவருக்கு அளிப்பதற்காகத் தினமும் பழங்களைப் பறித்து வருவாள். அது மட்டுமின்றி ருசியான பழங்களையே அவர் உண்ண வேண்டும் என்று எண்ணிய அவள், தான் பறித்த கனிகளை சிறிது கடித்து அதில் சுவையான வற்றை ராமபிரானுக்காக வைப்பாள். பல நாள்கள் ராமபிரானுக்காக அவள் காத்திருந்தாள்.

அவள் காத்திருப்பிற்குப் பலன் அளிக்கும் விதமாக ஒருநாள் ராமபிரான் அவளின் ஆசிரமத்துக்கு வந்தார். அவருக்கு, வழக்கம்போலவே அன்று பழுத்த கனிகள் ஒவ்வொன்றாக சுவைத்துப் பார்த்து, இனிப்பான கனிகளை ராமபிரானுக்கு அளித்தாள்.

சபரி எச்சில் படுத்திய கனிகளை ராமபிரான் ஏற்பது உடன் இருந்த லட்சுமணனுக்கு பிடிக்க வில்லை. லட்சுமணனின் உள்ள எண்ணத்தைப் புரிந்துகொண்ட ராமபிரான், ”ஒருவர் என்ன கொடுக்கிறார், எப்படிக் கொடுக்கிறார் என்பது முக்கியமல்ல. கொடுக்கப்படுவது எந்த மனநிலையில் கொடுக்கப்படுகிறது என்பதே முக்கியம். சபரி, என்னிடம் கொண்ட தூய பக்தியின் காரணமாக, அழுகியும், கசப்பாகவும் உள்ள கனிகளை எனக்குத் தந்துவிடக்கூடாதே என்று எண்ணித்தான், கனிகளை சுவைத்துப் பார்த்து எனக்குத் தருகிறாள். அவளுடைய பக்தி மிகவும் உயர்வானது’’ என்று விளக்கினார்.

தான் தவமிருந்து காத்திருந்த ராமபிரானின் தரிசனம் கண்டு பரவசப்பட்ட சபரி, அவரிடம் ஒரு வேண்டுகோள் வைத்தாள். ’’ராமா, என்னுடனே இருந்துவிடேன்.”

சபரியின் அன்புக்குக் கட்டுப்பட்ட ராமபிரான், ’’தாயே, நீ என்னிடம் கொண்டிருக்கும் தாய்மை அன்பு என்னை மிகவும் மகிழ்ச்சி கொள்ளச் செய்கிறது. இருந்தாலும், இந்தப் பிறவியில் நான் முடிக்கவேண்டிய கடமைகள் பல இருக்கின்றன. எனது அடுத்த அவதாரமான கிருஷ்ணாவதாரத்தில், நீ எனக்குத் தங்கையாகப் பிறந்து, சுபத்திரை என்ற பெயருடன் விளங்குவாய்” என்று கூறினார்.

ராமபிரான் கொடுத்த வாக்கின்படியே, சபரியும் தனது அடுத்த ஜன்மத்தில் கிருஷ்ணனின் சகோதரியாகப் பிறந்து அவரின் அன்பினைப் பெற்றாள்.


தீபாவளி சிறப்பிதழ்

ஆன்மிகம்


அனுராதா சிவசுந்தர்

# அக்னித் தலத்தில் பாணலிங்க க்ஷேத்திரம்

திருவண்ணாமலை பஞ்ச பூதத் தலங்களில் அக்னித் தலம். உமையன்னை ஐயன் திருமேனியின் இடப்புறத்தில் இடம் பெற்ற அன்புத் தலம். விண்ணிலும் மண்ணிலும் அண்ட சராசரங்களிலும் வியாபித்திருப்பவன் தானே என்னும் பேருண் மையை ஈசன் ஜோதிப் பிழம்பாக விண்ணளாவி விஸ்வரூபம் எடுத்த திருத்தலம். எண்ணற்ற மகான்களும், சித்த புருஷர்களும், ஞானிகளும் உலா வந்த உன்னதத் தலம். திருவருணைத் தலத்தில்தான் எத்தனை எத்தனை சித்தபுருஷர்களின் திருவடிகள் பதிந்திருக்கின்றன?! அருணகிரிநாதர் தொடங்கி திருச்சுழி கிராமத்திலே பிறந்து, மதுரையிலே கல்வி பயின்று, திருவண்ணா மலையானின் நினைவால் திருவருணை வந்து, உண்ணாமல் உறங்காமல் கடும் தவம் மேற்கொண்டுமா தவஞானியாய், மகரிஷியாக உலகப்புகழ்











புவியியல் அமைப்பிலேயே இயல்பாக எண்ணங்களை நம் கட்டுக்குள் கொண்டு வரக்கூடிய அதிர்வுகளை ‘தீட்டா அலைகள்’ என்கிறனர் விஞ்ஞானிகள். திருவண்ணாமலையானது இயல்பாகவே தீட்டா அதிர்வுகளை கொண்டுள்ளது. இதற்காகவே உலகெங்கிலும் உள்ள சித்தர்கள் இங்கே தேடி வருகின்றனர்.



பெற்ற ரமண மகரிஷி; செந்தமிழ் யோகி குகைநமசிவாயர், சித்த மகா சிவயோகி பாணி பத்திரசாமி; ஞானச் செல்வர் குரு நமசிவாயர், மழையைப் பொழிய வைத்து ஊரையே செழிக்க வைத்த மங்கையர்க்கரசியார். தொண்ணூறு வயது வரை நாள்தோறும் திருவண்ணாமலையைத் தவறாமல் வலம் வந்து அந்தப் புண்ணியத்தால் அண்ணாமலையானையே நேரில் கண்டு பேறு பெற்ற சோணாசலத் தேவர்.

யாழ்ப்பாணத்திலே பிறந்து தில்லையாடியின் பேருளால் திருஅருணையிலே பெரும் புதையல் பெற்று, மக்களைக் காத்த ஞானபிரகாசர்; பாதகர்களைத் திருத்துவதற்காக, பழுக்கக் காய்ச்சிய இரும்புச் செருப்பை அணிந்து நடந்த வீரவைராக்கிய மூர்த்தி சுவாமிகள்; ஐநூறு சீர்களைப் பாடு பட்டு உருவாக்கி, அண்ணாமலை யானின் புகழைப் பரப்பிய வேதாகம, சமய சாத்திர வித்தகரான அப்பைய தீட்சிதர்; வாய் பேச இயலாத ஊமையாய்ப் பிறந்து, திருவண்ணா மலையானின் பேரருளால் பாடும் திறனைப் பெற்று தில்லையிலே திளைத்து, திருவாரூரிலே தியாகேசர் சந்நிதி முன்னால் முக்தி பெற்ற தட்சிணாமூர்த்தி சுவாமிகள்; பூமியிலிருந்து தீ ஜுவாலையை வரவழைத்து தனது திருமேனியையே அக்னிதேவனுக்கு ஆஹுதியாக்கிய ஆதிசிவப்பிரகாசர் சுவாமிகள்; கரிகாற்சோழன் காலத்திய பாதாளலிங்க மூர்த்தியைப் பாதுகாத்த ஞானயோகி தம்பிரான் சுவாமிகள், ஜில்லா கலெக்டர் ஐடன் துரையின் கடும்நோயைத் தீர்த்து வைத்த, இருபுறமும் வரிப்புலிகள் காவலிருக்க ஞானத்தவம் செய்த ஈசான்ய மடாலயத்தின் ஆதிகுரு ஸ்ரீலஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகர்

### பாணலிங்கத்தின் மகத்துவம்

சிவலிங்கங்களில் பதினைந்து வகைகள் மிக உயர்வானவை என்று மேருதந்த்ரத்தில் சொல்லப் பட்டுள்ளது. அவை: களிமண், கல், ஸ்படிகம், ரத்தினம், குங்குமப்பூ, புஷ்பராகம், நீலம், கோமேதகம், பவளம், முத்து, வெள்ளி, தங்கம், வைரம், பாதரசம், பாணலிங்கம். கல்லினால் வடிக்கப்பட்ட ஆயிரம் சிவலிங்கங் களுக்கு ஒரு ஸ்படிகலிங்கம் சமம். பன்னிரண்டு லட்சம் ஸ்படிக லிங்கத்துக்குச் சமமானது ஒரு பாணலிங்கம் என்றும், ஒரு பாணலிங்கத்தை வழிபடுபவருக்கு கோடி சிவலிங்கங்களை வழி பட்ட புண்ணியபலன் கிடைக்கும் என்றும் கூறுகின்றன ஞானநூல்கள்.

'பாணா' என்பது சிவபெருமானின் திருநாமம். ஒரு பாணலிங்கம் இருக்கும் இடத்தில் நல்லிணக்கம், மனஅமைதி, செழிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவை நிலைத்திருக்கும். தினமும் பஞ்சாட்சரி மந்திர ஜபத்துடன் பாணலிங்கத்தை வழிபடுபவர்களுக்கு, அவர்களின் ஆன்மிக ஆற்றலை மேம்படுத்துவதுடன், வழிபடுபவரின் கர்மவினைகளையும் குறைக்கிறது. தினமும் அதிகாலையில் பாணலிங்கத்தைச் சிந்தித்து தியானிப்பதன் மூலம் அனைத்து காரியங்களிலும் வெற்றி பெறலாம் என்கிறது யோக சாரம். சுருக்கமாகச் சொல்வதென்றால், பாணலிங்கத்தின் ஆற்றலானது ஓர் அம்பைப் போல் இதயத்தை ஊடுருவிச் சென்று அறியாமை என்னும் பாறையைச் சிதைத்து, சிவஜோதியை உள்ளே வெளிப்படுத்தி, பக்தருக்கு தூய்மை, அறிவொளி என்னும் ஞானம் ஆகியவற்றை அளிக்கும்.





சுவாமிகள்; மக்களின் தீராத நோய்களையெல்லாம் பஞ்சாட்சர மந்திரம் சொல்லித் திருநீறு தந்ததன் மூலம் தீர்த்து வைத்த புனிதவதி அம்மணியம்மாள், எல்லையில்லாத் தமிழ் வண்ணப் பாக்களோடு கம்பத்து இளையனார் எனப்படும் திருவண்ணாமலை முருகப் பெருமானுக்கு வேல் கொடுத்து வாழ்த்திய இசைஞானி வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், கருவிலேயே திருவுடையவராய் காஞ்சியில் பிறந்து திருவண்ணாமலைத் தலத்தில் வாழ்ந்த மகான் ஞானச்சித்தர் சேஷாத்திரி சுவாமிகள், 'அண்ணாமலையார்க்கே என்னை ஆளாக்குவேன்' என்று கன்னிப் பருவ முதல் இறுதிவரை ஆலயத்தில் பணியாற்றிய சடைச்சியம்மாள் என்ற ஐடினி சண்முக யோகினி அம்மையார் என்று திருவருணை திருத்தலத்துக்கு புனிதம் சேர்த்த சித்தர்கள், ஞானியர்கள் எண்ணிலடங்கார்.

இந்த மலைலிங்கத்தைச் சுற்றி, 108 அதி சக்தி வாய்ந்த சிவலிங்கங்கள் புதைந்திருப்பதாகச் சித்த புருஷர்கள் சொல்கின்றனர். இந்த மலையையும் மலையைச் சுற்றிப் புதைந்திருக்கும் 108 சிவலிங்கங்களையும் சுற்றித்தான் கிரிவலம் செய்து வருகிறோம். ஒவ்வொரு சிவலிங்கமும் கண்ணுக்கு தெரியாத தெய்விக அலைகளை மலை முழுவதும் பரப்பி வருகின்றன. புவியியல் அமைப்பிலேயே இயல்பாக எண்ணங்களை நம் கட்டுக்குள் கொண்டு வரக்கூடிய அதிர்வுகளை 'தீட்டா அலைகள்' என்கிறனர் விஞ்ஞானிகள். திருவண்ணாமலையானது இயல்பாகவே தீட்டா அதிர்வுகளை கொண்டுள்ளது. இதற்காகவே உலகெங்கிலும் உள்ள சித்தர்கள் இங்கே தேடி வருகின்றனர். இதனால் தவ நிலையில் உள்ள சித்தர்களின் உடலில் இருந்து இந்த அலைகள் வெளிப்பட்டு கொண்டே இருக்கும்.

இந்தத் தலத்தில் அமைந்திருக்கும் திருமூலர் ஆசிரமத்தில், 'சிவோஹம்' ஆசிரமம் சார்பில் ஸ்வாமி விஜயானந்த சரஸ்வதி அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி மஹா பாணலிங்க பிரதிஷ்டையுடன், சுற்றிலும் நூற்றியெட்டு சிறிய பாணலிங்கங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டு வரும் 15.11.2021 அன்று 'சிவோஹம்' ஆசிரம ஸ்தாபகர் ஸ்வாமி விஜயானந்த சரஸ்வதி அவர்களின் அருட் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

தீபாவளி சிறப்பிதழ்

# முதல் முயற்சியிலேயே சாதனை படைத்த மாற்றுத் திறனாளி!



கல்வியில் மிகவும் சிறந்து விளங்குபவர்களே எதிர்கொள்ளத் தயங்கும் ஐ.ஏ.எஸ். தேர்வை, சிறு வயது முதலே பேசும் திறனும், கேட்கும் திறனும் இல்லாத இளைஞர் ரஞ்சித்குமார், தன்னுடைய முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளார்.

கோவையைச் சேர்ந்த இவர், சக்தி திறனாலயத்தின் ஓர் அங்கமாக கோவை வரதராஜபுரத்திலுள்ள கஸ்தூர்பா - காந்தி காதுகேளாதோர் வாய்மொழிப் பயிற்சிப் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்தார். இவருடைய தாயார் அமிர்தவள்ளி இதே பள்ளியின் தலைமையாசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

டாக்டர் ம.மாணிக்கம் மற்றும் தலைமை நிர்வாகி கௌரி மாணிக்கம் ஆகியோர் டாக்டர் நா.மகாலிங்கம் அவர்களின் கனவுகள் மெய்ப்படும் வகையில் இந்தப் பள்ளியை மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

ரஞ்சித்குமாரைப் பாராட்டும் வண்ணம் கடந்த 5.10.2021 அன்று கோவை சக்தி சுகர்ஸ் தலைமை அலுவலக அரங்கில் நடைபெற்ற விழாவில், சக்தி சுகர்ஸ் சேர்மன் டாக்டர் ம.மாணிக்கம் அவர்கள் ரஞ்சித்குமாருக்கு பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்ததுடன், ரஞ்சித் குமாரின் சாதனைக்குக் காரணமாக இருந்த அவருடைய தாய் தந்தையரின் முயற்சி மற்றும் கடின உழைப்பையும் பாராட்டிப் பேசினார்.

பள்ளியின் தலைமை நிர்வாகி கௌரி மாணிக்கம், ஏபிடி நிறுவனங்களின் செயல் இயக்குநர் மா.ஹரிஹரசுதன், இயக்குநர் பி.வெங்கடரமணா மற்றும் ரஞ்சித்குமாரின் பெற்றோர் கலந்துகொண்ட இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை மக்கள் தொடர்பு மேலாளர் ப.மகேந்திரன் சிறப்பாகச் செய்திருந்தார்.

–சக்தி காமராஜ்

எஸ்.கண்ணன்கோபாலன்
படங்கள்: குடந்தை சரவணன்





தெய்வ தரிசனம்



# முருகன் பிரணவ நாடகம் நிகழ்த்தியது ஏன்?

அவரவர் கர்மங்களுக்கு அவரவரே அதிகாரி. ஒருவர் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தாலும் ஓர் இன்ஜினியர் செய்கிற வேலையை உரிய பயிற்சி இல்லாத அமைச்சரால் செய்ய முடியாது. முப்படைகளின் தலைவராக இருந்தாலும் குடியரசுத் தலைவரால் போர்முனைக்குச் சென்று யுத்தம் செய்ய முடியாது.

அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகளை அவரவர்கள்தான் செய்யவேண்டும் என்பது இறைவன் வகுத்த நியதி. இந்த நியதியை உலகத்தவர்க்கு உணர்த்திட, அழகன் முருகன் அருளாடல் நிகழ்த்திய திருத்தலம்தான் சுவாமிமலை என்னும் உன்னதத் தலம்!

தந்தைக்கு அவன் பிரணவத்தை உபதேசித்தான் என்பது நாமறிந்த கதை மட்டுமல்ல இந்த நாடும் அறிந்த கதை.

தந்தைக்கு மட்டுமல்ல...

அவன் தனக்குமே ஓர் உபதேசம் செய்துகொண்டு, அதையே நமக்கும் ஒரு பாடமாக்க அவன் நடத்திய திருவிளையாடல் தான் பிரமாவை முன்னிட்டு நிகழ்த்திய பிரணவ



நாடகம்!

அந்தக் கதை நிகழ்ந்தது வேத காலத்தில்...

இந்தச் சம்பவம் நிகழ்ந்து கொண்டிருப்பதோ, வேதங்களையும் காலங்களையும் கடந்தும் - அதே நேரம், அவற்றின் ஊடே ஊடுருவி இயங்குவதோடு இந்த வேதங்களும், காலங்களும் தானேயாகி - அவற்றையும் கடந்து ஒளிரும் சர்வேஸ்வரனான வேதநாயகன் சந்நிதி.

அன்று, அந்தக் கயிலையங்கிரியில்-

பிரமன், சிவபெருமானை தரிசிக்க வந்து நேராக இறைவன் சந்நிதிக்குள் நுழைந்துவிட்டான்.

வாசற்புறத்தில் நவ வீரர்களுடன் முருகப் பெருமான் எழுந்தருளியிருப்பதை பிரமன் கவனிக்கவில்லை.

இப்படித் தன்னை கவனிக்காமல் அலட்சியப்படுத்திவிட்டு பிரமன் கயிலைக்குள் நுழைந்துவிட்டதைக் கண்ட முருகப்பெருமான், பிரமனோடு ஒரு சிறு விளையாட்டுக்குத் தயாரானார்.

சிவபெருமானை தரிசித்துவிட்டு பிரமன் வெளியே வரும்வரை காத்திருந்த முருகன், தன் வீரர்களில் ஒருவனான வீரபாகுவை அனுப்பி பிரமனைத் தன்னருகே அழைத்து வரச் செய்தார்.

பிரமன், இளங்குமரா, என்னை அழைத்த காரணம் என்ன? என்று கேட்டார். அப்படி முருகன் தூதன் மூலம் தன்னை அழைத்தது சற்று வியப்பாகவே இருந்தது பிரமனுக்கு.

"இங்கே நானிருப்பதைப் பொருட்படுத்தாமல், உள்ளே சென்றீரே, அப்படியென்ன உமக்குக் கர்வம்... அனைத்தும் அறிந்துவிட்டதாக எண்ணமோ!" என்று கேலியாகக் கேட்டான் முருகன்.

"அனைத்தும் நான் அறிந்திராவிட்டால், ஈசுவரன் என்னிடம் படைப்புத் தொழிலை ஒப்ப டைத்திருப்பாரா?" என்று பெருமிதத்துடனும், கோபத்துடனும் திருப்பிக் கேட்டார் பிரமன்.

"அனைத்தும் அறிந்தவர் என்றால், அனைத்துக்கும் ஆதாரமான 'ஓம்' என்ற பிரணவத்திற்குப் பொருள் சொல்லும்!"

பிரமன் சிந்தித்துப் பார்த்தார்; சிந்திக்கச் சிந்திக்க மனம் குழம்பியதே தவிர, பொருள் நினைவுக்கு வரவில்லை...

அது கண்டு சினந்த முருகன், பிரமனை சிறையிலிட்டுத் தானே படைப்புத் தொழிலை மேற்கொண்டான்.

ஆமாம்; பிரமன் தந்தையைப் பார்க்கச் சென்றால் முருகனுக்கு அப்படியென்ன கோபம்? தன்னை அலட்சியப்படுத்தியதாக ஏன் கருதவேண்டும்?

பிரமா தன்னை மதிக்காமல் ஈசனைத் தேடிச் சென்றதினால் ஒன்றும் முருகனுக்குக் கோபம் ஏற்பட்டிருக்க முடியாது; தன் பணியை விட்டுக் கயிலாயம் தேடி சுவாமியை வழிபட பிரமன் வந்ததில்தான் முருகப்பெருமானுக்கு ஆட்சேபம் இருக்கும். இறைவனைத் தேடி அவன் கயிலைக்கு வருவானேன்? தான் இருந்த இடத்திலிருந்தே இறைவனை தரிசிக்க முடியாதா? பார்த்து அருள் பெறத்தான் முடியாதா?

இப்படி எங்கும் இருக்கும் இறைவனைத் தேடித் தன் சிருஷ்டிப் பணிகளையெல்லாம் விட்டுப் பிரமன் வந்ததினால்தான் முருகப் பெருமானுக்குக் கோபம் ஏற்பட்டிருக்க முடியும்.

'தூணிலுமிருப்பான், துரும்பிலுமிருப்பான்' என்று இறைவனைப் பற்றித் தெரிந்து கொண்டிருந்த பிரகலாதனின் உறுதி, இந்த பிரமாவுக்கு ஏற்படவில்லையே!

இந்த உண்மையை பிரமன் உணரவில்லை என்றதும் முருகனுக்குச் சந்தேகம். பிரமனுக்குப் பிரணவத்தின் பொருள் உண்மையாகவே தெரிந்திருக்கிறதா என்று!

பிரமாவுக்கு அது தெரிந்திருக்க வேண்டியது தான். ஆனாலும் முருகன் கேட்ட அந்த வேளையில் அவரால் சொல்ல முடியவில்லை!

முருகன் அவரிடம்,"உமக்குப் பிரணவம் தெரியுமா?" என்று கேட்டபோது ,"எனக்குத் தெரியாதா" என்று சற்று கர்வத்தோடு பதிலளித்தார்

> 'தூணிலுமிருப்பான், துரும்பிலுமிருப்பான்' என்று இறைவனைப் பற்றித் தெரிந்துகொண்டிருந்த பிரகலாதனின் உறுதி, இந்த பிரமாவுக்கு ஏற்படவில்லையே!



அல்லவா, அந்தக் கோளாறு.

அந்த கர்வம் பிரமாவின் மனதில் தோன்றிய உடனேயே பிரமாவின் மனதிலுள்ள பிரணவ ஞானம் மறைந்துவிட்டது.

கர்வமும், அகங்காரமும் உள்ள மனதில் ஞானம் நிலைப்பதில்லை. அதனால்தான் பிரணவத்திற்குப் பொருள் கூற முடியாமல் பிரமன் விழித்தான்.

உடனே, அதற்குத் தண்டனையாக பிரமனைச் சிறையிலடைத்துவிட்டு, முருகப்பெருமானே சிருஷ்டித் தொழிலைத் தொடங்கினார்.

இத்தோடு தெய்வ நாடகம் முடிந்து விடவில்லை. அது மேலும் தொடர்கிறது. அது தொடர்வதிலே இன்னொரு நோக்கமும் இருக்கிறது.

'இறைவன் எங்கும் இருக்கிறான் -அவனை நினைத்து நாம் பணிகளைச் செய்துகொண்டிருந் தாலே போதும்.-தேடிச் செல்லாமல் அவன் காட்சி அளிப்பான்' என்ற தத்துவத்தையும்- 'கர்வம் இருந்தால் எந்த ஞானமும் மறைந்து போகும்' என்ற உண்மையையும் பிரமன் மூலம் நமக்கு உணர்த்திய தேவ நாடகத்தில் அடுத்த காட்சி...

முருகனே, 'ஓர் அஞ்ஞான நாடகத்தில்' சிக்கிக் கொள்கிறான்!

ஆம்; ஞானக் குமரனான அந்தக் கந்தவேளும் ஓர் அஞ்ஞானச் செயலில் ஈடுபடுகிறான்.

பிரமனுடைய சிருஷ்டித் தொழிலைக் கைப்பற்றித் தானே உலகத்தைச் சிருஷ்டிக்க ஆரம்பித்து விடுகிறான்.


அதாவது...

ஓர் இன்ஜினியரின் தொழிலை அந்தத் தொழிலில் பக்குவப்படாத அமைச்சர் எடுத்துத் தன் அதிகார பலத்தால் செய்வது போல...!

இப்படிச் செய்வதால் என்னென்ன குழப்பங்கள் ஏற்படுமோ, அவ்வளவும் முருகன் செய்த சிருஷ்டித் தொழிலில் ஏற்படுகின்றன.

ஆம்...

முருகப் பெருமான் கருணையுள்ளவன். குழந்தையைப் போல் நிர்மலமானவன். காக்கும் தெய்வம். அப்படிப்பட்ட கருணைத் தெய்வம் மக்களை சிருஷ்டிக்க ஆரம்பித்தால் யாருக்காவது எந்தக் குறையாவது வைப்பானா? அதனால் பூர்வ புண்ணியங்கள் எப்படியிருந்தாலும், இவன்







படைத்த பிறவிகளுக்கு எந்த பிரச்னையும் இல்லாமல் படைத்துவிட்டான்!

அது மட்டுமா, மனிதர்கள் அனைவரையும் ஒரே மாதிரி, அதுவும் தெய்விகச் சாயலில் படைத்துவிட்டான்!

அதனால் பூலோகத்தில் ஒரே குழப்பம். முன் ஜன்மத்தில் புண்ணியம் செய்தவர்களுக்கு அந்தப் பலனை அனுபவிக்கச் சந்தர்ப்பமே இல்லை. பாவம் செய்தவர்களோ தண்டிக்கப்படாமல் தப்பித்துக் கொள்கிறார்கள். உலகத்தில் ஒருவருக்கும் ஒரு பிரச்னையும் இல்லாததால் யாரும் தன் கருமங்களை செய்வதில்லை. கடமைகளில் அக்கறை இல்லை. தர்மங்களை மதிப்பதில்லை. ஏன், தெய்வத்தையே மதிப்பதில்லை.

இப்படியொரு பிடிப்பற்ற நிலை உருவாகிவிட்டது. அப்போதுதான் சிவபெருமான் குறுக்கிடுகிறார். முருகன் படைப்புத் தொழிலில் ஈடுப்பட்டதை உடனடியாகத் தடை செய்து மீண்டும் பிரமனிடமே படைப்புத் தொழிலை ஒப்படைத்துவிட்டு முருகனை விசாரிக்கிறார் ஈசன்.

“பிரணவத்தின் பொருள் உனக்குத் தெரியுமா?” என்று தந்தை பிள்ளையிடம் கேட்கிறார்.

முருகப்பெருமான் புன்னகை புரிந்துபடி, “பிரணவம் தந்த ஞானத்தில்தானே, பிரமனின் பிழையை என்னால் உணர முடிந்தது” என்கிறார்.

“அதன் பொருள் என்ன, எனக்குச் சொல்?” என்கிறார் ஈசன்.

அந்த ஞானப்பிள்ளை திருப்பிக் கேட்கிறது:











"பிரணவத்தை உபதேசமாகத்தான் கூற முடியும். அப்படிக் கூறுபவன் குரு, கேட்பவன் சீடன். தாங்கள் சீடராக அடங்கி நிற்பதானால், நான் குருவாக இருந்து உபதேசிக்கிறேன்" என்கிறார் முருகப்பெருமான்.

அதன்படி ஈசன் சீடராகிறார். ஞானக்குழந்தை குருவாகிறது. பிரணவ உபதேசம் நடைபெறுகிறது.

தன் பிள்ளைக்கு பிரணவம் தெரியும் என்று தந்தைக்குத் தெரியாதா?

அதுதான் போகட்டும். பிரமன் செய்யும் சிருஷ்டித் தொழிலை முருகனால் ஏன் நிறைவேற்ற முடியவில்லை...? அப்படி நிலைமாறி சிருஷ்டிப்பானேன்...?

ஆம்; அனைத்துமே நமக்காக. நமக்கு சில தத்துவங்களைச் சொல்வதற்காக, தெய்வம் யாவும் ஒன்றே என்று நிரூபிப்பதற்காகவும் நடந்த நாடகம்.

ஆம். பிரமனை தண்டித்த முருகன், உடனடியாக தான் ஒரு சிருஷ்டிக் குற்றம் செய்து தன்னைக் குற்றவாளியாகக் காட்டிக் கொண்டான்.

அந்த முருகனைக் கண்டிக்க வந்த சிவபெருமானோ, மறுகணமே அந்த முருகனுக்கே சீடராக தன்னைக் குறுக்கிக்கொண்டார். ஆக பிரமன் என்றாலும் சரி; சர்வேசுவரன் என்றாலும் சரி; நம் அழகு முருகன் என்றாலும் சரி–

'அனைவரும் ஒருவரே: ஒன்றின் பல அம்சங்களே அவர்களுடைய தோற்றங்கள்!' என்ற உண்மையை உணர்த்த–

இந்த சத்தியங்களை இத்தரையில் நிலை நாட்டவே, தமிழுக்குப் பொருளான அந்த அருள் ஞானக் குழந்தை முருகன் குருநாத வடிவம் கொண்டு, தந்தைக்கே குருவாக தகப்பன்சாமி யானான். அவன் குருவாய் நின்று அந்தச் சத்தியங்களை உணர்த்தியதால் அவன் நின்ற குன்றமே சாமியாகிவிட்டது. அதுதான் 'சுவாமிமலை!'

எட்ட நின்று அந்த சுவாமிமலை திருத்தலத்தை தரிசிக்கும்போதே அந்த ஞானம் அங்கே அலை புரள்கிறது. அந்த சத்திய ஜோதி தூர தூரங்களுக்கு ஒளிவீசி நம்மை வரவேற்கிறது.

இந்தத் தலத்திற்கு இலக்கியத்தில் ஏரகம் – திருவேரகம் என்று பெயர். திருமுருகாற்றுப் படையைப் பாடிய நக்கீரனாரும் இதைத் திருவேரகம் என்றே குறிப்பிடுகிறார்.

திருவேரகம் என்றால் என்ன....?

# ஓம் சக்தி

**ஆருயிர்களுக்கு எல்லாம் – நான் அன்பு செயல் வேண்டும்.**

– வள்ளலார்

**மலர்:39** | **நவம்பர் 2021** | **இதழ்:10**

நிறுவனர்: **நா.மகாலிங்கம்**
ஆசிரியர் - வெளியிடுபவர்: **ம.மாணிக்கம்**
Editor & Publisher : **M.MANICKAM**

அச்சிடுபவர்: **த.ராஜ்குமார்**
Printer : **T.RAJKUMAR, Rukmani Offset Press**
ருக்மணி ஆப்செட் பிரஸ், 32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை - 641 021.

பொறுப்பாசிரியர்: **எஸ்.கண்ணன்கோபாலன்**

நிருபர்: **இரா.பொன்னாண்டான்**
தலைமை வடிவமைப்பு: **கே.எம்.பிரசன்னா**
வடிவமைப்பு: **எஸ்.காமராஜ்**
அலுவலக நிர்வாகம்: **ஆர்.குமாரசாமி**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு.

ஓம் சக்தியில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள் அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர, பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

**தனிப் பிரதி ரூ.15/-**
**ஆண்டு சந்தா ரூ.180/-**
**ஆயுள் சந்தா ரூ.2500/-**
(14 ஆண்டுகள் சிறப்பிதழ் உட்பட)

சந்தா தொகையை **"SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI"** என்ற பெயரில் டி.டி.யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி: **ஆசிரியர், ஓம் சக்தி, சக்தி சுகர்ஸ் லிமிடெட், 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் – 641 018,** போன்; **0422 4322471, 0422 4322222** வெளியிட்டோர்; **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

**E-mail : omsakthimagazine@gmail.com**


வாசகர் கடிதங்கள்

# மனதுக்குத் திருப்தி!

அருட்செல்வர் தன்னகத்தே கொண்டிருந்த ஆகச்சிறந்த மனித மாண்புகளை எல்லாம் கவிஞர் சிற்பி தன் மந்திர எழுத்துகளால் வானுயரச் செய்திருக்கிறார். மனிதருள் மாமனிதரைப் பற்றி வாசித்தத் திருப்தி ஏற்பட்டது.

**– இரா. ஜெகதீசன், சூலூர்.**

நவாபின் சதித் திட்டத்தை முறியடிக்க வீரம் மட்டும் போதாது, விவேகமும் அவசியம் என்பதை வீரமங்கை வேலுநாச்சியார் கட்டுரை உணர்த்தியது. இக்கட்டுரைக்கு உயிரோட்டமான படம் வழங்கிய ஓவியர் பிரபாவுக்குப் பாராட்டு!

**– ச.விஜயராகவன், ஈரோடு.**

பார்வையற்ற பெண்கள் வாழ்வில் பிரகாசத்தை ஏற்படுத்திய சக்தி திறனாலயத்திற்கு நன்றி! இந்த அரிய சேவையை முன்னின்று நடத்தும் தலைமை நிர்வாகி கௌரி மாணிக்கம் அவர்களுக்கு எனது பாராட்டுகள்!

**– உமாமகேஸ்வரி, மஞ்சக்குப்பம்.**

'வீசிய கல்...!' சிறுகதை படித்தபோது, "இந்தப் பந்தைத் திருப்பி அடியுங்கள்" என்ற சொலவடைதான் நினைவுக்கு வந்தது. கதைக் களம் அருமை!

**– தேவேந்திரன், நாகர்கோவில்.**

'அள்ள அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரமாக' ஆன்மிகத்தை ஓம் சக்தி வழங்கி வருவது மனதுக்குத் திருப்தியளிக்கிறது.

**– அன்பரசு, திருச்சி.**

'அப்பரும் அண்ணலும்', 'சவால்களை எதிர்கொண்டு வெற்றிகண்ட வீரமங்கை' என்ற இரு கட்டுரைகளும் அருமை. இதுபோன்ற கட்டுரைகள் இன்றைய இளைய தலைமுறையினருக்கு நிச்சயம் ஓர் உந்துசக்தியாக இருக்கும்.


**– சி.எஸ். இராமகிருஷ்ணன், பாண்டிச்சேரி.**

நவராத்திரியின் வழிபாட்டுச் சிறப்புகளை அருமையாக வழங்கிய சுவாமி கமலாத்மானந்தருக்கு வாழ்த்துச் சொல்ல மனம் ஒப்பவில்லை. அவரை வணங்கவே மனம் ஏங்குகிறது!

**– விஜயலட்சுமி, கிருஷ்ணகிரி.**

கவிதை

● திருப்புகழ்த் திலகம்
மதிவண்ணன்



# பூபாளம் பாடும் புல்லாங்குழல்!

கண்ணா! உந்தன் கருணையால் இன்று
காரிருள் வேளையில் காலை மலர்ந்தது!
புண்ணிய ஐப்பசித் திங்களில் வெளிச்ச
புதுமை விழாநாள் அனுபவம் வாய்த்தது!

கதிரவன் விழிக்கும் முன் கண்கள் விழித்தோம்
ககன முழக்கமாய் வெடிகள் வெடித்தோம்
புதுமை மின்னல் பூமியில் படைத்தோம்
புனித கங்கைப் புனலில் குளித்தோம்

தூக்கப் போர்வையை தூக்கி எறிந்தோம்
தூய்மை உணர்வைத் துணிகளில் காட்டினோம்
வாக்கும் மனமும் வரிசையில் வைத்தோம்
மானுட நேயம் மலர்ந்திடக் கற்றோம்

காற்றில் கலந்தஉன் வேய்ங்குழல் நாதம்
காதில் ஓதிய கீதம் கேட்டோம்!
ஆற்றல் தந்திடும் அற்புதத் திருநாள்
ஆண்டவா! உன்முன் ஆணை ஏற்றோம்!

இருளில் இருந்து ஒளிக்குச் செல்வோம்!
இன்மை அகற்றி உண்மை காண்போம்!
மரணம் வென்று அமுதம் உண்போம்!
மண்ணில் தேவ மகத்துவம் படைப்போம்!

● வெ.இன்சுவை ● படங்கள்: கே.எம்.பிரசன்னா







# மனமென்னும் திருக்கோயில்

'பக்தி என்பது பரம பிரேமை வடிவம் கொண்டது. அது அமிர்தமயமானது. அதை அடையும் மனிதன் சித்தன் ஆகின்றான். மரணமிலாப் பெருநிலையை அடைகின்றான். அதை அடையப் பெற்றவன் வேண்டுவதற்கு வேறொன்றுமில்லை; துன்புறுவதில்லை; வெறுப்பதில்லை; இன்புறுவதில்லை; வேறு எதையும் நாடி அலைவதில்லை. அதைப் பெற்றவன் பித்தனாகிறான்; அசைவற்று நின்றுவிடுகிறான். ஆத்மானந்தத்தில் திளைத்திருக்கிறான்' என்று சுவாமி விவேகானந்தர் பக்தியைப் பற்றிக் கூறுகிறார்.

காலங்கள்தோறும் தேசங்கள்தோறும் தோன்றிய மதாசாரியர்கள் அனைவரும் சர்வசக்தியுள்ள ஒரே ஒரு மூலப்பொருளிடத்தில் இருந்து இடைவிடாது பெருகிக் கொண்டிருக்கும் சைதன்யச் சுடரை வெளியிடும் தீப ஸ்தம்பங்களைப் போன்றவர்களாவார்கள். சாதாரண மனிதன் தன் அறியாமையால் தன் மதமே பெரியது என்று ஆரவாரம் செய்கிறான். பெட்ரோலை விடவும், பாஸ்பரஸை விடவும் சட்டெனப் பற்றிக் கொண்டு எரிவது மதம். மதம் குறித்த விமர்சனங்கள்தான்,

தாம் கேவலப்படுவதை விட, தன் நாடு கேவலப்படுவதைவிட, ஒருவனை அதிகம் கோபம்கொள்ளச் செய்கின்றன. சாதுவான ஒருவனையும் வெறிகொள்ளச் செய்கிறது.

அதிர்ந்து பேசாதவனைக்கூட அடிதடியில் இறங்கச் செய்கிறது. தன் உயிரைத் துச்சமாக எண்ண வைக்கிறது. (பிறர் உயிரையும்) சட்டென உணர்ச்சிவயப்பட்டுத் தன்நிலை மறந்து, வன்முறையில் இறங்கத் தூண்டுகிறது.

உலகத்தில் ஓராயிரம் பிரச்னைகள் இருக்கும்போது, ஒருவர் மீது மற்றவருக்குத் தேவையற்ற காழ்ப்பு உணர்ச்சி எதற்கு?

தப்பு செய்விட்டு அதற்குப் பரிகாரமாகத் தங்கத்தேர் இழுத்தால், அந்தத் தப்பு சரியென்று ஆகிவிடுமா?

கொலை செய்துவிட்டு கோடி அர்ச்சனை செய்தால் அந்தப் பாவம் போய்விடுமா?

அடுத்தவர் குடி கெடுத்துவிட்டு ஆண்டவனுக்கு நெய்விளக்குப் போட்டால் அது தீர்வாகுமா?

அலகு குத்தி, பால்குடம் எடுத்து, காவடித் தூக்கி, கிடாவெட்டிப் பொங்கல் வைத்துவிட்டால் புண்ணியம் கிடைக்குமா?

கடவுள் மனிதனைப் போலவா... கையூட்டுக்கு மயங்குபவரா கடவுள்?

விரதம் விடுபட்டுவிட்டால் கோபிப்பாரா கடவுள்?

இறைநம்பிக்கை என்பது ஒருவரின் தனிப்பட்ட விஷயம். நம்புபவர்களும், நம்பாதவர்களும் மாறி மாறி வார்த்தைகளால் சாடிக்கொள்ள வேண்டாமே? உண்மை என்னவென்றால் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களைவிட, கடவுள் மறுப்பாளர்கள் தான் புராண, இதிகாசங்களைக் கரைத்துக் குடித்துள்ளார்கள். பாவ, புண்ணியங்களில் நம்பிக்கை உள்ளவர்கள் தவறு செய்ய பயப்பட வேண்டும். தப்பு செய்துவிட்டுப் பரிகாரம் செய்து கொள்ளலாம் என்ற இன்றைய எண்ணம் மாற வேண்டும். மக்களிடம் பக்தி அதிகரித்துள்ளது. ஆனாலும் மனம் பண்படவில்லை. சந்துக்கு ஒரு கோயில் கட்டுகிறார்கள்; திருவிழா நடத்துகிறார்கள். அதெல்லாம் ஒரு சடங்காக, ஒரு சம்பிரதாயமாக மாறிவிட்டது அவ்வளவே.

நம் நாட்டிலுள்ள பெரிய பெரியத் திருக்கோயில்களைப் பற்றி நாம் முழுமையாக அறிந்து வைத்திருக்கிறோமா? நம் கோயில் ஒவ்வொன்றின் சிறப்பைப் பற்றி ஒரு தனிப் புத்தகமே போடலாம். ஆனால், நாம் என்ன செய்கிறோம்? கோபுர தரிசனம், நேரே மூலவர் சந்நிதி. அங்கே ஒரு நிமிடம் நின்று நம் வேண்டுதல்களை மளமளவென்று கடவுளிடம் ஒப்புவிக்கிறோம். (இப்போது அதுகூட சிரமம்தான். ஒரு வினாடி கூட சுவாமியைப் பார்க்க விடாமல் தள்ளுகிறார்களே!) பின் அங்கே உள்ள மற்ற தெய்வங்களுக்குப் போகிறபோக்கில் ஒரு கும்பிடு போட்டுவிட்டு





நேரே பிரசாதக் கடைக்குப் போனால் தரிசனம் முடிந்தது.

இனி அடுத்த கோயில். ஒவ்வொரு கோயிலின் சிறப்பைப் பற்றியும் முன்னரே நன்கு தெரிந்து கொண்டு நிதானமாக, கலை ரசனையோடும், பக்திப் பரவசத்தோடும் தரிசனம் செய்ய வேண்டாமா? ஒவ்வொரு தூணிலும் உள்ள அத்தனை சிற்பங்களில் எத்தனையெத்தனை சிற்பிகளின் உழைப்பும், கற்பனையும் இருக்கிறது தெரியுமா? சிற்பியை யார் நினைக்கிறோம்? எடுக்கத்தானே தோன்றுகிறது. காதலாகி, கசிந்துருகி, கண்ணீர் மல்கி வேண்டுகிறோமா?

ஊண் உருக, உயிர் உருக இறைஞ்சுகிறோமா? உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் என்று அவன் தாள் பற்றுகிறோமா? அவன்முன் நம் பணம், பதவி, புகழ் அனைத்தும் ஒன்றுமில்லை என்று உணர்கிறோமா? இந்த மனநிலைதான் உண்மையான பக்திக்கு அடையாளம். மற்றவையெல்லாம் வெறும் ஆரவாரமே!

வரிசையில் சுவாமி தரிசனத்திற்காகக் காத்திருக்கும்போது என்ன செய்யலாம்? நம் மனம் முழுவதும் வியாபித்திருக்கும் அந்த இறைவனின் திருநாமத்தை உச்சாடனம் செய்து கொண்டிருக்கலாம். அல்லது கையடக்கமான பக்திப் புத்தகம் எதையாவது படித்துக் கொண்டிருக்கலாம். நமக்குத் தெரிந்த ஸ்லோகங்களை மனதில் சொல்லிக் கொண்டிருக்கலாம். இது எதுவும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. வாயை மூடிக் கொண்டு காத்திருக்கலாம். ஆனால், அங்கே நின்றுகொண்டு டி.வி. தொடர் பற்றிப் பேசுகிறார்கள். குடும்பக் கதை பேசுகிறார்கள். இது சரியா? இறைஉணர்வு உடம்பெல்லாம், உள்ளமெல்லாம் வியாபிக்க, எண்ணமெல்லாம் அவனே என்றாகி, காணும் பொருளில் எல்லாம் அவனே தென்பட... இதுதான் பக்தி.


எனக்கு இன்னொரு செயலிலும் உடன்பாடு இல்லை. சிலர் கடவுள் வேடம் போட்டுக்கொண்டு வீடு வீடாகச் சென்று காசு கேட்கிறார்கள். அதைப் பார்த்தால் மனம் பதைப்பதைக்கிறது. ஆயிரம் அம்புகள் ஒருசேர நம் உள்ளத்தைத் தைத்ததைப் போன்ற ஒரு வலி ஏற்படுகிறது. ராமனும், அனுமனும் அற்ப மானுடர்களிடம் கையேந்தலாமா? புறச் சமயத்தவர் வீட்டு வாசலில் நின்றுகொண்டு யாசிக்கலாமா? யோசிப்போம். நோட்டுப் புத்தகத்தின் அட்டையில் சுவாமிப் படத்தை அச்சிடுவதால், நோட்டுத் தீர்ந்துபோன பின் அதைத் தூர எறிய கஷ்டமாக உள்ளது.

“பழம்பெரும் கோயில்கள் நம் நாட்டின் ஆன்மிக அடையாளங்கள், பழந்தமிழர்களின் கட்டடக்கலையின் சான்றுகள். அத்தகைய தொன்மை வாய்ந்த கோயில்களைப் பாதுகாப்பதை விடுத்து, புற்றீசல்களைப் போல கோயில்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதால் என்ன பயன்?”

பிற மதங்களில் உள்ள சீரிய மதக்கட்டுப்பாடு இந்து மதத்திற்கு இல்லை. அங்கே அத்துமீறல்களுக்கு இடமில்லை. ஆனால், இங்கே அப்படியில்லை என்றாலும், நம் மதத்தையும், நம் கடவுளரையும் நம் அறியாமையால் இழிவுப்படுத்தக் கூடாது.

ஏற்கனவே நம் நாட்டில் ஆயிரக் கணக்கான கோயில்கள் உள்ளன. அவற்றை தரிசனம் செய்யவே நம் ஆயுள் போதாது. ஆகம விதிப்படிக் கட்டப்பட்டுள்ள அந்தக் கோயில்களை முறையாகப் பராமரித் தால் அதுவே போதும். பல கோயில்கள் சிதிலமடைந்து காணப்படு





கின்றன. புதர்மண்டிக் கிடக்கின்றன. நித்யபடி பூசைக்கே சிரமம். எனவே நம் கவனம் அத்தகைய கோயில்களின் மீது திரும்ப வேண்டும். அவற்றின் பழைமை மாறாமல், புனிதம் கெடாமல் புதுப்பிக்கலாம். பழம்பெரும் கோயில்கள் நம் நாட்டின் ஆன்மிக அடையாளங்கள், பழந்தமிழர்களின் கட்டடக்கலையின் சான்றுகள். அத்தகைய தொன்மை வாய்ந்த கோயில்களைப் பாதுகாப்பதை விடுத்து, புற்றீசல்களைப் போல கோயில்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதால் என்ன பயன்? குழந்தையானது தன்னிடம் எத்தனை விலையு யர்ந்த பொம்மைகள் இருந்தாலும், புதிது புதிதாக வேறு பொம்மைகளைக் கேட்கும். புதிய பொம்மை பத்து ரூபாய் பொம்மையாக இருந்தாலும்கூட, பழையதை ஒதுக்கிவிட்டு, அந்தப் புதிய பொம்மையைத் தான் வைத்து விளையாடும். நாமும் அப்படித்தான் உள்ளோம். அழகிய, பழைமை யான கோயில்களைக் கவனிக்காமல், புதிது புதிதாய் கோயில்கள் கட்டுவதைத் தவிர்க்கலாம். அந்தப் பணத்தைக் கொண்டு அந்தந்த ஊரின் பகுதிகளுக்கு இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.



பக்தி என்ற பெயரால் தன்னை வருத்திக் கொள்வது, சுயவிளம்பரம் தேடுவது. மற்றவர் களைத் தூற்றுவது இதெல்லாம் வேண்டாம்.





# ரசித்து ருசிப்போம்

## கம்பு அதிரசம்

**தேவையானவை:**

கம்பு மாவு - ஒரு கப். அரிசிமாவு - ஒரு கப். வெல்லம் (பொடித்தது) - ஒரு கப் - ஏலக்காய்த்தூள் அல்லது சுக்குத்தூள் - ஒரு டீஸ்பூன். தண்ணீர் - கால் டம்ளர். எண்ணெய் - பொரிக்கத் தேவையான அளவு

ஒரு பாத்திரத்தில் வெல்லத்தைப் போட்டு அதனுடன் கால் டம்ளர் தண்ணீர் சேர்த்துச் சூடாக்கவும். வெல்லம் தண்ணீரில் முழுவதுமாகக் கரைந்த பிறகு பாத்திரத்தைக் கீழே இறக்கி, வெல்லக் கரைசலை வடிகட்டவும். வடிகட்டிய வெல்லக் கரைசலை மறுபடியும் அடுப்பில் வைத்துக் கொதிக்க விடவும். கொஞ்சம் கொஞ்சமாக வெல்லக் கரைசல் பாகு பதத்துக்கு வர ஆரம்பிக்கும். பாகு உருட்டும் பதத்தில் இருக்கவேண்டும். இதற்கு சிறிது பாகை எடுத்து தண்ணீரில் போட்டு எடுத்து உருட்டிப் பார்க்கலாம். பாகு சரியான பதத்துக்கு வந்தவுடன் அடுப்பிலிருந்து பாத்திரத்தைக் கீழே இறக்கிவிடவும். இந்தப் பாகுடன் கம்பு மாவு, அரிசி மாவு, ஏலக்காய் அல்லது சுக்குத்தூள் சேர்த்து நன்கு கிளறிய மாவைச் சேர்த்து வாழையிலையில் வட்டமாகத் தட்டிக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய்விட்டுச் சூடானதும் தட்டி வைத்திருக்கும் மாவைப் போட்டுப் பொரிக்கவும். அதிரசம் இருபுறமும் பொன்னிறமாக வெந்து உப்பி வரும்போது எடுத்துவிடவும்.

## தீபாவளி லேகியம்

**(ஒரு வேளைக்கு நான்கு நபர்களுக்கானது)**

தீபாவளி மனதுக்கு மகிழ்ச்சி தரும் பண்டிகைதான் என்றாலும், சில உடல்நல பிரச்னைகளையும் ஏற்படுத்தக்கூடியது. விடியற் காலையில் எழுந்து, தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பதால், சிலருக்குத் தொண்டை கட்டிக் கொள்ளும். அதிக அளவில் இனிப்புகளையும் எண்ணெய்ப் பலகாரங்களையும் சாப்பிடுவதால் செரிமானப் பிரச்னைகள் ஏற்படக்கூடும். இது போன்ற பிரச்னைகளுக்கு மிக அருமையான மருந்துதான் தீபாவளி லேகியம்.

**தேவையான பொருள்கள்**

மிளகு இரண்டு டீஸ்பூன்,
சீரகம் இரண்டரை டீஸ்பூன்,
தனியா இரண்டரை டீஸ்பூன்,
ஓமம் 20 கிராம்,
கண்டதிப்பிலி 10 குச்சிகள்,
சுக்கு ஒரு துண்டு,
ஏலக்காய் இரண்டு,
வெல்லம் 100 கிராம்,
நெய் தேவையான அளவு

இதில் வெல்லம், நெய் தவிர மற்ற பொருள்கள் அனைத்தையும் லேசாக வறுத்து, பொடியாக்கிக் கொள்ளவும். இல்லாவிட்டால் தண்ணீர் சேர்த்து ஊறவிட்டு நைசாக அரைத்துக் கொள்ளலாம்.

அரைத்த பொருள்கள் அனைத்தையும் ஓர் அடிகனமான வாணலியில் கொட்டி கேஸ் ஸ்டவ்வை 'சிம்'மில்வைத்துக் கிளறவும். இடையே வெல்லம், நெய் என ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்து மீண்டும் கிளறினால் லேகியம் தயார்.

இரா.பொன்னாண்டான்



# தீபாவளியே வருக..!

நரனாய் முளைத்த விதை
நச்சுச் செடியாய் மாறி
ஒருநாள்
ஆணவக் கிளைகளோடு
அசுர விருட்சமாய் வளர்ந்தது.
அது
விண்ணையும் மண்ணையும்
விஷக்காற்றால் வீசி அடித்தது.

நரகாசுரன் எனும் நச்சுமரத்தை
விறகாய் வெட்டி வீழ்த்த
பூமித்தாயே புனர்ஜென்மம் எடுத்தாள்.

வரத்தால் வளர்ந்த
அசுரன்-பூமியின்
கரத்தால் அழிந்தான்.
பூமா தேவியின் புதல்வன்-சத்ய
பாமா சினத்தால் சிதைந்தான்.

இது கதையல்ல..
தீமை எனும் இருள் ஒழிய
தெய்வங்கள் கீழிறங்கி
பூமிமேல் தூவிய
புராண ஒளிக்கதிர்கள்.

நாத்திக இருளை போக்க
நாமெல்லாம்
ஆத்திக ஒளியை ஏற்றி
ஆராதனை செய்யும்
தீபத்திருநாள்.
இதனால் அழியும் பாவம் ஒருநாள்.

நாரணன் நாமாவளி பாடும்
தீபத்திருநாள்!
வனவாசம் போன ராமன்
அயோத்தி திரும்பிய
ஆனந்தத்தை
விளக்கேற்றி வீதியெங்கும்
விழாக் கொண்டாடிய நாள்.!

அகில உலகமும்
வளம் பெற
அன்னைக்கு இடம் தந்து
அர்த்தநாரீஸ்வரர் ஆனதினம்.!

மனித மன அழுக்கை
மீனுக்கு இரையாக்க
ஞான நீரில் குளியல் நடத்த
ஞாலம் காட்டிய நாள்.

உற்றாரும் உறவினரும்
ஒன்று கூடி
புத்தாடை அணிந்து
புது உலகம் காண்கின்ற திருநாள்!

கசப்பே இல்லாத வாழ்வை பெற
இனிப்பு எனும்
அன்பு தூவி
அகம் குளிரும் நாள்!

மதம், இனம், மொழி கடந்த
மக்கள் விழா!
மானுடம் மலர
வானவர் தந்த ஒளிகளின் உலா!

வானத்து நட்சத்திரங்கள் எல்லாம்
வந்திறங்கி
பூமியை புனிதமாக்கும் நாள்.

அதர்மத்தின் அழிவாம்
தீபாவளியே வருக!
திக்கெட்டும் இருள்போக்கும்
தீப ஒளியைத் தருக!

● நிவேதிதா ● ஓவியம்: ஸ்யாம்

# இலட்சியத்தில் வெற்றி கண்ட மாவீரன்!

## மனோஜ் குமார் பாண்டே



'சில இலக்குகள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை. தோல்வியிலும் கூட புகழ் பெறவே செய்யும்'

-மனோஜ் குமார் பாண்டே

உத்தரப்பிரதேச மாநிலம் சீதாப்பூர் மாவட்டம் கமலாபூர் வட்டம் ருதா கிராமத்தைச் சேர்ந்தவர், கேப்டன் மனோஜ் குமார் பாண்டே. கோபிசந்த் பாண்டே மற்றும் மோஹினி பாண்டே தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர் மனோஜ்குமார். அவருக்கு இரண்டு தம்பிகளும் ஒரு தங்கையும் உண்டு. குழந்தையாக இருந்தபோதே வீரம் மிகக் கொண்டு விளங்கினார். தன் வீரதீரச் செயல்களால் பெரியவர்களை அடிக்கடி ஆச்சர்யப்பட வைப்பார். தைரிய குணமிருந்தாலும் கல்வியிலும் சிறந்து விளங்கினார். லக்னோவிலுள்ள உ.பி. ஸைனிக் பள்ளியில் படித்த காலத்தில்தான் அவருக்கு ராணுவத்தில் சேரவேண்டும் என்றிருந்த கனவு மேலும் உறுதிப்பட்டது. உறுதிப்பட்ட அந்தக் கனவே அவருடைய எதிர்கால வாழ்வுக்கு அடித்தளமும் ஆனது.

விளையாட்டுகளிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். குறிப்பாகக் குத்துச்சண்டையிலும் உடற்பயிற்சியிலும் சிறந்து விளங்கினார். பின்னர், தரைப்படையின் அதிகாரி சீருடையை அணிய வேண்டும் என்ற அவரது கனவை மெய்ப்படுத்தும் முயற்சியில் தேசிய பாதுகாப்பு அகாடமியில் (NDA) சேர்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கு அவர் 90-வது பயிற்சியணியில் சேர்ந்தார்.

மிகச் சிறப்பான முறையில் பயிற்சியை முடித்தவர், 1/11 கூர்க்கா ரைஃபிள்ஸ் என்ற படைப் பிரிவில் அதிகாரியாகப் பொறுப்பேற்றார். இந்த கூர்க்கா ரைஃபிள்ஸ் படைப் பிரிவானது, நெஞ்சுரம் மிக்க





வீரர்களுக்கும் அவர்களுடைய பல்வேறு வீரதீர சாகசங்களுக்கும் பிரசித்திப் பெற்ற ஒன்றாகும்.

ராணுவத்தில் சேருவதற்கு முன்பாக படைகளுக்கு அதிகாரிகளைத் தேர்வு செய்யும் வாரியம் நடத்திய நேர்காணலின்போது மனோஜ் குமார் பாண்டேவிடம், 'நீ ஏன் இந்திய ராணுவத்தில் சேர விரும்புகிறாய்?'' என்று கேட்டார் நேர்காணல் நடத்திய அதிகாரி. ஒரு கணமும் யோசிக்காத மனோஜ் குமார், ''ராணுவத்தின் மிக உயரிய விருதான பரம் வீர் சக்ரா விருதைப் பெற வேண்டியே ராணுவத்தில் சேர விரும்புகிறேன்'' என்றார்.

அவருடைய உன்னதமான விருப்பம் நிறைவேறத்தான் செய்தது. ஆம். பரம் வீர் சக்ரா என்ற உயரிய விருது அவருக்குக் கிடைக்கத்தான் செய்தது. ஆனால்...?

இந்திய ராணுவத்தில் அதிகாரியாகப் பதவியேற்றதும் அவருக்கு வழங்கப்பட்ட முதல் பணியிடம் காஷ்மீர் பள்ளத்தாக்கு தான். பின்னர் அவர் சியாச்சின்னுக்கு மாற்றப்பட்டார். சியாச்சின்னில் இருந்தபொழுது படாலிக் பகுதிக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டார். அங்குதான் பாகிஸ்தான் படையினரின் முதல் ஊடுருவல்கள் கண்டறியப்பட்டன. நம் ராணுவமும் மிகச் சிறப்பான முறையில் ஒருங்கிணைந்த பதிலடிக்குத் தயாராகிக் கொண்டிருந்தது.

கார்கில் போர் : ஜூலை, 3 1999

மே 1999 ஆரம்பத்தில் பாகிஸ்தான் படைகள் முஷ்டோஹ், திராஸ், மற்றும் படாலிக் பகுதிகளில் கட்டுப்பாட்டுக் கோட்டிற்குக் குறுக்கே நன்கு ஊடுருவியிருந்தனர். ஒவ்வொரு பகுதியிலும் கட்டுப்பாட்டுக் கோட்டை அவர்கள் ஊடுருவியது 4 முதல் 8 கிலோ மீட்டர் ஆகும். எதிரிப் படைகள் கண் பார்க்கும் தூரத்தில் இல்லாததால் பல முக்கியமான புள்ளிகளில் பீரங்கிப் படை கொண்டோ வான் திறன் கொண்டோ அவர்களை அகற்ற முடியாது. எனவே, நம் ராணுவப் படையினரை நேரடித் தாக்குதலுக்கு

மேலே அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், இந்த நடவடிக்கை மெதுவானதும், சில பல உயிர்களைத் தியாகம் செய்யக் கூடியதுமாகும். இத்தகைய ஒரு நடவடிக்கை படாலிக் பகுதியில் மேற்கொள்ள வேண்டும் என திட்டமிடப்பட்டு 1/11 கூர்க்கா ரைஃபிள்ஸ் வீரர்கள் கலுபர் என்ற இடத்தை மீட்கப் பணிக்கப்பட்டனர். மேற்படி கூர்க்கா ரைஃபிள்ஸ் சேனையின் 'பி' கம்பெனியின் ஐந்தாம் எண் பிரிவு பிளட்டூன் கேப்டன் மனோஜ் தலைமையில் அப்பணியை மேற்கொண்டது. இதற்கு முன்னர் கேப்டன் மனோஜ் பங்கேற்ற ஒரு குழு ஜௌபர் உச்சியைக் கைப்பற்றி முதல் நிலையை ஏற்படுத்தியிருந்தது. 1999 ஜூலை மாதம் 2-க்கும் 3-க்கும் இடைப்பட்ட இரவில் கேப்டன் மனோஜ் தன் படை வீரர்களுடன் கலுபர் செல்லும் வழியில் 19,700 அடி உயரத்திலுள்ள பஹல்வான் சௌக்கியை நோக்கிப் புறப்பட்டார். இந்தத் தாக்குதல் குழு முன்னேறிச் செல்லும் பாதையில் எல்லாம் குன்றின் இருபுறங்களில் இருந்தும் எதிரிப்படைகளின் மிகக் கடுமையான தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எதிரியின் தீவிரமான தாக்குதல்களுக்கிடையே கேப்டன் மனோஜ் தன் ப்ளாட்டூன் படைப்பிரிவை சாதகமான நிலைக்கு வெகு விரைவாக அனுப்பி வைத்தார். வலதுபுறம் உள்ள எதிரியினரை வெளியேற்றுவதற்கு ஒரு செக்ஷன் (ப்ளாட்டூனின் ஒரு பகுதி) வீரர்களை அனுப்பிய கேப்டன் மனோஜ், இடதுபுறமுள்ள எதிரிகளை விரட்ட தானே முன்னேறிச் சென்றார். கேப்டன் மனோஜ் அச்சமேதுமின்றி உத்வேகமளிக்கக் கூடிய யுத்த முழக்கமான 'ஜெய் மஹாகாளி, ஆயோ கூர்க்கலி' என முழங்கியவாறே முன்னேறிச் சென்று இரண்டு பதுங்குக் குழிகளில் இருந்த எதிரிகளை ஒழித்தார். மூன்றாவது பதுங்குக் குழியைக் கைப்பற்றும்பொழுது அவருடைய தோள் மீதும் கால்கள் மீதும் தோட்டா மழை பொழிந்தது. சிறிதும் சலனப்படாமல் கலக்கமின்றி தனது படுகாயங்களைப் பொருட்படுத்தாமல் நான்காவது பதுங்குக் குழியின் மீதான தாக்குதலுக்குத் தலைமை வகித்துக்கொண்டே இருந்தார். ஒரு கையெறி குண்டை வீசி நான்காவது பதுங்குக் குழியையும் தகர்த்தார். அவருக்கான இலக்கை அவர் அழிக்கும் அதேசமயம் அவருடைய நெற்றியில் ஒரு தோட்டா பாய்ந்தது. கேப்டன் மனோஜ் தன்னுடைய 24-ம் வயதிலேயே வீர மரணம் அடைந்தார்.



கேப்டன் மனோஜ் தலைமையிலான படை வீரர்கள், தங்களை சிறப்பான முறையில் வழிநடத்திய தங்கள் தலைவனின் வீர மரணம் கண்டு வீறுகொண்டு எழுந்தனர். ஆறு பதுங்குக் குழிகள் மீது ஆதிக்கம் செலுத்தி பதினோரு எதிரி ராணுவத்தினரைக் கொன்றனர். அது மட்டுமின்றி வான் தாக்கு தலைச் சமாளிக்கும் ஏர் டிஃபென்ஸ்கள் உள்ளிட்ட பல ஆயுதங்கள், மற்றும் பல தளவாடங்களைக் கைப்பற்றினர். கலுபர் இறுதியில் மீட்கப்பட்டது. கேப்டன் மனோஜ் குமார் பாண்டே தன் மிக உயரிய தியாகத்தால் ஈடு இணையில்லாத வீரத்திற்கு ஓர் உதாரண புருஷனாக இருந்ததுடன் மட்டு மில்லாமல் கார்கில் யுத்தத்தின் போக்கையே மாற்றியமைத்தார். அவருடைய ஒப்புவமையில்லாத வீரம், தலைமைப் பண்பு மற்றும் கடமையின்பால் கொண்ட தீவிர ஈடுபாடு ஆகியவற்றுக்காக கேப்டன் மனோஜ் குமார் பாண்டேவுக்கு, அவர் எந்த விருதைப் பெறுவதற்காக ராணுவத்தில் சேர விரும்புவதாகச் சொன்னாரோ அந்த உயரிய விருதான பரம் வீர் சக்ரா விருது அவருக்கு வழங்கப்பட்டது. ஆனால், அந்த வீரப் பதக்கத்தை அணிந்து கொள்ளத்தான் அவர் உயிருடன் இல்லை. ஆனாலும், அவருடைய வீர சாகசம் இன்றைக்கும் பல வீரர்களுக்கு உந்து சக்தியாகவே உள்ளது என்பது முற்றிலும் உண்மை.


'நான் என்னை நிரூபிக்கும் முன்பாக எனக்கு மரணம் வந்தால், நான் உறுதியாகச் சொல்கிறேன், நான் மரணத்தைக் கொன்று விடுவேன்' என்று தன் நாள்குறிப்பேட்டில் அழுத்தமான எழுத்துகளால் குறிப்பிட்டிருந்த மனோஜ் குமார் பாண்டே, தான் குறிப்பிட்டபடியே தன் இலக்கை அடையும் வரை தன்னை நெருங்கிய மரணத்தை உதறித் தள்ளவே செய்தார்.

தீபாவளி சிறப்பிதழ்


அகிலன்கண்ணன் • ஓவியங்கள்: பிரபா

நெடுங்கதை

# நிறம



# ற்றவென்



இரண்டாண்டுகளுக்கு முன் நடந்ததை மனதில் மிதக்கும் காகிதக் கப்பலாக ரசிக்கிறார் இளங்கோ!

”இளங்கோ, இயக்குநர் உங்களை, வேட்டைநல்லூருக்கும் தென்னங்குடிக்கும் நேரில் போய் விசாரிச்சு நாலு நாளைக்குள்ள அறிக்கை தரச் சொல்லியிருக்கார். ஆட்சியர் அலுவலகத்திலேயிருந்து அதிகாரிங்க யாரையாவது துணைக்கு வேணும்னா கூட்டிக்கச் சொல்லியிருக்கார். அந்தந்த ஆட்சியர் மற்றும் அலுவலகத் தொலைபேசி எண்கள் எல்லாம் இதிலே குறிச்சிருக்கு. சம்பந்தப்பட்ட இடங்களுக்கு முன்னறிவிப்பு ஏதும் செய்ய வேண்டாம்ன்னு சொல்லியிருக்கார். இந்தாங்க அது பற்றிய ரெண்டு கோப்புகள்! முடிஞ்சா, தானே உங்ககிட்டே இரவு பேசுறதா சொல்லியிருக்கார். உங்க கைபேசி எண் தந்திருக்கேன்."

இணை இயக்குனர் நிதானமாகச் சொன்னார். இளங்கோ ‘சரி ’ எனச் சொல்லி வெளியேறினார்.

இரவு, படுக்கையில் மெலிதாய் பண்பலையில் பழைய பாடல்கள் கேட்டபடி இளங்கோ. அருகே மனைவி ருக்மணி. சிணுங்கியது செல்பேசி. இயக்குநர் பேசினார். "இளங்கோ! ஊடகங்களும் செய்தித் தாள்களும் இப்போ இந்த விஷயங்களை வெளிப்படுத்திப் பேசி அலசுறாங்க. அது தப்பில்லை. இது இரண்டுமே முக்கியமான, அவசரமான விஷயங்கள். மக்கள் உணர்ச்சி சம்பந்தப்பட்டவை. ரெண்டு விஷயத்தையும் தீர்த்து வைக்கிறது முக்கியம்; அவசியம். முதல்லே அந்த ரெண்டு இடத்துக்கும் போய் விசாரணை செய்யுங்க. பின் அங்கிருந்தே என்கிட்டே பேசுங்க. அதே நாள்லயே அடுத்த அமர்விலேயே தீர்வும் கிடைக்கிற மாதிரி அவர்களிடம் ஆலோசனை சொல்லுங்க. வெளியே தெரியவேண்டாம்."

புரண்டு புரண்டு படுத்த இளங்கோவின் தலையை வருடியபடி ருக்மணி , "காலைல சீக்கிரம் எந்திருச்சு வெளியூர் கிளம்பணும்னீங்க. இப்போ தூக்கம் இல்லாமத் தவிக்கிறீங்களே? என்னங்க விஷயம்? ஏனிந்தத் திடீர்ப் பயணம்? "

"ஒண்ணுமில்லை ருக்மணி. தூங்கிடுவேன். நான் திரும்பி வந்ததும் பேசிக்கலாம் . "

அளவு மீறாத அக்கறை, அளவில்லா இங்கிதம் – இவையே நாற்பத்தைந்து வயது ருக்மணி. இருபது வருடக் குடும்ப வாழ்வில் பெரிய மோதல், யுத்தம் இல்லாத தெளிந்த நீரோடை வாழ்க்கை. ருக்மணிக்கு மனசைப் போலவே முகமும் அமைதியான பேரழகு!

*********

குளிர்க் காற்று, முகத்தில் இதமாய் வருடிச் செல்ல, முன் வந்து விழுந்த தலை முடியை இடது கையால் மேலே தள்ளியபடி பேருந்தின் ஜன்னலில் விரிந்தோடும் காட்சிகளில் மிதந்தார் இளங்கோ.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

தந்தை விவசாயக்கூலித் தொழிலாளர். அம்மா தனக்கென இரு பசுக்கள் வைத்துக்கொண்டு கணவர் கொணரும் காசையும் பால் காசையும் வைத்துக் குடும்பத்தை நகர்த்தினார்.

இளங்கோவின் பள்ளிப்படிப்பிற்குப் பெருந்துயர்தான்.

காலையில் கம்பங் கூழோ, பழைய சோறோ; இரவில்தான் சுடு சோறோ, கேழ்வரகோ. பகலுணவென்பது பள்ளியில் பிறர் கூறக் கேள்விப்பட்ட நிலைதான்! பள்ளிகளில் பகலுணவு நேரங்களில் சிலர் உணவு கொள்ளவும் பலர் ஓடி விளையாடவுமான நேரமாகவே கழிந்த நாட்களவை. சில வருடங்களுக்குப் பிறகே, ஏழை மாணவர் உணவு, பிடி அரிசித் திட்டம்' மதிய உணவுத் திட்டம்' என்று பட்டை சோறு கிடைத்தது பள்ளியில்! ஒரு வருடம் பள்ளியில் வகுப்பாசிரியர் வசதியுள்ள மாணவர்கள் வசதியற்ற சக மாணவர்களுக்கு ஒவ்வொரு நாள் ஒவ்வொருவருக்கு உணவு கொணர்ந்தோ வாங்கியோ தர இயலுமா எனக் கேட்டுப் பல மாணவர்கள் இசைவு தந்து பகிர்ந்தளித்து உண்டு மகிழ்ந்த நேசமிகுந்த நாட்களவை. தன்மானம் இடந்தராவிடினும் ஆசிரியரோ சக மாணவர்களோ மனம் வருந்திவிடக்கூடாதே என்று இசைவு தெரிவித்துத் தயங்கித் தயங்கித் தலையாட்டிக் கை நீட்டிய நாட்கள் அவை. அவர்கள் தந்த உணவு தன் வயிற்றை நிரப்பியதை விட, அவர்கள்தம் வேஷமற்ற அன்பும் நிஜப் பாசமும் இளங்கோவின் நெஞ்சை நிரப்பிய நாட்களதிகம்.



ஒருநாள் மாலை பள்ளி நண்பன் முத்துராமன் தன் வீட்டிற்கு இவனை அழைத்தான். தயங்கி மறுத்த இளங்கோவின் தோளணைத்துக் கட்டாயப்படுத்தி இழுத்துச் சென்றான். ஓடு வேய்ந்த விசாலமான வீடு. முற்றம் தாண்டி பின்புறத் தோட்டத்தில் தொரட்டியால் மாங்காய் அடித்துக் கொடுத்துத் தானும் கடித்து ருசித்தான். முத்துராமனின் அம்மா, "முத்து! தம்பி யாருடா?" எனக் கேட்க, "இளங்கோ. பல்லாங்குளம் தாண்டிம்மா. என்கூடப் பள்ளிக்கோடம் படிக்கிறான்" என்கிறான். "ஓ! வாசப்பக்கம் திண்ணைக்குப் போயி விளையாடுங்க. கோயிலுக்குப் போயிருக்கிற பாட்டி வந்தா ஏதும் ஏசிப்புடும்..." எனப் பதனமாக எச்சரிக்கிறாள்.

இளங்கோ குடிக்கத் தண்ணீர் கேட்க, பித்தளைச் சொம்பு தளும்ப நீர் கொணர்கிறான் முத்து. நீரருந்திய பின்னர் முற்றத்து மரத்தூணருகில் கீழே வைத்து , " வாசலுக்குப் போலாம் "என முத்துவை அழைக்கிறான் இளங்கோ. முத்துவின் தாய் சமையற்கட்டி லிருந்து கையில் வேறொரு பாத்திரத்தில் கொணரும் தண்ணீரால் இவன் வைத்துவிட்டுச் சென்ற பித்தளைச் செம்பின் மேல் ஊற்றிக் கழுவிய பின் அதை எடுத்துச் செல்வதை மிக இயல்பான பார்வையில் காண்கிறான் இளங்கோ.



அந்த நாள் பள்ளிகள் பாடம் மட்டுமா சொல்லித்தந்தன - பண்பையும் வாழ்க்கை யையும் சேர்த்தல்லவா?

தந்தை, ஒரத்தநாடு , மதுக்கூர் என வேலை கிடைத்த ஊர்களுக்கெல்லாம் சென்று உழைத்துவந்து, பாசமுடன் தலை வருடி வாஞ்சையாகக் கூறுவார்: "இளங்கோ! நீதானப்பா நம்ம குடும்பத்திலயே முதல் படிப்பாளி. ஸ்கூல் முடிச்சு காலேசுப் படிப்பு படியப்பா! என்னால முடிஞ்ச அளவு படிப்புக்குக் காசு தர்றேன். வெவசாயக் கூலி வேலையிலே கிடைக்கிறது கைக்கும் வாய்க்குந்தான் காணுது. நீ சரியாப் படிச்சு, நெறைய மார்க்கு வாங்கி, கவருமெண்ட்டு உதவித் தொகை, சலுகை ஏதும் கிடைச்சுதுன்னா அதை வைச்சு நீயேதான் ஒப்பேத்திக்கணும்."

இளங்கோ கல்லூரியில் இளங்கலை முடித்தான். படிப்பின் மீது தீராக் காதல் கொண்ட இளைஞனாக உருக்கொண்டான். தந்தை வழியில் விவசாய வேலையும் செய்தான். கிடைத்த பிற பணிகளையும் செய்தான். மாநில அரசு, மத்திய அரசுப் பணிகளுக்கான தேர்வுகள் பல எழுதினான். இப்படித்தான் இளங்கோவின் முன்கதைச் சுருக்கம், கிராமத்து மண்ணில் மலர்ந்தது. பள்ளி நண்பன் முத்துவின் மூலம் சென்னையிலிருந்த அவர்கள் உறவினர் கருணைக் கண் பார்வையில் இளங்கோவுக்கு அரசுக் கல்வித்துறையில் பணி கிடைத்துப் பட்டணம் புகுந்தான் . உண்மையான நன்றி உணர்வில் முத்துவிடம் நெகிழ்ந்த இளங்கோவிடம், "நீ நல்லா படிச்சிருக்கே; தேர்வும் நல்லா எழுதினே. திறமையும் இருக்கு. வாய்ப்பா என் பெரியப்பா அங்கே இருந்ததாலே இது பலிச்சுது. இது இல்லாட்டியும் வேறே எங்கயாவது உனக்குக் கிடைச்சிருக்குந்தானே! நீ நல்லா மேலே வந்தா இதுபோல இன்னும் பல பேருக்கு நீ

உதவுவேல்லே!"

அரசுப் பணியில் நேர்மையும் உள்ளார்ந்த அக்கறையும் அயராத உழைப்பும் கொண்டு செலுத்த இளங்கோவிற்கு முத்துவின் இந்தச் சொற்களே ஊற்றுக்கண்.

தாயும் தந்தையும் ஊரிலேயே இருக்க விரும்பிய நிலையில் இளங்கோ சென்னை வாசியானான். தனது நேர்த்தியான பணிப் பங்களிப்பின் காரணமாகப் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று, இப்போது பொறுப்பு மிகு அதிகாரியாக வலம் வருகிறார்.

அதனாலேயே, இந்தப் பயணமும் இப்போது நேர்ந்தது.

~~~~~~~

பேருந்திலிருந்து இறங்கி, அருகிருக்கும் உணவகத்தில் சிற்றுண்டி கொண்டபின், ஆட்சியர் அலுவலகம் செல்கிறார் இளங்கோ. அதிகாரி கோபாலனைச் சந்தித்து உரையாடி, அவருடனேயே வெளியே வருகிறார். அலுவலக ஜீப்பில் கிளம்புகின்றனர்.

இளங்கோ சார், இன்னைக்கு வேட்டைநல்லூர் வேலையை முடிச்சிடுவோம். நாளையோ மறுநாளோ தென்னங்குடி வேலையைப் பார்த்திடலாம்" - கோபாலன்.

வேட்டைநல்லூர் நோக்கி ஜீப்பில் ஒரு பயணம். சிறுநகர் எல்லை தாண்டியதும் முகம் மாற்றுகிறது ஊர். பசுமையே காணக் கிட்டவில்லை. பொட்டல் காடுகளான விளை நிலங்கள் . அங்கங்கே சிமிண்ட்டுக் கட்டிடங்கள்.

பிரதான சாலையிலிருந்து பிரிந்து குறுகலான பாதையில் செல்கிறது ஜீப். சுமார் ஒரு மணி நேரப் பயணத்தின் பின்னர் இன்னும் ஒடிசலான குண்டும் குழியுமான தார்ச் சாலையின் இருபுறமும் லேசாய் உயிர்ப்பு தென்படுகிறது. சிறு சிறு திட்டுக்களாய்ப் பசும் வயல்களுக்கு முன்னே ஓலை வீடுகள்; ஓட்டு வீடுகள்; சிமிண்ட்டு வீடுகள். பசுமை கலந்த இனிய காற்று, முகத்தில் முத்தமிட்டுச் செல்கிறது. சுவர்களில் கட்சிச் சின்னங்கள். கிழிந்து பறக்கும் கொடிகள்.

அருகிருக்கும் அதிகாரி கோபாலனிடம் இளங்கோ, ஊர் மக்கள் வாழ்நிலை, மன நிலை, குணம், கலை, கலாசாரம் பற்றி யெல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்கிறார்.

பொதுவான அரசுப் பள்ளிக்கான நியதிகளுடனேயே ஒப்பனைகளற்று , ஈர்ப்பற்ற நிறத்தில் வரவேற்கிறது பள்ளிக்கூடம். பள்ளியின் இடப்புறம் விளையாட்டுத் திடல். வலப்புறம் ஓடு வேய்ந்த சமையற்கூடம்; உணவுண்ணும் கூடம். சற்று தொலைவிலேயே வாகனத்தை நிறுத்தச் சொல்லி, கீழிறங்கி மெதுவாய்ச் சுற்றுமுற்றும் சூழலைக் கவனித்தபடி உள் நுழைந்து பார்க்கிறார் இளங்கோ. கதவெல்லாம் இல்லை. சுவற்றில் பொதிந்துள்ள அலமாரிகள் ஒரு பக்கம். அருகே மண் அடுப்புகள். அடுத்த அலமாரியில் சமையல் பாத்திரங்கள். சிதிலமடைந்த ஜன்னல்கள் .

> “அளவு மீறாத அக்கறை,
> அளவில்லா இங்கிதம் -
> இவையே நாற்பத்தைந்து வயது
> ருக்மணி. இருபது வருடக்
> குடும்ப வாழ்வில் பெரிய மோதல்,
> யுத்தம் இல்லாத தெளிந்த
> நீரோடை வாழ்க்கை.
> ருக்மணிக்கு மனசைப் போலவே
> முகமும் அமைதியான பேரழகு!”

இவர்களை நோக்கி வேக வேகமாக வருகிறார் பள்ளித் தலைமையாசிரியர். மூச்சு வாங்க, "குட்மானிங் சார்! "என்று கூறி இளங்கோவிடம் கரம் நீட்டுகிறார். கோபாலனை நோக்கிப் புன்முறுவல் பூக்கிறார். "வாங்க சார், ஸ்கூலுக்குப் போகலாம்" என்றவரிடம், "சமையல், மளிகை சாமான்லாம், எங்கே இருக்கும்?"

"இப்போதைக்கு எச் எம் ரூம்லதானிருக்கு..." பேசியபடியே தலைமையாசிரியர் அறைக்கு வந்து அமர்கின்றனர்.

"நான் இளங்கோ. சென்னையிலிருந்து;
~~~~~~~

நம்ம துறையிலிருந்துதான் வர்றேன். உங்க பேரு?"

"சாமிநாதன் !"

"சரி, இங்கே என்ன நடந்தது?"

"சார் ! சத்துணவு சமைக்கப் புதுசா வந்தவர் சமைச்சுக் குடுத்தா அதை எங்க பிள்ளைகள் சாப்பிடமாட்டாங்கன்னு பெற்றோர்கள் கொஞ்சம்பேர் என்கிட்டே முறையிட்டாங்க. ரெண்டு மூணு நாளா பல பிள்ளைகளும் சாப்பிடலை . நான் பசங்களோட பெற்றோர்கள்கிட்டே பேசிப் பார்த்தேன். அவுங்க கேட்கலை."

"ஏன்னு கேட்டீங்களா?"

"ம்... கேட்டேன் சார்.... அது வந்து... அவர் வேற ஆளுன்னு...."

"வேற ஆளுன்னா? "

"ம்.... அது வந்து .... அதான் ... அவர் வேற சாதின்னு..."

இதைக் கேட்டதும் கோபாலன் படபடப்பாகக் கேட்கிறார் தலைமையாசிரியரிடம்:

"நீங்க கேட்டீங்களா - அப்போ இங்கே படிக்கிறவங்களுக்கெல்லாம் அவங்கவுங்க சாதிக்காரங்கதான் சமைச்சுப் போடணுமா ன்னு? "

"கோபாலன் சார் !" என்ற இளங்கோவின் உயர்ந்த குரலின் பொருள் தெரிந்து அமைதியாகிறார் கோபாலன்.

"சாமிநாதன் சார் ! உங்களிடம் வந்து முறையிட்ட பெற்றோர்களை மூணு மணிக்கு இங்கே வரச் சொல்லிக் கூப்பிடுங்க."

"எஸ் சார் !" என்றவர் அறையை விட்டு வெளியேறுகிறார்.

கோபாலனிடம், "கோபாலன் சார், இப்போ நமக்கு இந்தப் பிரச்னையைத் தீர்க்கறதுதான் வேலை. அவங்க அவங்க நியாயம் அவங்கவங் களுக்கு. ஆனா, அது பொது விஷயத்தில் பாதிக்கும்போதுதான் பிரச்னையாகுது. இந்தப் பிரச்னையை நம்ம அதிகாரத்தைக் காண்பித்து அடக்குமுறையாலே தீர்க்க முயல்வதை விட, பேசித் தீர்க்கறது நல்லது. சரி, இப்போ இந்த ஊரின் கிராமசபை பற்றிய விவரம் இருக்கா உங்ககிட்டே ? ஆபீஸ்ஸுக்குப் ஃபோன் செய்து இந்த கிராமசபை தலைவர், உறுப்பினர் விவரங்களை வாங்குங்க. முடிஞ்சா இன்னைக்கு நாலு மணிக்கு இங்கேயே பள்ளிக்கூடத்திலேயே கிராமசபை யையும் இந்தப் பெற்றோர்களையும் ஒருசேர உட்காரவைத்துப் பேசிப் பார்ப்போம். அதுக்கு முன்னாடி மூணு மணிக்குப் பெற்றோர்கள் கிட்டே பேசுவோம்."

"எஸ் சார் !"

இளங்கோ தமக்கேயுரிய ஆர்வத்தில் பள்ளியைச் சுற்றிப் பார்க்கிறார் . வகுப்பெடுக்கும் ஆசிரியர்கள் தத்தமது வேலையில் சலனமின்றி ஈடுபடுகின்றனர். தலைமையாசிரியர் இளங்கோவிடம் வேக நடையில் வந்து, "பெற்றோர்களுக்குத் தகவல் சொல்லியிருக் கேன் சார் ! சிலபேர் வெளியூர் வேலைக்குப் போயிருப்பாங்க. மீதிப் பேர் உள்ளூர்தான்."

"வர்றவரை வரட்டும். சரி, நூலகம் இல்லையா இங்கே பள்ளியில்?"

"தனியா இல்ல; ஆசிரியர் அறையில்தான் புத்தகங்கள் அலமாரியில் இருக்கு" என்றவர், " பள்ளிக்குத் தேவையான வேற சில வசதிகள் குறித்தும் மேலே எழுதியனுப்பியிருக்கேன் சார் ! ஒரு வருஷம் ஆச்சு...."

"ஒரு நகல் குடுங்க எனக்கு. முடிஞ்சதைச் செய்யப் பார்க்கிறேன்."

"தேங்க்ஸ் சார் ! சாருக்கு லஞ்ச் சொல்லியிருக்கேன் வந்துரும்."

"ஏனிந்த வேலை செஞ்சீங்க? நாங்க பாட்டுக்குப் போய் சாப்பிட்டுட்டு வந்திருப்பமே !"

"சார், இங்கே பக்கத்திலே ஏதும் ஹோட்டலோ சாப்பாட்டுக் க்ளப்போ இல்லே. அதான் சார் !"

"சாமிநாதன் ! இப்பிடி நொடிக்கு நூறு 'சார்' போடுறத நிறுத்துங்க."

"சரி சா..."

சிரித்தார் இளங்கோ.

மூன்று மணிக்கு முதலில் நான்கைந்து பெற்றோர்களும் சிறிதுநேரத்தில் பதினைந்துக்கும் மேலானோர் வந்தனர். பெரும்பாலும் ஆண்கள். அலுவலகர் கோபாலன், அடுத்து, தலைமையாசிரியர் சாமிநாதன் இருவரும் சத்துணவுக்கூட சமையற்காரர் விஷயம் பற்றியும் இளங்கோவின் வருகை பற்றியும் பேசினர்.

இளங்கோ அமைதியாய் ஆரம்பித்தார்: "வணக்கம். இப்போ நமக்குத் தேவை பிள்ளைகளுக்குச் சத்துணவு. அவுங்க

ஆரோக்கியமா ஒரு வேளை சத்துணவு சாப்பிட அரசு ஏற்பாடு செய்திருக்கிற இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் பிள்ளைகளுக்கு நன்மைதானே . இதிலே போய், யாரு சமைக்கிறாங்க, அவுங்க நம்ம சாதியா, வேறே சாதியான்னெல்லாம் பார்க்க வேண்டாம். நாம இப்போ காப்பிக் கிளப்பிலே போய் சாப்பிடுறோம். நாம கடையிலே பண்டங்கள் வாங்கிச் சாப்பிடுறோம், அதையெல்லாம் யாரு சமைச்சது, யாரு செஞ்சது, யாரு விக்கிறதுன்னா நாம பாக்குறோம்? பசிச்ச வயித்துக்குச் சாப்பாடு. அவ்வளவுதான். நாம இப்போ சந்திரனுக்கு ராக்கெட்டு விட்றோம். சந்திரனிலே என்ன இருக்குதுன்னு ஆராய்கிறோம். உலகத்துலேயே இளைஞர்கள் அதிகமா இருக்கிற நாடு நம்ம நாடு. இன்னிக்கு இங்கே படிக்கிற நம்ம பிள்ளைங்க நல்ல ஆரோக்கியமா இருந்து நல்லாப் படிச்சாதானே முன்னுக்கு வருவாங்க. நாம அவுங்க வளர்ச்சிக்கு உதவணுமே தவிர, குறுக்கு சால் விடக்கூடாதுல்லே. மனுஷனுக்கு மனுஷன் என்ன வித்தியாசம்? நல்லா யோசிங்க. இப்போ இங்கே இன்னும் கொஞ்ச நேரத்திலே கிராமசபை கூடும். அதிலேயும் பேசுங்க; யோசியுங்க."

நடுவயது தாய் எழுந்து சக பெற்றோரிடம் பேச ஆரம்பித்தார்: "அதிகாரிங்க சொல்றது நாயந்தேன். இப்போ நம்ம பொழைப்பே தள்ளாடுது. இதிலே போய் இந்த சாதி, அந்த சாதின்னு பேதம் பிரிச்சுப் பாக்கணுமா என்ன? இப்போ இங்கே ரெண்டே சாதிதான்: இருக்கிறவன் சாதி; இல்லாதவன் சாதி - கொள்ளையடிக்கிறவன் சாதி; கொள்ளைகொடுக்கிறவன் சாதி - அம்புடுதேன். நாம நம்ம முடிவை மாத்திக்குவோம் சனங்களா! என்ன, நாஞ் சொல்றது?"

"ஆமா, நம்ம பேரைச் சொல்லி நமக்குள்ளே பிரிச்சு மேஞ்சு கட்சிக்காரங்கதான் அலம்பல் பண்றாங்க . நாமளா நமக்குள்ள ஏனிந்த பாகுபாடு பாக்கோணும்?"


வேறொருவர் எழுந்து," இப்பிடி திடீர்ன்னு மாத்திப் பேசுனா எப்புடி? அவங்க என்னடான்னா சும்மாவே கோயிலு, திருவிழான்னு நமக்கு சமதையா வரணும்னா எப்புடி?" என்று தடுமாறிய நிலையில் பேச முற்பட, சற்றே வயதான ஒருவர் எழுந்து அவரை அடக்கி அமரச் செய்கிறார்:

"ஏய், சாமி! இங்கயுமாடா இப்பிடி ஊத்திக்கிட்டு வருவே. பேசாம ஒக்காருலே!"

"இருங்கப்பா, தலைக்கட்டு வரட்டும்; பேசி முடிச்சுக்குவோம்! இவுகளும் நம்ம நல்லதுக்குத்தானே சொல்றாக!"


"சாருங்க சொல்றது நல்லதுதான்னு படுது. நாமதான் நாலெழுத்து படிக்க வக்கத்துப் போயி இப்பிடி நிக்கிறோம். நம்ம புள்ளைக என்ன பண்ணுச்சு? நாமளே குறுக்கா நிக்கப்பிடாது. அந்தச் சமயக்காரரே வரட்டும்; சமைக்கட்டும்; நம்ம புள்ளைக சாப்பிட்டுப் படிக்கட்டும். என்ன, மக்கா ஒத்துக்கிறிகளா?"

இப்படியும் அப்படியுமாக நகர்ந்த தேர், அவசரமாக கிராமசபை கூடியதும் அங்கும்



# ஓம் சக்தி

கலை, இலக்கிய, ஆன்மிக மாத இதழ்




## சந்தாதாரர் ஆகுங்கள்!

ஊர் கூடி தேர் இழுப்போம் வாருங்கள், ஆன்மிகமும் தேசியமும் தம்முடைய இருவிழிகளாகக் கொண்ட அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்கள், ஆன்மிகத்துக்கு வள்ளலாரையும், தேசியத்துக்கு அண்ணல் காந்தியடிகளையும் வழிகாட்டியாகக் கொண்டவர். தமிழ்ச் சமூகத்தின்பால் ஆழ்ந்த அன்பும் பற்றும் கொண்டிருந்தவர். அந்த வகையில், தமிழ்ச் சமூகத்துக்கு மிகவும் பயனுள்ள விஷயங்களைக் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற உயரிய நோக்கில் அருட்செல்வர் அவர்களால் கடந்த 1983-ம் வருடம் தை மாதம் ஆன்மிகம், கலை, இலக்கிய மாத இதழாகத் தொடங்கப்பட்டதுதான் உங்கள் 'ஓம் சக்தி' மாத இதழ்.

தரம் குறையாமலும், நம்முடைய கலாசாரம், பாரம்பர்யம் ஆகியவற்றின் தொன்மையை எடுத்துச் சொல்லும் வகையிலும் கடந்த 39 வருடங்களாகத் தொடர்ந்து ஓம் சக்தி மாத இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. அருட்செல்வர் எந்த லாபநோக்கமும் இல்லாமல் தொடங்கிய இந்த இதழை அவரைத் தொடர்ந்து சக்தி குழுமங்களின் தலைவர் ம.மாணிக்கம், இதழ் நடத்துவதில் உள்ள சிரமங்களைப் பொருட்படுத்தாமல் சிறப்பான முறையில் கொண்டு வருகிறார்.

கடந்த ஏப்ரல் இதழில் இருந்து 'ஓம் சக்தி' இதழ், ஆன்மிகம், தேசபக்தி, மருத்துவம், சாதனைப் பெண்கள் என்று மிகத் தரமாக வெளிவருவதாகப் பல தரப்பில் இருந்தும் வெளிப்படும் பாராட்டுகள் எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கவே செய்கிறது. அதே நேரம், ஓர் இதழை லாப நோக்கம் இல்லாமல் நடத்துவது என்பது ஊர் கூடி தேர் இழுப்பதைப் போன்றதுதான். அந்த வகையில் நாங்கள் வாசகர்களின் பேராதரவை எதிர்பார்க்கிறோம். மதிப்புக்கு உரிய சந்தாதாரராக ஓம் சக்தி இதழுடன் இணைந்து பயணிக்க அன்புடன் அழைக்கிறோம்.

| சந்தா விவரம் | |
|---|---|
| 1 வருடம் | ரூ.180/- |
| 3 வருடம் | ரூ.500/- |
| 5 வருடம் | ரூ.800/- |
| ஆயுள் சந்தா (14 வருடம்) (சிறப்பிதழ்கள் உட்பட) | ரூ.2,500/- |

**சந்தா தொடர்பான விவரங்களுக்கு : 0422 - 4322471**

## சந்தா விவரம்

☐ 1 வருடம் - ரூ.180/- ☐ 3 வருடம் - ரூ.500/- ☐ 5 வருடம் - ரூ.800/- ☐ ஆயுள் சந்தா- ரூ.2,500/- (14 வருடம்) (சிறப்பிதழ்கள் உட்பட)

வாசக அன்பர்கள் இந்த சந்தா ஃபாரத்தை பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை M.O/Cheque/D.Dயாக 'SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI' என்ற பெயருக்கு எடுத்து ஆசிரியர், ஓம் சக்தி, சக்தி சுகர்ஸ் லிமிடெட், 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் - 641 018 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

பெயர்:........................................

முகவரி:........................................

செல்பேசி:.................... மின்னஞ்சல்:....................

சந்தா விவரம்:........................................

அலைமோதி இறுதியாக நிலைப்பாட்டிற்கு வந்தது. பெற்றோர்கள் இசைந்தனர்.

~~~~~~~~~~~

இரவு.

அரசு விருந்தினர் விடுதியிலேயே தங்க ஏற்பாடு செய்துவிட்டார் கோபாலன். தென்னங்குடிக்குச் செல்ல, வாகனத்துடன் காலை ஒன்பது மணிக்கு வருவதாகக் கூறி விடைபெற்றுச் செல்கிறார்.

இணை இயக்குநருக்கு செல்பேசியில் முழுத் தகவலையும் தெரிவித்த இளங்கோ, அவரது பாராட்டுகளை மனசின் ஓரத்தில் பொத்தி வைத்துக்கொண்டார்.

ருக்மணிக்குப் பேசினார். "ம், இப்பவாவது என் ஞாபகம் வந்துச்சா?" எனச் செல்லக் கோபம் காட்டினாள். சமாதானம் சொல்லி, விடை பெற்றார். படுத்தவுடன் தூக்கம், தானே வந்து தழுவிக்கொள்கிறது.

மறுநாள் காலை. எட்டு மணிக்கெல்லாம் வாகனத்துடன் வரும் கோபாலனையும் ஓட்டுநரையும், சிற்றுண்டிச்சாலைக்கு அழைக்கிறார். பொங்கல், வடை, காப்பி உண்டபின் பில்லுக்குப் பணம் கொடுக்கத் தாவிய கோபாலனைத் தடுத்து, தானே கொடுத்து வெளிவருகிறார். "உங்க உதவிக்கு ரொம்ப நன்றி கோபாலன்! இப்போ நான் இங்கிருந்து தென்னங்குடி போய் அந்த வேலையை முடிச்சுக்கிட்டு மதியம் அல்லது மாலை திரும்பிவிடுவேன். வந்ததும் உங்களிடம் வாகனத்தை ஒப்படைத்தபின் பெரும்பாலும் இரவு அல்லது காலை சென்னை கிளம்பி விடுவேன். வண்டிக்கு டீசல் ஏதும் போடணுமா?"

"வேண்டாம் சார்! டேங்க் ஃபில் பண்ணித் தானிருக்கு. எது வேணும்னாலும் டிரைவர் ராமசாமிகிட்டே கேளுங்க. பொறுப்பானவர்."

இன்றைய பயணம் தொடங்கியது. தென்னங்குடி வேறு திசையில். எனினும் இங்கும் பிரச்னையின் ஆணிவேர் ஒன்றே.

"இங்கிருந்து எத்தனை கிலோமீட்டர் இருக்கும் ராமசாமி?"

"எழுபது கிலோமீட்டர் சார். காலைநேரம், அவ்வளவு டிராஃபிக் இருக்காது."

"நிதானமாகவே ஓட்டுங்க. நல்லா ஓட்டுறீங்க நீங்க!"

"நன்றி சார்! ரோடு நல்லாயிருந்தா இன்னும் வசதி சார்..."

குறையாகவும் சொல்லாமல் உள்ளதைச் சொல்லி காரணம் விளக்கும் பாங்கை ரசிக்கிறார் இளங்கோ. தென்னங்குடி பற்றியும் அந்த ஊரின் தனித்தன்மை பற்றியும் இயல்பாக விசாரிக்கிறார்.

ராமசாமி, பன நொங்கு சீவிச் சுளையெடுப்பது போல் விண்டுரைக்கிறார்:

"என்னோட மாமனார் அந்த ஊர்தான் சார். மக்கள் கொஞ்சம் கடிசுதான். விவசாயம் பொய்த்துப் போச்சு. அதையே நம்பியிருந்த குடும்பங்க கொஞ்சம் கொஞ்சமா வேற்றூர் போயிட்டாங்க. ஊர்ப் பெரிசுங்கதான் பழைய பெருமையும் வீம்பும் பேசிக்கிட்டுத் திரிவாங்க. கட்சிக்காரவுங்க அப்பப்ப எதாவது பிரச்னையக் கொளுத்திப் போட்டுக்கிட்டே யிருப்பாங்க. சொந்தமா இருக்கிற மொறட்டுக் கொணத்தோட இது வேற... கஞ்சிக்குக் காசிருக்கோ இல்லையோ - குடிக்குமட்டும் காசு பொரட்டீடுறாங்க."

"கோயில், சாமி, சாதின்னு?...."

"இருக்கு சார் எங்கயும் போல இங்கயும். என்ன, சில ஊர்ல அது அடிமனசுல கெடக்கும். பெரிய வில்லங்கம் கெடையாது. ஆனா, இங்க கொஞ்சம் தூக்கலா மேல மிதந்துகிட்டே யிருக்கும்... முன்ன சொன்ன மாதிரி பழம் பெருமையின்னு, நா உசத்தி; நீ எங் கீழதான்னு வித்தியாசம் பார்க்கிறது; அத வச்சே அலம்பல், ஆகாத்தியம் செய்யிறது..."

"பள்ளிக்கூடம் எங்கேயிருக்குன்னு தெரியுமா ராமசாமி?"

"தெரியும் சார்! ஒரே பள்ளிக்கூடம்தான் இங்கேயிருக்கு. இந்தக் காலனி தாண்டி கோயிலுக்கு வடக்கே இருக்கு. அங்கேயே வண்டியை விடட்டுமா சார்? "

"ம்... சரி, அங்கயே போகலாம்."

பள்ளி வாசலில் வேப்பமர நிழலில் நிறுத்தச் சொல்லி இறங்கி, கோப்புடன் நிதானமாக உள்ளே செல்கிறார் இளங்கோ.

வாசலுக்கு வேகமாக வந்து, சந்தேகத்துடன் விசாரிக்கிறார் தலைமையாசிரியர்.

"சார் யாருன்னு..?"
~~~~~~~~~~~

"சென்னையிலிருந்து - டிப்பார்ட்மெண்டி லிருந்து வர்றேன்."

அடையாள அட்டையைக் காண்பிக்கும் இளங்கோவிற்கு வணக்கம் தெரிவித்து,

"வாங்க சார்! நாந்தான் எச் எம். கேசவ மூர்த்தி. தகவல் சொல்லவேயில்லையே; நானே வந்து கூட்டி வந்திருப்பேனே!"

"பரவாயில்லே, கேசவன்! முதல்லே, கொஞ்சம் வகுப்புகளுக்குப் போய்ப் பார்ப்போம்! வாங்க!" என்ற இளங்கோ வராந்தாவிலிருந்து வகுப்பறை ஒன்றுக்குள் நுழைகிறார்.

ஆசிரியை பாடத்தை நிறுத்தி வணக்கம் தெரிவிக்க, உடன் மாணவ மாணவிகள் எழுந்து நின்று இரு கரம் கூப்பி, ஒரே குரலில், "குட் மார்னிங் சார்!" என்று சேர்ந்திசைபோல்

இங்கும் சிலரது கரங்களில் நீல நிறக் கயிறு. "நன்கு படித்து முன்னேறுங்கள்! தெரியாததை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று கூறி, வெளியேறுகிறார். கிட்டத்தட்ட அனைத்து வகுப்பறைகளையும் உள்நுழைந்து பார்த்துவந்துவிட்டார் இளங்கோ .

தலைமையாசிரியரை நோக்கி, "வாங்க உங்க அறைக்குப் போகலாம். இங்கே எங்காவது காப்பி, டீ கிடைக்குமா?" எனக் கேட்கிறார்.

"ஓ! நிச்சயம் சார். வாங்க நம்ம ரூமுக்குப் போகலாம். அஞ்சு நிமிஷத்திலே காப்பி வந்திடும்."

"சரி கேசவன், உங்களுக்கும் சேர்த்துச் சொல்லுங்கள். அப்பிடியே ஓட்டுநர் ராமசாமிக்கும் சொல்லிடுங்க."



ஒலிக்கின்றனர்.

இளங்கோவின் பார்வை மாணவர் கரங் களில் பாய்ந்தோடுகின்றது. சிலரது கரங்களில் நீல நிறக் கயிறு கட்டப்பெற்றுள்ளது!

வணக்கம் சொல்லி வெளியேறுகிறார்.

அடுத்த அறைக்குள் செல்கிறார். இதே காட்சி அங்கும். கரங்கூப்பி வணக்கம் கூறும் மாணவ மாணவியர் கரங்களில் பாய்கிறது இளங்கோவின் பார்வை.

வேறொரு அறைக்குள் நுழைந்தவர், "உங்கள் கைகளைச் சுத்தமாக வைத்துள்ளீர் களா? நகங்கள் வளர்க்கிறீர்களா? நகத்தில் அழுக்குச் சேர்ந்துள்ளதா?" என்று கேட்டதுமே அவர்கள் தம் இரு கரம் நீட்டிக் காண்பிக்கின்றனர்.

"சொல்லீட்டேன் சார்!"

"உங்க அறை, வகுப்பறைகள் எல்லாமே சுத்தமாயிருக்கு. வாழ்த்துகள்!"

"நன்றி சார்!"

"எத்தனை வருடமா இந்தப் பள்ளியில் பணி?" கேள்வியை முடிக்கு முன்பே,

"பதினைந்து வருஷமாச்சு. பக்கத்திலே ஆசாரிப்பாளையம்தான் சொந்த ஊரு..."

"சரி, அதென்ன, பல மாணவ மாணவியர் கைகளில் நீல நிறக்கயிறு? எதாவது பண்டிகை விசேஷமா? ஆடிப் பெருக்குக்கு சில ஊர்கள்ல மஞ்சள் கயிறு கட்டிக்கிற மாதிரியா?"

"இல்ல... சார்... அது வந்து...."

"சொல்லுங்க, எதுவாயிருந்தாலும்

சொல்லுங்க, ம்!"

"அது வந்து... அவுங்க வேறன்னு..."

"வேறேன்னு?' வேறே'ன்னா என்ன கேசவ மூர்த்தி? புரியும்படியாச் சொல்லுங்க..."

"இல்லே, அவுங்க வேற ஜனங்கன்னு..."

"வேற ஜனங்கன்னா?"

"இல்லே சார். வேற ஜாதி..."

"ஓ! நீலக் கயிறை நீங்க கட்டச் சொன்னீங்களா, அவுங்களா கட்டிக்கிட்டாங்களா?"

"இல்ல சார், முன்னாடி இருந்திருக்கு... ஊர்க்கட்டுப்பாடு...."

"இப்போ அப்பிடி விதி, சட்டம், நடைமுறை தாக்கீது ஏதாவது எங்கிருந்தாவது வந்திருக்கா உங்களுக்கு? ஊர்ல வேற யாராவது இப்பிடிச் செய்யுங்கன்னு உங்களுக்குச் சொன்னாங்களா? அப்பிடி யாராவது சொல்லி யிருக்காங்கன்னா சொல்லுங்க! புகார் ஒன்னு குடுங்க... இது சம்பந்தமா வேறே எதாவது பிரச்னைன்னா நம்ம துறையும் அரசும் அதைத் தீர்க்க முன்வரும்."

"இல்லே சார். இப்பவே அதைக் கழட்டிடச் சொல்றேன் சார்!"

"நல்லது கேசவன்! நாம் இங்கே கல்வியை யும் ஒழுக்கத்தையும் கத்துக்குடுக்கிறோம். அதோட அறிவையும் கொடுக்கணும்... அதுக்குமேல முடிஞ்சா வாழ்க்கைக்கு உதவுகிற நல்ல பழக்க வழக்கங்களையும் கத்துக் குடுக் கிறோம். மனுஷனுக்கு மனுஷன் என்ன வேறுபாடு? சொல்லுங்க! உங்க கணக்குப்படி, இதோ உங்க முன்னாடி உக்காந்து பேசிக்கிட்டிருக்கேனே எனக்கும் நீங்க நீலக்கயிறு கட்டவேண்டியதுதான். சின்ன வயசிலே பள்ளிக்கூடத்திலே எனக்கு இந்த வேறுபாடு இருந்ததில்லை; ஆனா, அதே சமயம், பள்ளி நண்பன் வீட்டிலே அவுங்க பெரியவங்க பார்வையிலே இந்த வித்தியாசம் இருந்தது. ஆனா, அதே நண்பன்தான் எனக்கு வேலைக்கெல்லாம் உதவினான்... ம்... உங்களுக்கு எது நல்லதுன்னு தோணுதோ அதை தைரியமாய் செய்யுங்க. ஊர் உலகம் சொல்லுதேன்னு தீமைக்கு ஒத்துப்போகாதீங்க. நீங்கதான் இந்தப் பிள்ளைகளுக்கு வழிகாட்டி! அடுத்த தலைமுறைக்கு வெளிச்சம் காட்ட வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கு."



"இங்கும் சிலரது கரங்களில் நீல நிறக் கயிறு. "நன்கு படித்து முன்னேறுங்கள்! தெரியாததை ஆசிரியரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் "என்று கூறி, வெளியேறுகிறார். கிட்டத்தட்ட அனைத்து வகுப்பறைகளையும் உள்நுழைந்து பார்த்து வந்து விட்டார் இளங்கோ."

இளங்கோவின் பேச்சை மவுனமாய் உள்வாங்கிக் கொண்டிருந்த கேசவமூர்த்தி , எழுந்து சென்று அறை வாயிலில் நின்ற பள்ளி உதவியாளரிடமிருந்து காப்பியை வாங்கிவருகிறார்.

"இந்தாங்க சார் காப்பி!" என்று காப்பியைத் தந்த கேசவன் வெளியேறி, வகுப்பறைகளுக்குள் நுழைகிறார்.


சற்று நேரத்தில் தலைமையாசிரியர் மேசை மீது கத்தரிக்கப்பெற்ற நீல வண்ணக் கயிறுகள் குவியலாய் நிறைந்தது. இளங்கோவை நோக்கிப் புன்னகைத்தவாறு கேசவன் அவற்றை எடுத்துக் குப்பைத்தொட்டியில் வீசுகிறார். பித்தளை டபராவில் தலைகீழாகக் கவிழ்த்திருந்த டம்ளரைப் பக்குவமாய்த் திருப்பி, கீழே சிந்தாமல் காப்பியைருசிக்கிறார் இளங்கோ. இளங்கோவை இமைக்காது நோக்கும் கேசவனும் காப்பியைச் சுவைக்கிறார்.



Sakthi
as pure as mother's love
தூய்மையின் வலிமையுடன்
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi MILK SUPREME
Sakthi MILK SELECT Pasteurised Toned Milk 500ml
Sakthi MILK SPECIAL Pasteurised, Homogenised, Standardised Milk
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

தீபாவளி சிறப்பிதழ்

# ராசிபலன்



## மேஷம்

**(அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்)**

இந்த மாதம் முழுவதும் தனவரவு அதிகரிக்கும். சுற்று வட்டாரங்களில் கௌரவத்துடன் நடத்தப் பெறுவீர்கள். விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். மாதப் பிற்பகுதியில் உறவினர்களிடம் வீண் வாக்குவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வெகுநாள்களாய் விரும்பிய தங்க ஆபரணம் வாங்கி மகிழ்வீர்கள். பாதியில் நிறுத்தி வைத்திருந்த வீடு கட்டுமானப் பணிகளைத் தொடர்வீர்கள். தந்தையுடன் மாத முற்பகுதியில் ஏற்பட்ட பிணக்கு பிற்பகுதியில் சரியாகி விடும். சிலர் புதிதாக வீட்டிற்குத் தேவையான மின்னணு சாதனங்களை வாங்கி மகிழ்வீர்கள். சிலருக்குத் தொலைதூரப் பயணம் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதால் பயணத்தில் கூடுதல் கவனம் தேவை.

அலுவலகத்தில் ஓரளவு முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். என்றாலும் உயரதிகாரிகளிடம் பேசும் போது சற்று பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

தொழில் மற்றும் வியாபாரம் மாதப் பிற்பகுதியில் விறுவிறுப்பாக நடக்கும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட போட்டிகளும் நெருக்கடிகளும் குறையும். எதிர்பார்த்த லாபம் அதிகமாகக் கிடைக்கும்.

கலைத்துறை அன்பர்களுக்கு மிகவும் அமோகமான மாதமாக இருக்கும். அதிர்ஷ்டமான நேரமாகவும் இருக்கப்போகிறது. எதிர்பார்க்காத சில பல ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவீர்கள்.

மாணவர்களுக்கு சனி பகவானின் பார்வையினால் படிப்பில் சிறு தடங்கல்கள் ஏற்பட்டாலும் குருபகவானின் பார்வையினால் அதனைத் தாண்டி நல்ல மதிப்பெண்களை பெற்று விடுவீர்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும். அலுவலகத்திற்குச் செல்லும் பெண்களுக்குப் பணவரவிற்குக் குறைவிருக்காது.

**சாதகமான நாள்கள்:** 1,2,9,14,17,22,25,26,28

**சந்திராஷ்டம நாள்கள்:** 5 மாலை முதல் 6, 7

**வணங்க வேண்டிய தெய்வம்** முருகப் பெருமான்

**பரிகாரம்:**செவ்வாய்க்கிழமைகளிலும்,கார்த்திகை நட்சத்திரத்திலும் கந்தர் அனுபூதி பாராயணம் செய்து, விளக்கேற்றுவது நல்லது.



## ரிஷபம்

**(கார்த்திகை 2,3,4-ம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1,2-ம் பாதம்)**

குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். உறவினர்களாலும் நண்பர்களாலும் சிலருக்கு நன்மைகள் ஏற்படும். தாயின் உடல்நிலையில் மாத முற்பகுதியில் சற்று கவனம் செலுத்தவும். சிலருக்குக் குடும்பத்தை விட்டு வெளியூர் பயணம் செல்லும் வாய்ப்பு ஏற்படும். பண விஷயத்திலும் கவனம் தேவை. குழந்தைகள் ஆரோக்கியத்துடன் இருப்பார்கள். வாழ்க்கைத் துணையுடன் சற்று அனுசரித்துச் சென்றால் பிரச்னைகளைத் தவிர்க்கலாம். மாதப் பிற்பகுதியில் எதிர்பாராத தனயோகம் ஏற்படும். திருமண வயதில் உள்ளவர்களுக்குத் திருமணம் கூடி வரும். கணவன் மனைவிக்கிடையேயான உறவில் சிறு சிறு சலசலப்புகள் வந்தாலும் உடனே சமாதானம் ஆகிவிடுவீர்கள்.

அலுவலகம் செல்பவர்களுக்கு மாத முற்பகுதியில் சில இடைஞ்சல்கள் தாமதங்கள் ஏற்பட்டு பிற்பகுதியில் சரியாகிவிடும். சிலருக்குப் பதவி மாற்றமோ இடமாற்றமோ ஏற்படக்கூடும்.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு மறைமுக எதிரிகளின் பிரச்னைகள் இருந்த போதிலும் அதனை சாமர்த்தியமாக வெல்வீர்கள். மாதப் பிற்பகுதியில் வியாபாரத்தில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும்.

கலைத்துறையில் உள்ளவர்களுக்கு மாதத்தின் முற்பகுதியில் சில பின்னடைவுகள் இருந்தபோதிலும் பிற்பகுதியில் புதிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டுச் சரி செய்யப்படும்.

மாணவர்களுக்கு மாத முற்பகுதியில் கவனச்சிதறல் இருந்தபோதிலும் பிற்பகுதியில் சுறுசுறுப்புடன் படிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அக்கம்பக்கத்தினரிடம் சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு சிறிது காலத்திற்குப் பிறகு சரியாகிவிடும். அலுவலகத்திற்குச் செல்லும் பெண்கள் முயன்றால் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கப் பெறலாம்.

**சாதகமான நாட்கள்:** 1,3,5,12,17,19,23,26,29

**சந்திராஷ்டம நாள்கள்:** 8, 9, 10 மாலை வரை

**வணங்க வேண்டிய தெய்வம்:**காலபைரவர்

**பரிகாரம்:**ஒவ்வொரு தேய்பிறை அஷ்டமி திதியில் மிளகு தீபம் ஏற்றி அர்ச்சனை செய்தோ செவ்வரளி மலர் தூவி பூஜிப்பதோ நன்மை தரும்.

மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகளுக்கான ராசிபலன் அதிர்ஷ்டக் குறிப்புகள் மற்றும் எளிய பரிகாரங்களுடன் கணித்துத் தந்திருக்கிறார் ஜோதிடர் **பூமணி நாராயணன்,**
B.A. (Tamil) M.Sc (Astrology) ஜோதிடக் கலை பயிற்றுநர்



## மிதுனம்

**(மிருகசீரிடம் 3,4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ம் பாதம்)**

குடும்பம் மகிழ்ச்சியுடன் காணப்படும். மாத முற்பகுதியில் எடுக்கின்ற முயற்சிகள் வெற்றி பெறும். மிகவும் தைரியத்துடன் காணப்படுவீர்கள். பெற்றோருடன் இருந்த கருத்து வேறுபாடுகள் விலகும். உடன் பிறப்புகளுடன் மிகுந்த ஒற்றுமையுடன் பேசி மகிழ்வீர்கள். சிலர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளும் சுபச் செலவுகளும் ஏற்படும். மாதத்தின் பிற்பகுதியில் சுகபோகங்கள் நிறைந்து காணப் படும். சிலருக்குச் சிறிய அளவில் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டாலும் சிகிச்சையின் மூலம் உடனே நலம் பெற்று விடுவீர்கள். தந்தை வழியில் மறைமுகமான ஆதாயம் கிடைக்கும்.

அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு அஷ்டமச் சனியினால் சிறிதளவில் பாதிப்பு இருந்த போதும் குருவின் பார்வையினால் சரியாகும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் உள்ளவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுக்குக் கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும்.

கலைத்துறை அன்பர்களுக்கு இதுவரை எதிர்பார்த்துக் காத்திருந்த மனதுக்குப் பிடித்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பணவரவிற்குக் குறைவிருக்காது.

மாணவர்கள் ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதைக் கவனமுடன் கவனித்தீர்கள் என்றால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். உடல்நலனில் கவனம் தேவை.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு இந்த மாதம் முழுவதும் மிகவும் அதிர்ஷ்டம் தரும் மாதமாக இருக்கும். அலுவலகம் செல்லும் பெண் களுக்கு மறைமுகத் தொந்தரவுகள் இருந்தாலும் குருவின் பார்வை அதனைச் சரி செய்து விடும்.

**சாதகமான நாள்கள்:** 2,6,7,14,17,19,24,27,29

**சந்திராஷ்டம நாள்கள்:** 10 மாலை முதல் 11, 12 பிற்பகல் வரை

**வணங்க வேண்டிய தெய்வம்:** தட்சிணாமூர்த்தி

**பரிகாரம்:** வியாழக்கிழமைகளில் குரு பகவானுக்கு விளக்கேற்றி முல்லை மலர் சாத்துவது குடும்பத்திற்கு முன்னேற்றத்தைக் கொடுக்கும்.



## கடகம்

**(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்)**

காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடன் பிறந்தவர்கள் மூலம் தக்க நேரத்தில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தந்தையால் அனுகூலம் உண்டு. தாயாருடன் கருத்து வேறுபாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். மிகவும் மகிழ்ச்சியுடனும் சந்தோஷத்துடனும் இருப்பீர்கள். சில அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். அதற்குத் தங்களின் தந்தை உதவி செய்வார். புதிய வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். நவீன ரக மின்சார மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். வாழ்க்கைத்துணையிடம் பண விஷயத்தில் விவாதத்தைத் தவிர்க்கவும். தாய்மாமன் வகையில் வாய் வார்த்தைகளைப் பார்த்துப் பேசவும். மாத முற்பகுதியில் தனவரவு சற்றுக் குறைந்து காணப்பட்டாலும் பிற்பகுதியில் அதிகரித்துப் பொருளாதாரம் சிறக்கும்.

அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு வேலையில் சற்று கவனமாக இருக்க வேண்டிய மாதம் இது. சுறுசுறுப்புடன் எல்லா வேலைகளையும் பார்த்தீர்களென்றால் முடித்துவிடலாம். சிலருக்கு பணிமாற்றம் ஏற்படும் சூழ்நிலை ஏற்படும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் உள்ளவர்களுக்குத் தொழில் சிறந்து விளங்கும். தொழிலில் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிற்பகுதியில் தனவரவு அபரிமிதமாக இருக்கும்.

கலைத்துறை அன்பர்களுக்குச் சற்று சுமாரான மாதமாகவே உள்ளது. மாதப் பிற்பகுதியில் சில ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். ஆசிரியரிடம் சந்தேகங்களைக் கேட்டு உடனுக்குடன் சரி செய்து கொள்ளுங்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சற்று சிரமங்கள் இருப்பினும் புத்தி சாதுரியத்தால் சமாளித்து விடுவீர்கள்.

**சாதகமான நாள்கள்:** 4,6,8,16,18,22,25,28,30

**சந்திராஷ்டம நாள்கள்:** 12 பிற்பகல் முதல் 13, 14 பிற்பகல் வரை

**வணங்க வேண்டிய தெய்வம்:** விநாயகர்

**பரிகாரம்:**விநாயகருக்கு சதுர்த்தி திதியன்று அருகம்புல் சாத்தி விளக்கேற்றுவது குடும்பத்திற்கு முன்னேற்றத்தைத் தரும்.




**(மகம், பூரம்,**
**உத்திரம் 1-ம் பாதம்)**

இந்த மாதம் எதிர்பாராத தன யோகத்தை அடையப் போகிறீர்கள். எடுத்த முயற்சிகள் எல்லாம் வெற்றிகரமாக முடியும். உடன் பிறந்தவர்களின் அன்பும் அரவணைப்பும் கிடைக்கும். குடும்பத்தில் தங்களின் மரியாதை உயரும். குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி அதிகரித்துக் காணப்படும். காதல் விஷயத்தில் மட்டும் சற்று கவனமுடன் இருக்கவும். வெளிநாட்டிலுள்ள உறவினரிடம் இருந்து நல்ல செய்தி ஒன்று வந்து சேரும். தாயாரின் உடல் நிலையில் கவனம் தேவை. பேச்சுத்திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் களை கட்டும். நிதிநிலைமை நன்றாக இருக்கும். நெடுநாள்களாக வராத கடன் வந்து சேரும். முயற்சிகளில் வெற்றி ஏற்படும். மாத முற்பகுதியில் உடல்நலனில் அக்கறை தேவை. பிற்பகுதி அமோகமாக இருக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலும் சில சிரமங்கள் இருந்தாலும் சக ஊழியர்களின் உதவியுடன் எல்லா வேலைகளையும் சரிவர செய்து முடித்து விடுவீர்கள்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் உள்ளவர்களுக்கு வியாபாரம் மற்றும் தொழில் மிகவும் சிறந்து விளங்கும். ஆனால் சிறிது கடுமையாக உழைக்க வேண்டி வரும்.

கலைத்துறை அன்பர்களுக்கு மிகவும் அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும். திடீரென பெரிய ஒப்பந்தங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.

மாணவர்களுக்குப் படிப்பு மிகவும் சிறந்து விளங்கும். உணவில் கவனம் தேவை. வயிறு சம்பந்தமான செரிமானப் பிரச்னை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மாத முற்பகுதி சுமாராக இருந்தாலும் மாதப் பிற்பகுதியில் மிகவும் மகிழ்ச்சியும் சந்தோசமும் நிறைந்து காணப்படும். உத்தியோகம் செல்லும் பெண்களுக்கு சுமாரான மாதம் இது.

**சாதகமான நாள்கள்:**1,2,6,8,1219,21,27,30

**சந்திராஷ்டம நாள்கள்:** 14 பிற்பகல் முதல் 15, 16 வரை

**வணங்க வேண்டிய தெய்வம்:**சிவபெருமான்

**பரிகாரம்:** திங்கள் கிழமைகளில் விளக்கேற்றி வில்வதளம் சாத்துவது சிறப்பைத் தரும்.




**(உத்திரம் 2,3,4 -ம் பாதம்**
**ஹஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்)**

குடும்பத்தில் சந்தோஷமும் மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும். பணவரவு அதிகரிக்கும். இந்த மாதம் முழுவதும் உடன்பிறப்புகளுடன் வாக்குவாதம் செய்ய வேண்டாம். அனுசரித்துச் செல்லுங்கள். சிலருக்கு திடீரென பெற்றோரின் சம்மதத்துடன் காதல் திருமணம் கைகூடும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும். சிலருக்குப் பிள்ளைகளால் பிரச்னையும் பின்பு சமாதானமும் ஏற்படும். சிலருக்கு திடீரென வாகனயோகம் ஏற்படும். குழந்தைகளின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மாத முற்பகுதியில் மருந்து மாத்திரை வாங்கு வதில் செலவுகள் ஏற்படும் பிற்பகுதியில் தந்தையினால் தைரியமும் அனுகூலமும் கிடைக்கப் பெறுவீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குக் கேதுவின் பார்வை தங்களின் ஜன்ம ராசியில் விழுவதால் எதையுமே முழு முயற்சி செய்த பின்பே கிடைக்கும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் மாத முற்பகுதியில் நல்ல முன்னேற்றமும்,மாதப் பிற்பகுதியில் பெரும் லாபமும் கிடைக்கலாம்.

கலைத்துறை அன்பர்களுக்கு குரு பகவானின் பார்வையினால் தொழில் சம்பந்தமாக நினைத்த அனைத்து விஷயங்களையும் மாத முற்பகுதியில் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். தன வரவு மிகுந்து காணப்படும்.

மாணவ மாணவியர்களுக்குப் படிப்பில் நல்ல முன்னேற்றம் காணப்படும். பெற்றோர்கள் மகிழும் விதத்தில் மதிப்பெண் பெற்றுப் பாராட்டு பெறுவீர்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு இந்த மாதம் மிகவும் மகிழ்ச்சி நிறைந்த மாதமாக இருக்கப் போகிறது. சொந்தங்களின் விசேஷங்களுக்குச் சென்று வருவீர்கள். அலுவலகம் செல்லும் பெண்கள் கௌரவமாக நடத்தப் பெறுவீர்கள்.

**சாதகமான நாள்கள்:**1,2,5,6,8,14,21,24,26

**சந்திராஷ்டம நாள்கள்:** 17, 18, 19 காலை வரை

**வணங்க வேண்டிய தெய்வம்:**மஹாவிஷ்ணு

**பரிகாரம்:**புதன் கிழமைகளில் மகாவிஷ்ணுவிற்கு துளசி மாலை சாத்தி அர்ச்சனை செய்வது குடும்பத்தில் சந்தோஷ சூழ்நிலையை ஏற்படுத்தும்.

## துலாம்

**(சித்திரை 3,4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3-ம் பாதம்)**

குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சிறு பிரயாணம் ஏற்படும். மாதத்தின் முற்பகுதியை விடப் பிற்பகுதியில் தனவரவு அதிகரித்துக் காணப்படும். குடும்பத்தில் வாழ்க்கைத்துணையின் கை ஓங்கியிருக்கும். மின்சார, மின்னணு சாதனங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எடுத்த முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். சில கிரகங்கள் அனுகூலமாக இல்லாத காரணத்தினால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வதன் மூலம் பிரச்னைகளையும் பாதிப்புகளையும் தவிர்க்கலாம். மாதப் பிற்பகுதியில் பணவரவு அபரிமிதமாக இருக்கும். தூர தேசத்தில் இருக்கும் பிள்ளைகளிடமிருந்து நல்ல செய்தி வந்து சேரும். குழந்தைகள் ஆரோக்கியத்தில் கவனம் எடுப்பது நல்லது. தாய்மாமன் வகையில் சில வாக்குவாதங்களும் பிரச்னைகளும் பிரிவினைகளும் ஏற்பட வாய்ப்புள்ளது.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பெரும் பாலான நாள்களில் அதிகப்படியாக உழைக்க வேண்டியிருக்கும். ஆனால், மிகவும் கௌரவத்துடன் நடத்தப்படுவீர்கள்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் உள்ளவர்களுக்கு செய்யும் இடத்தை மாற்றவேண்டி வரும். வியாபாரம் மிகுந்த லாபத்துடன் நடக்கும்.

கலைத்துறை அன்பர்களுக்கு இந்த மாதம் தொழில் சம்பந்தமாக அதிகப்படியான பிரயாணங்களை மேற்கொள்ளப் போகின்றீர்கள். உடன் வருபவர்களுடன் எச்சரிக்கையுடன் பேசவும்.

மாணவர்களுக்கு மாத ஆரம்பத்தில் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டி இருக்கும். ஆசிரியர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் இருந்து உங்கள் செயல்களுக்குப் பாராட்டுகள் கிடைக்கும். அலுவலகத்திற்குச் செல்லும் பெண்களுக்குச் சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**சாதகமான நாள்கள்:** 4,6,7,13,16,24,26,28,29

**சந்திராஷ்டம நாள்கள்:** 19 காலை முதல் 20, 21 பிற்பகல் வரை

**வணங்க வேண்டிய தெய்வம்:** துர்கை அம்மன்

**பரிகாரம்:**வெள்ளிக் கிழமைகளில் ராகு காலத்தில் விளக்கேற்றி செவ்வரளி மலர் சாற்றுவது நல்லது.

## விருச்சிகம்

**(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை )**

மிகுந்த தைரியத்துடனும் அதிகாரத்துடனும் காணப்படுவீர்கள். மாதப் பிற்பகுதியில் வருமானம் பெருகி பொருளாதாரம் சிறக்கும். குடும்பத்தில் வாழ்க்கைத் துணையின் கை ஓங்கி இருக்கும். இளைய உடன்பிறப்புகளின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். உறவினர்களால் குடும்பத்தில் பிரச்னை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நிலம் சம்பந்தமான விஷயங்களில் எதிர்பாராத அதிர்ஷ்டம் ஏற்படும். பிரிந்திருந்த கணவன் மனைவி ஒன்று சேரும் வாய்ப்பு உள்ளது. உறவினர் மற்றும் நண்பர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். சுபநிகழ்ச்சிகளை ஆடம்பரமாக நடத்தி முடிப்பீர்கள். அனைத்து விஷயங்களிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படும்.

அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்குப் பதவிஉயர்வு ஊதியஉயர்வு கிடைக்கும். சக ஊழியர்கள் உதவி செய்வதால் அதிகமான பணிச்சுமையை சமாளிப்பீர்கள்.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் வியாபாரம் அதிகரிக்கும். பொருளாதாரம் சிறக்கும்.

கலைத்துறை அன்பர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பணவரவு அதிகரிக்கும். சிலருக்கு வெளியூர், வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும்.

மாணவர்கள், பொழுதுபோக்குகளைக் குறைத்துக் கொண்டு படிப்பில் அதிக கவனம் எடுத்துப் படிப்பது நல்லது.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் பிரச்னைகளைச் சற்று பொறுமையாகக் கையாள்வது நன்மை பயக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**சாதகமான நாள்கள்:** 1,5,6,8,12,15,16,18,26

**சந்திராஷ்டம நாள்கள்:** 21 பிற்பகல் முதல் 22, 23 வரை

**வணங்க வேண்டிய தெய்வம்:** மஹாலக்ஷ்மி

**பரிகாரம்:** செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் விளக்கேற்றி மஹாலக்ஷ்மி அஷ்டோத்திரம் பாராயணம் செய்வது சுபிட்சத்தைத் தரும்.



தனுசு

**(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்)**

வெளி வட்டாரத்தில் மதிப்பு மரியாதை நல்லபடியாக இருக்கும். பெண்களால் நன்மைகள் உண்டாகும். வீட்டில் மகிழ்ச்சியும் நிம்மதியும் குடிகொள்ளும். வசதி வாய்ப்புகள் பெருகும். சிலருக்குத் தடைப்பட்டிருந்த திருமணம் கூடி வரும். குடும்பம் மகிழ்ச்சியில் திளைக்கும். வெளியூர்ப் பயணங்களின்போது கைப் பொருள்களை பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். தந்தைவழி உறவுகளால் செலவு ஏற்படும். வீடு மனை வாங்கும் எண்ணத்தைச் சற்றுத் தள்ளிப் போடுவது நல்லது. விலை உயர்ந்த தங்க நகைகளை இரவல் கொடுக்கவோ வாங்கவோ வேண்டாம். உடல்நலனில் கவனம் தேவை. குலதெய்வத்தை தரிசித்து வருவது நன்மை பயக்கும். பொதுவாக முன்னேற்றமான மாதமாகவே இது இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மாத முற்பகுதியில் வேலைகள் சுலபமாக இருந்தாலும் பிற்பகுதியில் சற்று கஷ்டப்பட்டுத்தான் முடிக்க வேண்டியது இருக்கும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் உள்ளவர் களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் கொடுக்கல் வாங்கல் விஷயத்தில் எச்சரிக்கை தேவை. எதிர் பார்த்ததை விட விற்பனை அதிகமாக இருக்கும்.

கலைத்துறை அன்பர்களுக்கு மறைமுக எதிர்ப்புகள் ஏற்படும். வதந்திகளைப் பற்றிக் கவலைப்படாமல் உங்கள் தொழிலில் மட்டுமே கவனமாக இருங்கள்.

மாணவர்கள் தேர்வுகளில் நல்ல மதிப்பெண் களைப் பெறுவார்கள். ஆசிரியர்களின் பாராட்டு கள் மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மாதத்தின் முற்பகுதியில் பணவரவு மிகவும் அதிகமாக இருக்கும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் வேலைச்சுமை சற்று கூடுதலாகவே இருக்கும்.

**சாதகமான நாள்கள்:** 2,6,8,10,15,18,20,22,29

**சந்திராஷ்டம நாள்கள்:** 24, 25, 26 மாலை வரை

**வணங்க வேண்டிய தெய்வம்:** பராசக்தி

**பரிகாரம்:** ஒவ்வொரு திங்கள் மற்றும் வெள்ளி அன்றும் வெள்ளை நிற மலர் சாத்தி விளக்கேற்றி வழிபட முன்னேற்றம் உண்டாகும்.



மகரம்

**(உத்திராடம் 2,3,4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம்)**

மாதத் தொடக்கத்தில் எல்லாக் காரியங்களிலும் வெற்றி உண்டாகும். அனைத்து விஷயங்களும் பொறு மையைக் கடைப்பிடிப்பது நல்லது. கூடுமானவரை மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நன்மை பயக்கும். புதிய ஆடை ஆபரணங்கள் வந்து சேரும். புதிய வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். உறவினர்களால் சில பிரச்னைகள் ஏற்படும் என்பதால் அளவோடு பேச்சு வைத்துக் கொள்வது நல்லது. நண்பர்களிடம் இருந்து எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் ஏற்படும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அலுவலகத்தில் ஓரளவு முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். உங்கள் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் உள்ளவர் களுக்கு அனைத்தும் விறுவிறுப்பாக நடக்கும். இந்த மாதம் முழுவதுமே வியாபாரம் மிகவும் சிறப்பாக இருக்கும். பணவரவு அதிகரித்து பொருளாதாரம் சிறக்கும்.

கலைத்துறை அன்பர்களுக்குப் புது வாய்ப்புகள் தேடி வரும். புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவீர் கள். தொழில் சம்பந்தமாக வெளியூர்ப் பிரயாணம் செய்வீர்கள்.

மாணவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். மதிப்பெண்கள் அதிகம் பெறுவீர் கள். போட்டி பந்தயங்களில் பங்கு பெறுவீர்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் மாதமாக இருக்கும். பணவரவு அதிகரித்துக் காணப்படும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்குச் சாதகமான சூழ்நிலை ஏற்படும். ஊதிய உயர்வு கிடைக்கும்.

**சாதகமான நாள்கள்:**3,7,10,14,15,17,20,21,30

**சந்திராஷ்டம நாள்கள்:** 26 மாலை முதல் 27, 28 வரை

**வணங்க வேண்டிய தெய்வம்:** புவனேஸ்வரி அம்மன்

**பரிகாரம்:**ஒவ்வொரு திங்கட்கிழமை அன்றும்,பௌர்ணமி அன்றும் விளக்கேற்றி மல்லிகை மலர் சாற்றி வழி பட சகல சௌ பாக்கியங்களும் பெருகும்.

## கும்பம்

**(அவிட்டம் 3,4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதம் )**

அரசாங்க வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். சுற்று வட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். குடும்பத்தில் உற்சாகம் நிலவும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. தாயாரின் ஆரோக்கியம் சிறந்து காணப்படும். கணவன் மனைவியிடையே அந்நி யோன்யம் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லை ஒரு முடிவுக்கு வரும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் ஏற்படும். வீடு, நிலம் சம்பந்தமான அனுகூலங்களைப் பெறுவீர்கள். குடும்பத்திற்கான செலவினங்கள் அதிகரித்தாலும் பணவரவும் அதிகமாகவே காணப்படும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிச்சுமை அதிகரித்து இருப்பதால் சற்று சிரமமான நேரம் இது. சிறிது கஷ்டப்பட்டுத்தான் எல்லா வேலைகளையும் செய்து முடிக்க வேண்டி இருக்கும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வியாபார சம்பந்தமாக வெளியூர்களுக்கு பயணம் செய்யும் சூழ்நிலை ஏற்படும்.

கலைத்துறை அன்பர்களுக்கு இந்த மாதம் மிகவும் அதிர்ஷ்டகரமானதாக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்

மாணவர்களுக்குப் பாடங்களில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. கஷ்டப்பட்டுப் படித்தால்தான் அதிக மதிப்பெண்கள் பெற முடியும். உடல் நலனில் அதிக கவனம் தேவை.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சிகரமான மாதமாகவே இருக்கும். தனவரவு அதிகரிக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பாராத சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சிலருக்கு திடீர் பதவிஉயர்வும் கிடைக்கலாம்.

**சாதகமான நாள்கள்:** 6,8,9,13, 15,18,20,23,26

**வணங்க வேண்டிய தெய்வம்:**அம்பிகை

**சந்திராஷ்டம நாள்கள்:** 1 மாலை முதல் 2, 3 மாலை வரை; 29, 30

**பரிகாரம்:** ஒவ்வொரு சனிக்கிழமை அன்றும் அம்பிகைக்கு விளக்கேற்றி மலர் சாத்தி வழிபடத் துன்பங்கள் விலகும்.

## மீனம்

**(பூரட்டாதி 4 - ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)**

மாதத் தொடக்கத்தில் எல்லாக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகம் சிலருக்கு உண்டாகும். குலதெய்வக் கோவில் களுக்குச் சென்று வருவீர்கள். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். வண்டி வாகனங்களில் செல்லும்போது சற்று கவனம் தேவை. பிள்ளைகளை அவர்களது போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. குடும்பத்திற்குத் தேவையான ஆடம்பரப் பொருள்கள் வாங்கி மகிழ்வீர்கள். தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதர சகோதரிகளுடன் அனுசரித்துச் செல்லுங்கள். வீண் விவாதங் களைத் தவிர்க்கவும். மாதப் பிற்பகுதியில் தனவரவு அதிகரிக்கும். மொத்தத்தில் ஏற்றமான மாதம் இது.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் உதவி கிடைக்கும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் உள்ளவர் களுக்கு மாதப் பிற்பகுதியில் வியாபாரம் பெருகி பொருளாதாரம் சிறக்கும். தனவரவு அதிகரிக்கும்.

கலைத்துறை அன்பர்களுக்குப் பணவரவில் சற்று தளர்வு ஏற்பட்டுப் பிறகு கிடைக்கும். தோழிகளுடன் குளிர் பயணம் செய்யும் வாய்ப்பு ஏற்படும்.

மாணவர்களுக்குப் படிப்பில் நல்ல முன்னேற்றம் காணப்படும். தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்று ஆசிரியர் மற்றும் பெற்றோர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு உறவினர்களின் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பாராட்டைப் பெறப் போகிறீர்கள். வேலைக்குச் செல்லும் பெண்ளுக்கு முன்னேற்ற மான மாதமாகவே இருக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பு தருவார்கள்.

**சாதகமான நாள்கள்:** 1,8,10,14,15,18,23,26,27

**சந்திராஷ்டம நாள்கள்:** 3 மாலை முதல் 4, 5 மாலை வரை

**வணங்க வேண்டிய தெய்வம்:**விநாயகப் பெருமான்

**பரிகாரம்:** வெள்ளிக் கிழமையன்று விளக் கேற்றி தும்பை மலர் சாத்தி வழிபட, கஷ்டங்கள் விலகி வாழ்வில் வளம் உண்டாகும்.




மீனாட்சி ரவிகுமார்

# கங்கை அம்மன் தரிசனம்!

நதிகளையும், மலைகளையும், இயற்கையின் பல்வேறு அம்சங்களையும் தெய்வமாக வழிபடுவது இந்துமதத்தின் மரபு. குறிப்பாக கங்கை அம்மன், பொன்னி அம்மன் என்று கங்கையும் காவிரியும் பெண் தெய்வங்களாக பல பகுதிகளில் வழிபடப்பெறுகின்றனர். பாரதத்தின் நதிகளில் மிகவும் பவித்ரமான நதி கங்கை. கங்கை தன்னில் ஸ்நானம் செய்பவர்களின் பாவங்கள் அனைத்தையும் போக்கி, அவர்களைப் புனிதப்படுத்துகிறது.

பூவுலகுக்குப் புனிதம் சேர்த்த இந்த

கங்கையை அம்மனாக பாவித்து வழிபடும் மரபு நம் தேசமெங்கும் காணப்படுகிறது. அப்படி கர்நாடக மாநிலம் பெங்களூரு மல்லேஸ்வரம் பகுதியில் அமைந்திருக்கும் கங்கை அம்மன் ஆலயத்தில், கங்கை அம்மனைப் போற்றி நன்றி செலுத்தும் விதமாகக் கொண்டாடப்படும் திருவிழாவை தரிசிக்கலாம்.

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்; தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்பது பழமொழி. நாம் எதை விதைக்கிறோமோ அதைத்தான் அறுவடை செய்ய முடியும். ஒருவருக்கு அவருடைய கர்மவினைகளின்படியே வாழ்க்கை அமைகிறது. நோய் நீங்க மருந்து என்பதுபோல் பாவங்கள் நீங்க புனித நதிகளில் நீராடி இறைவனை வழிபட்டு தானதர்மங்கள் செய்யவேண்டும். அப்படி மனிதர்களின் பாவங்களை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு புண்ணிய பலன்களைத் தருபவள் கங்கை. அவளை கங்கை அம்மனாக கோயில் கட்டி வழிபடுவது மரபு.


கங்கை அம்மனை எவர் வேண்டுமானாலும் பூஜை செய்யலாம். நம்பிக்கையுடனும் ஆழ்ந்த பக்தியுடனும் வழிபடுபவர்களின் பாவங்களைப் போக்கி புண்ணியம் அருள்வாள்.



மூவுலகங்களிலும் தவழ்ந்து ஓடும் பெருமை கங்கைக்கு உண்டு. அதனால் தான் கங்கைக்கு 'திரிபதகாமினி' என்ற பெயர் ஏற்பட்டது. யுகயுகாந்தரங்களாக மகரிஷிகளும், முனிவர்களும், ஞானியர்களும் கங்கை அம்மனை வழிபட்டிருக்கிறார்கள்.

கங்கை அம்மனுக்கு மிக அரிதாகவே ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. அத்தகைய ஆலயங்களுள் ஒன்று பெங்களூரு மல்லேஸ்வரம் பகுதியில் அமைந்திருக்கும் கங்கை அம்மன் கோயில். பெங்களூரு மல்லேஸ்வரம் 2-வது கோயில் தெருவில் ஸ்ரீகங்கை அம்மன், 'கங்கம்மா தேவி'யாக எழுந்தருளியுள்ளாள்.

தற்போது ஆலயம் அமைந்திருக்கும் பகுதி முற்காலத்தில் 'தண்ணீர் தொட்டி கிராமம்' என்று அழைக்கப்பட்டு வந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் வழிபாடு செய்ய ஓர் ஆலயம் இல்லாத காரணத்தினால், 1928-ம் வருடம் கண்ணப்பன் என்பவரும் அவருடைய சகோதரர் செங்கல்வராயன் என்பவரும் கங்கை அம்மன் மற்றும் மாரியம்மனுக்கு ஆலயம் எழுப்பினர். அடுத்த சில வருடங்களில் நகர விரிவாக்கத்தின்போது குடியிருப்புப் பகுதி கோதண்டராமபுரம் என்ற கிராமத்துக்கு





மாற்றப்பட்டபோதுகூட, வழக்கம்போலவே கங்கை அம்மனுக்கும் மாரியம்மனுக்கும் பூஜை வழிபாடுகள் தொடர்ந்து நடைபெறவே செய்தது.

கோயில் கட்டி பல வருடங்கள் ஆகிவிட்டதால் கோயிலை புதுப்பிக்க விரும்பினர். ஆனாலும், பணி தொடங்கவில்லை. இந்நிலையில் நரசய்யா என்ற பக்தர் மாரியம்மன் கோயிலைப் புதுப்பிக்க விரும்பி, உரிய அனுமதி பெற்று கோயிலைப் புதுப்பித்துக் கட்டினார்.

குடியிருப்புப் பகுதி இடம் பெயர்ந்ததும் கங்கை அம்மனுக்குத் தனிக்கோயில் இல்லை. கண்ணப்பன் என்பவரின் மகனான நடராசன், கங்கை அம்மனின் பஞ்சலோக சிலையை மட்டும் தன் வீட்டில் வைத்து பூஜித்து வந்தார். கங்கை அம்மனுக்கு நிலையாக ஒரு கோயில் கட்ட வேண்டும் என்று விரும்பியவர் அதற்கான அனுமதியை முறைப்படி பெற்று, கர்நாடக அரசிடம் கோயிலுக்கான இடத்தையும் வாங்கி, 74 அடி உயரத்தில் ராஜகோபுரமும், 27 அடி உயரத்தில் கருவறை விமானமும் கொண்டதாக ஒரு கோயில் கட்டினார்.

ஆலயத்தில் ஐந்தரை அடி உயரத்தில் ஸ்ரீகங்கை அம்மனின் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்தார். மேலும் நவகிரகங்கள், விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோருக்கும் தனித் தனிச் சந்நிதிகள் ஏற்படுத்தினார்.

கங்கை அம்மன் அருளும் இந்த ஆலயத்துக்குக் கர்நாடகத்தில் இருந்து மட்டுமல்லாமல், தமிழ்நாடு, ஆந்திரா போன்ற பிற மாநிலங்களில் இருந்தும் பக்தர்கள் வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்தில் வழங்கப்படும் மந்திர ரக்ஷை மிகவும் சக்தி வாய்ந்தது. இதைக் கையில் கட்டிக்கொண்டால், நோய்களும் விபத்துகளும் ஏற்படாமல் காக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

வேண்டுதலுக்காக ஆலயப் பிராகாரத்தில் தேங்காய் உருட்டு சேவை நடைபெறுகிறது. ராகுகாலத்தில் எலுமிச்சை பழத்தால் விளக்கேற்றியும் வேண்டிக்கொள்கிறார்கள். ஆண்டுதோறும் மே மாதம் 2-வது வாரத்தில் வரும் துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி ஆகிய மூன்று நாள்களில் கங்கை அம்மன் ஜாத்திரை விழா மிக விமர்சையாக நடைபெற்று வருகிறது.

“ கங்கை அம்மனை எவர் வேண்டுமானாலும் பூஜை செய்யலாம். நம்பிக்கையுடனும் ஆழ்ந்த பக்தியுடனும் வழிபடுபவர்களின் பாவங்களைப் போக்கி புண்ணியம் அருள்வாள். யுகயுகாந்தரங்களாக மகரிஷிகளும், முனிவர்களும், ஞானியர்களும் கங்கை அம்மனை வழிபட்டிருக்கிறார்கள். ”

● எஸ்.கண்ணன்கோபாலன்
● படங்கள்: மதன் சுந்தர்



பொருநைக் கரையில் புனித ஆலயங்கள்! 6



# உலகம்மை அருள் பெற்ற நமசிவாயர்!

காணக்கிடைத்தது நின் திருக்கோலம் என் கள்ளமனம்
பூணக் கிடைத்ததுன் பொன்மலர்த் தாள் உன்னைப் போற்றிச் செய்து
பேணக் கிடைத்தது உலகெனும் பேர்பெற்ற பேறுகண்டு
நாணக் கிடைத்ததொன்றம்மா வதையென்ன நான் சொல்வதே

-உலகம்மை அந்தாதி

பாபநாசம் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் சிவலிங்க மூர்த்தத்துக்கு முக்கிளாலிங்கம் என்றும் ஒரு பெயர் உண்டு. கருவறையில் ருத்திராட்ச வடிவிலும் பிராகாரத்தில் முக்கிளா மரத்தின் கீழும் எழுந்தருளியுள்ளார். ரிக், யஜுர், சாம வேதங்களே கிளா மரமாக மாறி இறைவனுக்கு நிழல் தந்ததாகவும், அதர்வண வேதம் ஆகாயத்திலிருந்து வழிபட்டதாகவும், அதனால் இறைவனின் சிவலிங்க வடிவத்துக்கு முக்கிளாலிங்கம் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் தலவரலாறு கூறுகிறது. பொதிகைமலையில் தோன்றி மலைப்பாறைகளுக்கிடையே வளைந்தும் நெளிந்தும் வரும் தாமிரபரணி இந்தத் தலத்தில்தான் சமநிலை அடைகிறது.

திருக்கடையூர் அபிராம பட்டருக்கு அன்னை அபிராமி அருள்புரிந்ததைப் போலவே



இந்தத் தலத்து இறைவி அன்னை உலகம்மையும் தன் பக்தனுக்காக ஓர் அருளாடல் நிகழ்த்தினாள்.

சொரிமுத்து ஐயனார் ஆலயத்திலிருந்து பாபநாசம் வரும் வழியில் விக்கிரமசிங்கபுரம். இந்த ஊரில் பிறந்தவர்தான் நமசிவாயர். கவி பாடுவதில் வல்லவரான நமசிவாயர், தினமும் ஆலயத்துக்குச் சென்று உலகம்மையை வழிபட்டு வருவது வழக்கம். எப்போதும் உலகம்மை பற்றிய சிந்தனையிலேயே திளைத்திருப்பார் நமசிவாயர்.

ஒருநாள் இரவு ஆலயத்துக்குச் சென்று உலகம்மையை வழிபட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பி வரும் போது உலகம்மையை புகழ்ந்து பாடிக்கொண்டே வந்தார். அவருடைய பாடல்களைக் கேட்டு மகிழத் திருவுள்ளம் கொண்ட அன்னை உலகம்மை, ஆலயத்தில் அர்ச்சகர் தனக்குச் செய்த அதே அலங்காரத்துடன் அவரைப் பின்தொடர்ந்து சென்றாள். கவிராயர் தாம்பூலம் போட்டுக்கொண் டிருந்தபடியால், அவர் பாடும்போது தாம்பூல எச்சில் தெறித்து உலகம்மையின் சேலையில் பட்டு விட்டது. தாம்பூல எச்சில் பட்ட அதே கோலத்துடன் அன்னை உலகம்மை ஆலயத்துக்கு எழுந்தருளிவிட்டாள்.

மறுநாள் காலையில் அம்பிகையின் கருவறையைத் திறந்து பார்த்த அர்ச்சகர், உலகம்மையின் சேலையில் தாம்பூல எச்சில் கறை இருப்பதைக் கண்டு



இந்தக் கோயிலில் தனிச் சந்நிதியில் அருளும் நடராஜப் பெருமான், புனுகு சபாபதி' என்று அழைக்கப்படுகிறார். இவருக்கு புனுகு காப்பு சாத்தப்பட்டே காட்சியளிப்பார். அருகில் சிவகாமசுந்தரி அம்மையும் அழகாக காட்சித்தருகிறாள். இங்கு வியாக்ரபாதர் மற்றும் பதஞ்சலி மகரிஷி ஆகியோருக்கு தைப்பூசத்தன்று இறைவன் திருநடன காட்சியளித்த தாகவும் கூறப்படுகிறது.

"ரிக், யஜுர், சாம வேதங்களே கிளா மரமாக மாறி இறைவனுக்கு நிழல் தந்ததாகவும், அதர்வண வேதம் ஆகாயத்திலிருந்து வழிபட்டதாகவும், அதனால் இறைவனின் சிவலிங்க வடிவத்துக்கு முக்கிளாலிங்கம் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் தலவரலாறு"

திடுக்கிட்டார். 'எவர் செய்த அபசாரமோ?' என்று பதைபதைத்தார். இந்த விவரம் அரசர் விஜயரங்க சொக்கநாதருக்குத் தெரிவிக்கப்பட்டது. மன்னர் மனம் மிகவும் வருந்தினார். எவர் இந்த அபசாரத்தைச் செய்திருக்கக்கூடும் என்று நாளெல்லாம் சிந்தித்துக் கொண்டே இருந்தவர், அந்தக் களைப்பிலேயே உறங்கியும் விட்டார்.

அன்றிரவு அரசரின் கனவில் தோன்றிய உலகம்மை, 'விஜயரங்க சொக்கநாதா, நான்தான் உலகம்மை. என் மீது கொண்ட பக்தியில் தோன்றிய நமசிவாயரின் பாடலுக்கு வசப்பட்டு, அவனுக்குத் தெரியாமல் பின் தொடர்ந்து சென்றேன். என்னுடைய கவனக் குறைவால்தான் அவன் துப்பிய தாம்பூல எச்சில் என் மீது பட்டது. அவனைவிடச் சிறந்த பக்தன் எவருமில்லை. எனவே, அவனுக்கு உரிய மரியாதைகளைச் செய்து கௌர விப்பதுடன், மிகுந்த பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பு' என்றாள். அம்பிகை தன் கனவில் தோன்றி உண்மையைச் சொல்லி விட்டாலும், நமசிவாயரின் பக்தியின் சிறப்பை ஊரார் அறியச் செய்யவேண்டும் என்று விரும்பிய அரசர், மறுநாள் காலையில் கோயிலுக்கு அழைத்து வரச் செய்தார்.

'தாங்கள் அம்பிகையின் தீவிரமான பக்தர் என்பது சத்தியமானால், இதோ உலகம்மையின் கரத்திலிருக்கும் தங்கப் பூச்செண்டு, தாங்கள் பாடப் பாட பூச்செண்டில் உள்ள தங்கக் கயிறுகள் அறுந்து, அந்தப் பூச்செண்டு தானாக தங்கள் கையில் வந்து விழவேண்டும்' என்று கூறினார். அரசரின் உள்ளக்குறிப்பை அறிந்துகொண்ட நமசிவாய கவிராயர், உலகம்மையின் மீது அந்தாதி பாடத் தொடங்கினார். ஒவ்வொரு பாடலாகப் பாடப் பாட அம்பிகையின் கையிலிருந்த பூச்செண்டின் தங்கக் கயிறுகள் ஒவ்வொன்றாக அறுந்துகொண்டே வந்தன.

'விண்டல நின்ற சரற்கால சந்திர சுவேதமுக
மண்டலமும் கையில் மலரொடும் தோளில் வழிந்த ரத்ன
குண்டலமும் பொலி வாலப் பிராய குமாரத்தியாய்
செண்டலர் செங்கை உலகாள் என் நாவில் சிறந்தவளே'

என்னும் பாடலை பாடி முடித்த சமயம் 'பட... பட' வென்று அனைத்து தங்க நாரும் அறுந்து, தங்கப் பூச்செண்டு தேவியின் கையிலிருந்து நமசிவாயர் கரத்திற்கு தாவி வந்தது. இப்படி பக்தனுக்காக அருளாடல் நிகழ்த்திய உலகம்மை எழுந்தருளியுள்ள ஆலயத்தில் இன்னும் எத்தனையோ சிலிர்ப்பூட்டும் நிகழ்வுகள் இருக்கவே செய்கின்றன.

அவற்றுள் ஒன்று...

-அடுத்த இதழில்

Registered with Registrar of Newspapers for India
No. 42582/83 Licensed to post without Pre-payment
under Regn.No. TN/WR/CBE/016/WPP/2021-23
Regd. No. : CB/016/2021-23
Date of Publication : 28th Every Month

OM SAKTHI - NOVEMBER - 2021